# தேசம்

சர்வதேச தமிழ் சஞ்சிகை

தேசம் □ இதழ் 23 □ மே 05 - யூலை 05 □ ISSN 1474 - 8770




## தமிழ் இளைஞர் குத்திக் கொலை

## அமெரிக்காவின் அடுத்த இலக்கு




## தமிழீழக் கோரிக்கையும் அதன் பலவீனங்களும்





# பொதுக் கட்டமைப்பு

1. ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவையின் 16வது ஆண்டு விழாவும் பரிசளிப்பும் யூன் 18ல் டோர்ட்முண்டில் நடைபெற்றது. ஜேர்மனியில் ஸ்ரீ ஜீவகனின் முயற்சியில் 12 பள்ளிகளுடன் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ்க் கல்விச்சேவை இன்று 40 பள்ளிகளாக வளர்ந்துள்ளது. விழாவின் பிரதம அதிதி நூலகவியலர் என். செல்வராஜா, 2ம் தலைமுறைச் சிறார்கள் ஐரோப்பிய நூலகங்களிலும், ஆவண காப்பகங்களிலுமுள்ள வரலாற்று ஆதாரங்களை ஆராய்ந்து எம் இனத்தின் மறைக்கப்பட்ட வரலாற்றை எழுத வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.




2. காலம்சென்ற இலக்கியவாதி கலைச்செல்வனின் (இடம்) நினைவாக 'வார்த்தைகளற்ற உலகு' என்ற ஒளிஓவியக் கண்காட்சி பரிசில் ஏப் 17ல் நிகழ்ந்தது. பிரான்ஸ் 'நண்பர்கள் வட்டம்' இதனை ஏற்பாடு செய்திருந்தது. தமயந்தி (வலம்) என்ற கவிஞனின் தேடலோடும் கற்பனையோடும் உள்ளுணர்வின் வெளிப்பாடுகளோடும் கூடிய ஓவியங்களாக கணனியின் துணையால் புதிய பரிமாணங்களையும் வடிவங்களையும் வண்ணங்களையும் கொண்ட 100 ஒளி ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டது.





3. மானிப்பாய் இந்துக் கல்லூரி ப.மா சங்கத்தின் பொங்கும் பொழுது, 05 மே 29ல் கி.லண்டனில் இடம்பெற்றது. கல்லூரி வளர்ச்சிக்காக நடத்தப்படும் இக்கலை நிகழ்வில் இம்முறை £2,500 வரை கல்லூரிக்கு அனுப்பப்படும் என சங்கத்தின் தலைவர் ரவீந்திரமோகன் தெரிவித்தார். பொங்கும் பொழுது, 06 நிகழ்விற்கு முன் பிரிந்துள்ள ப.மா சங்கங்கள் ஒன்றிணையும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். மாதினி சிறீஸ் கந்தராஜா, சொ கருணலிங்கம் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டனர்.




4. 'குடும்பமும் கலாச்சார வாழ்வும்' கருத்தரங்கும் கலைநிகழ்ச்சியும் குரொய்டன் தமிழ் நல்வாழ்வுச் சங்கம், தெ.லண்டன் தமிழர் நலன்நிறையமைப்பு, சிவகுமார் தமிழ் பள்ளி ஆகியவற்றின் கூட்டால் யூன் 11ல் இடம்பெற்றது. சிறப்பு சொற்பொழிவாற்றிய அருட்தந்தை ராஜாமணி, குடும்பமே சமூகத்தின் மூலக் கரு, நல்ல சமூகம் குடும்பத்தில் இருந்து உருவாகிறது என்றார். சிவகுமார் பள்ளி மாணவர்கள் கலை நிகழ்ச்சிகளை வழங்கினர். ஜோசப் டி. ஜெயம் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.



உள்ளே :

01 தேசத்தின் பார்வை
02 ஜேவிபி இடதுசாரிகளா ? இனவாதிகளா ?
06 பாதிக்கப்பட்ட சமூகம் ஓரங்கட்டப்பட்டது
07 எமது உரிமையும் பாதுகாப்பும் பறிக்கப்பட்டுள்ளது
08 ஈரான் : அமெரிக்காவின் அடுத்த இலக்கு
12 தமிழீழக் கோரிக்கையும் அதன் பலவீனங்களும்
15 ஆவணப்பட ஆய்வு ~ NO MORE TEARS SISTERS
18 துடைப்பானின் சுவரொட்டி
19 கம்பவாருதி ஜெயராஜ்
20 விடுதலை போராட்டத்தின் மொத்த வியாபாரிகள்
23 மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப்புரட்சி
27 எதிர்முனை
30 படைப்புகளினூடாக வாழும் மனித நேயன்
31 சிறுவர் தேசம் ( இடமின்மை காரணமாக பக்கங்கள் குறைக்கப்பட்டுள்ளது. )

Chief Editor
T Jeyabalan
0044 208 279 0354
thesam97@hotmail.com
Administrative Editor
T Constantine
0044 791 944 4994
Siruvar Thesam : S Gauthaman
Editorial Board
Technical Support : S Raja
Type Setting : J Srirajani

THESAM
P O Box 35806,
London, UK,
E11 3JX.

# 'கோல்' போடுவாரா பிரபா !

பாண்டவர்கள் அரசு கேட்டு, ஊர்கேட்டு வீடு கேட்டு எல்லாம் மறுக்கப்பட்ட நிலையில் பாரதப்போர் மூண்டது. தனிநாடு கேட்டு போர்தொடுத்த வி.புலிகள் சுயாட்சி (ISGA) கேட்டு இறுதியில் சுனாமி நிவாரணம் வழங்கப்பட்டு இருக்கிறது. அமைச்சுச் செயலகத்தின் கீழ் உருவாக்கப்பட்டு உள்ள இப்பொதுக் கட்டமைப்பு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மானத்துக்காக அமைக்கப்பட்ட சிரான் போன்ற ஒரு அமைப்பே. இவ்வமைப்பு வி.புலிகளுக்கு சட்ட அங்கீகாரத்தை வழங்குகிறது என்பது பொதுவான அபிப்பிராயம். ஆனால் பொதுக் கட்டமைப்பிற்கு முன்னரே வி.புலிகள் மீதான தடையை இலங்கை அரசு நீக்கிவிட்டது. அரசின் முழு ஒத்துழைப்புடன் வி.புலிகள் சர்வதேச நாடுகளுக்கும் பயணம் செய்கின்றனர். பேச்சுவார்த்தை நடத்துகின்றனர்.

ஆனால் பொதுக் கட்டமைப்பில் என்ன கிடைக்கின்றதோ இல்லையோ; சுனாமியால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட முஸ்லீம்களும் ஒரு தரப்பாக கையெழுத்திடுவதை புலிகள் உறுதிப்படுத்தத் தவறியுள்ளனர். இப்பொதுக் கட்டமைப்பில் முஸ்லீம்கள் புறக்கணிக்கப்பட்டதற்கு அரசும் வி.புலிகளும் சம பொறுப்புடையவர்கள். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் குறிப்பாக பெருமளவு பாதிக்கப்பட்ட முஸ்லீம் மக்களின் புனர்நிர்மானம், மீள்கட்டுமான நடவடிக்கைகளுக்கு வி.புலிகள் பொறுப்பு உடையவர்களாகிறார்கள். இதனை அம்மக்களின் ஒத்துழைப்புடன் பாரபட்சமின்றி செய்து முடிக்காவிட்டால்; தமிழ் - முஸ்லீம் சமூகங்களுக்கிடையேயான பகைமை கூர்மையடைந்து மோசமான விளைவுகளை ஏற்படுத்தும்.

சிரான் போன்ற ஒரு வெற்றுக் கட்டமைப்பைப் பெற்று மக்களின் வெறுப்பை சம்பாதிக்க வேண்டிய நிலைக்கு வி.புலிகள் தள்ளப்படும் அபாயமும் இப்பொதுக் கட்டமைப்பு மூலம் ஏற்பட்டு உள்ளது. இப்போது சந்திரிகா பந்தை பிரபாவின் பக்கம் தட்டிவிட்டுள்ளார். பிரபாவின் ஆட்டத் திறமையில் தான் (துப்பாக்கிகளால் அல்ல) சக சமூகங்களையும் தமது கோரிக்கைக்கு ஆதரவாக வென்றெடுக்க முடியுமா என்பது தங்கியுள்ளது.

# கொல்வதும் கொல்லப்படுவதும்

கொல்வதும் கொல்லப்படுவதும் இலங்கைத் தமிழர்களின் குறிப்பாக மட்டக்களப்புத் தமிழர்களின் நாளாந்த வாழ்க்கையாகிவிட்டது. படுகொலைகளை இப்பகுதியில் பலமுறை கண்டித்திருந்தோம். ஆனால் அவை அர்த்தமற்றவையாகின்றன. மாறாக படுகொலைகள் ரொக்கட் வேகத்தில் அதிகரிக்கிறது. எந்த மண்ணின் விடுதலைக்காக தமிழ் மக்கள் போராட ஆரம்பித்தார்களோ இன்று அதே மண்ணுள் அவர்களின் உயிரற்ற உடல்கள் புதைக்கப்படுகின்றன.

ஆனால் சம்பந்தப்பட்டவர்கள் மக்களின் நலன்பற்றி எந்த அக்கறையையும் காட்டுவதாக இல்லை. ஒடுக்குமுறையாளனிடம் இருந்து அதிகாரத்தை வென்றெடுக்க பயன்படுத்த வேண்டிய துப்பாக்கிகள் இன்று சொந்த சகோதரர்களுக்கு எதிராகத் திரும்பி உள்ளது. மக்களை துப்பாக்கி முனையில் வென்றெடுத்ததாக வரலாறில்லை. அப்படி ஒரு வரலாறு இனி உருவாகப் போவதுமில்லை. ஆனால் ஒடுக்கப்படும் சொந்த மக்களுக்கு எதிராகவே ஆயுதங்களைத் திருப்பியவர்கள் தூக்கி எறியப்பட்டுள்ளனர். காணமல் போயுள்ளனர். இதுவே வரலாறு.

தனிமனித படுகொலைகள் எந்த ஒரு பிரச்சினைக்கும் தீர்வாகாது. அவை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இவ்வகையான நாளாந்த படுகொலைகள் இன்று போராட்டத்துக்கு அப்பால், தாயகத்திலும் கடல்கடந்தும் தனி மனித கோபதாபங்களை தீர்க்கவும் பயன்படுத்தப்படுகிறது. எமது போராட்டம் எமது அரசியல் உரிமைகளை வென்று தருகிறதோ இல்லையோ ஆனால் கொலைகள் போன்ற பல தவறான போக்குகள், எமது சமூக மதிப்பீட்டை பாதித்துள்ளதுடன் இளைய சமூகத்தினருக்கு தவறான முன்னுதாரணமாகி உள்ளது.

எஸ் பாலச்சந்திரன்

# இலங்கை அரசியலில் ஜேவிபி

# இனவாதிகளா? இடதுசாரிகளா?

JVP என்னும் மக்கள் விடுதலை முன்னணியினர் இன்று தென்னிலங்கையில் மூன்றாவது அரசியல் சக்தியாக தங்களை மிகவும் குறுகிய காலத்தினுள் வளர்த்தெடுத்துள்ளனர். பொதுக்கட்டமைப்பு தொடர்பாக தமது எதிர்ப்பைத் தெரிவித்து அரசில் இருந்து விலகி எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து அரசியலில் தாம் ஒரு தீர்மானகரமான சக்தி என்று வெளிப்படுத்தியுள்ளனர். இதுவரை UNP மற்றும் PA குறித்து மட்டுமே கவனத்தை செலுத்திவந்த தமிழ்த் தரப்பினர் முதன் முதலாக JVP குறித்து தங்கள் கருத்துக்களை தெரிவிக்கத் தொடங்கியுள்ளனர். தன்னைத்தானே புரட்சிகர கட்சியாக கூறிக்கொள்ளும் JVP யினர் புரட்சிக்கு மிகவும் அடிப்படையான அத்தியாவசியமான தமிழ், சிங்கள மக்களின் ஐக்கியத்திற்கு அவசியமான இனப்பிரச்சனை குறித்தான தெளிவான விளக்கத்தை தமிழ்மக்கள் முன் வைக்கத் தவறியதால் இனவாதக்கட்சி என்ற பட்டத்தை தமிழ் மக்களிடமிருந்து பெற்றுள்ளனர். எனினும் தமிழ்த் தேசியவாதியான ஊடகவியலாளர் சிவராம் கூட தனது கடைசிக் கட்டுரையில் விடுதலைப் புலிகள் JVP யின் வேலைத்திட்டங்களில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டும் என்று சுட்டிக்காட்டினார். அந்தளவுக்கு அவர்களின் வேலைத் திட்டங்கள், மார்க்சிய - லெனினியத்தை முன்னிறுத்திய பிரச்சாரம், ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டம், கஸ்டப் பட்ட ஏழை எளிய மக்களை கட்சியினுள் வென்றெடுத்தல் மற்றும் இறுக்கமான கட்டமைப்பு போன்றவை தமிழ்மக்கள் மத்தியிலும் சிலரின் கவனத்தை ஈர்த்துள்ளது.

JVP கட்சியானது அதன் தலைவர் காலம் சென்ற றோகண விஜவீர அவர்களினால் ஸ்தாபிக்கப்பட்டது. மிகவும் குறுகிய காலத்திற்குள் இரண்டு தடைவை கிளர்ச்சிகளை நடத்தி தமது தலைவர் உட்பட சுமார் அறுபதினாயிரத்திற்கும் அதிகமான தொண்டர்களை இழந்த பின்பும் கூட இன்றும் ஒரு பாரிய வளர்ச்சியினைப் பெற்ற கட்சியாக இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இது சிங்கள மக்கள் மத்தியில் அவர்களுக்கு உள்ள செல்வாக்கினை எடுத்துக் காட்டுவதாக இருப்பினும் தமிழ் மக்கள் மத்தியிலான அவர்களுடைய வளர்ச்சி என்பது அன்றும் சரி இன்றும் சரி பூச்சிய நிலையிலேயே இருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

JVP கட்சி குறித்து இலங்கை கம்யுனிஸ்ட் கட்சியின் தலைவரான காலம் சென்ற சண்முகதாசன் அவர்களின் கருத்துக்கள் வருமாறு. இக் கருத்துக்களை அவர் 1989ம் ஆண்டளவில் தனது "ஒரு கம்யுனிசப் போராளியின் அரசியல் நினைவுகள்" என்னும் நூலில் தெரிவித்துள்ளார்.



JVP இயக்கத்தின் தலைவர் ரோகண விஜயவீர மொஸ்கோ லூமும்பாப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவன். இலங்கையில் மார்க்சிய - லெனினியவாதிகளின் அணிகளில் சேர்ந்து கொள்ள துணைபுரியும் முகமாக சீனசார்புக் கருத்துக்கள் உடையவன் என்ற சோவியத் எதிர்ப்பு சேர்ட்டிபிக்கேட் அவருக்கு கொடுக்கப்பட்டது. இதில் நாம் ஏமாற்றப்பட்டோம் என்பதில் சந்தேகம் இல்லை. நாடு திரும்பியதும் அவர் முதலில் தொடர்பு வைத்தவர்களில் நானும் ஒருவன். சோவியத் தூதரகம் அவர் ரஷ்சியா திரும்பிச் செல்ல விசா வழங்க மறுத்தபடியால் தன்னால் பாவிக்க முடியாமல் இருந்த விமான டிக்கெட்டை அவர் என்னிடம் காட்டினார். சீனாவில் தனது படிப்பை முடிக்கும் சாத்தியப்பாடு பற்றிக்கூட அவர் என்னுடன் உரையாடினார். ஆனால் பிந்திய உரையாடல்களில் அவர் இதனை ஒருபோதும் நெருக்கிக் கேட்டதில்லை. அவரைக் கட்சியில் சேர்க்காமல் இருக்க காரணம் இருக்கவில்லை. படிப்படியாக அவர் எமது கட்சியின் வாலிபர் பிரிவுத் தலைவரானார். இந்தப் பதவியைப் பயன்படுத்தி கட்சியின் இளம் உறுப்பினர்களை வென்றெடுத்து கட்சியின் தலைமையைக் கைப்பற்ற அவர் முயற்சித்தார் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் வெற்றி காணவில்லை. பின்னர் கட்சிக்குள்ளே போதிய சீர்குலைவு வேலையை செய்த பின்னர் கட்சியை விட்டுவிலகி புதியகட்சி ஒன்றை அமைத்தார்.

இலங்கையில் மாசேதுங் சிந்தனையின் செல்வாக்கு வளர்வதைத் எதிர்க்கவும் சோவியத் திரிபுவாதிகள் மற்றும் பிற்போக்குவாதிகளின் உதவியுடன் இலங்கையில் உள்ள அவர்களின் ஏஜண்டுகளும் இந்த JVP இயக்கத்தை உருவாக்கினார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. காலாவதியான ட்ரொக்சிய தத்துவத்தைக் கொண்டோ சமாதான சகவாழ்வு, பாராளுமன்றத்தின் மூலம் சோஷலிசத்திற்கு சமாதான மாற்றம் ஆகிய திரிபுவாத தத்துவங்களைக் கொண்டோ புரட்சிகர மாசேதுங் சிந்தனைத் தத்துவத்தை அவர்களால் எதிர்க்க முடியவில்லை. ஆகவே அவர்கள் சேகுவாரா என்ற நாமத்துடன் மார்க்சிய - லெனினிய விரோத போலித்



தத்துவங்களை தமது சேவைக்கு அமர்த்தினார்கள். இத்தத்துவம் மார்க்சிய - லெனிய மாசேதுங் சிந்தனையின் அடிப்படையில் அமைந்த புரட்சிகரகட்சி ஒன்றின் அவசியத்தையும் பரந்து பட்ட மக்கள் கலந்து கொள்வதன் அவசியத் தையும் மறுதலித்தது.

JVPயின் போராட்டம் தனிநபர்வாதப் போக்கையும் பாட்டாளி வர்க்கத்துடன் சேருவதில் சந்தேகத்தையும் பிரதிபலிக்கும் குட்டி முதலாளி வர்க்கம் மிகுதியும் விரும்பும் போராட்டம் இது. 1929 லேயே தோழர் மாசேதுங் அவர்கள் "சுற்றி அலையும் கிளர்ச்சிக்காரக் குழுவின் சித்தாந்தம்" என்று அழைத்த குட்டி முதலாளித்துவ வர்க்க சித்தாந்தம் இது. பொது மக்களை முற்றிலும் சார்ந்திருப்பதை அடிப்ப டையாகக் கொண்ட தோழர் மாசேதுங் அவர்களின் மக்கள் யுத்த தத்துவத்திற்கும் இதற்கும் எவ்வித தொடர்புமில்லை. ஏறக்குறைய பொதுமக்கள் முற்றிலும் ஆதரிக்காமல் விட்ட தும் ஸ்தாபன ரீதியாக திரண்ட தொழிலாளி வர்க்கத்திடம் இருந்து முற்றிலும் தனிமைப்பட்டிருந்ததும் JVP கிளர்ச்சியின் குறிப்பிடத்தக்க இயல்புகளில் ஒன்றாகும்.

JVP கட்சியில் ஐந்து விரிவுரைகள்தான் உறுப்பினர்க ளுக்கு அளிக்கப்பட்ட சித்தாந்த போதனையாகும். அதற்கு மேலே செல்ல அவர்களுக்கு ஊக்கம் அளிக்கப்படவில்லை. இந்திய வம்சாவளித் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான பச்சை பச்சையான வகுப்புவாதம் புரட்சிகர வார்த்தை ஜாலத்தால் அலங்கரிக்கப்பட்டு மார்க்சிய - லெனினியம் என வழங்கப்பட்டது. JVP நடத்திய வகுப்புவாத பிரச்சாரம் பற்றி சந்தேகத்திற்கு இடமில்லை. இந்திய வம்சாவளித் தோட்டத்தொழிலாளர்கள் இந்திய விஸ்தரிப்புவாதிகளின் பகடைக் காய்கள் என்று அவர்களுடைய ஐந்தாவது விரிவுரை கூறியது. JVP கட்சித் தலைவர்களில் தமிழர்கள் இல்லாததற்கும் தமிழ் பிரதேசங்களில் அவர்களின் செல்வாக்கு ஏற்படாததற்கும் இது ஒரு காரணமாகும்.

JVP யின் நடவடிக்கைகள் குறித்து CID பொலிசாரின் அறிக்கைகள் முந்திய டட்லி சேனநாயக்கா அரசிடமும் பின்னர் ஐக்கிய முன்னனி அரசிடமும் கையளிக்கப்பட்டது. ஏன் இந்த இரண்டு அரசுகளும் இது குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது எங்களுக்கு ஒரு போதும் தெரியவராது போனாலும் முதலாளித்துவப் பத்திரி கைகள் JVP க்கு அளித்த ஆதரவும் புரிந்துகொள்ள முடியாதது. முதலாளித்துவப் பத்திரிகைகள் தினமும் JVP பற்றிய செய்திகளை தாங்கி வந்தன. இலங்கையில் வேறெந்த இயக்கமும் இத்தகைய பிரச்சார ஆதரவைப் பெறவில்லை. டி.எஸ்.சேனநாயக்கா, எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கா ஆகியோருக்கு அடுத்தபடியாக விஜயவீரா என்று கூறும் கட்டுரை ஒன்றை டெயிலி நியூஸ் பத்திரிகை அதன் நடுப்பக்கத்தில் வெளியிட்டது. இவை அனைத்தும் தற்செயல் சம்பவங்களாக இருக்க முடியாது.

JVP இயக்கம் வளர்வதற்கான குறிப்பாக மாணவர்கள் இளைஞர்கள் மத்தியில் வளர்வதற்கான காரணங்களை நாம் ஆராயவேண்டும். அவையாவன ,

1. இளைஞர்கள் மத்தியில் காணப்பட்ட புரட்சிகர மாற்றத்திற்கான உண்மை விருப்பம்.
2. ட்ரொக்சியவாதிகளும் நவீன திரிபுவாதிகளும் இழைத்த துரோகம். இதனால் இளைஞர்கள் அவர்கள்பால் கொண்ட வெறுப்பு.
3. முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகத்தில் நம்பிக்கை இன்மை.
4. ஐக்கிய முன்னனி அரசாங்கம் அதன் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறியமை.
5. முதலாளித்துவப் பத்திரிகைகள் JVP க்கு அளித்த ஆதரவு.
6. ஏதோ மர்மமான இடங்களில் இருந்து எல்லையற்ற நிதி உதவி கிடைத்தமை.
7. மார்க்சிய - லெனினியவாதிகளின் குறைபாடுகள்.

அடுத்து பிரான்சில் இருந்து வெளிவரும் 'சமர்' பத்திரி கையின் ஆசிரியர் ராயகரன் அவர்களின் JVP பற்றிய கருத்துக்கள் வருமாறு. Tamil circle என்னும் வலைத்தளத் தில் இருந்து இக்கருத்துக்கள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும் விபரம் அறிய விரும்புவோர் www.tamilcircle.net என்னும் வலைத்தளத்தை அணுகவும்.

*"JVP சிங்கள பேரினவாதிகளே ஒழிய, சர்வதேசியத்தை முன்னெடுக்கும் ஒரு பாட்டாளி வர்க்க கட்சியல்ல.*

1993களில் ஜே.வி.பியின் இன்றைய தலைவரை நான் பிரான்சில் சந்தித்த போது, தமிழ் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையையே மறுத்தலித்தார். அவர் லெனினின் தேசியஇன சுயநிர்ணயக் கோட்பாடு, இலங்கைக்கு பொருந்தாது என்றார். ஏன் பொருந்தாது என்று கேட்டால், அதற்கு இந்த மார்க்சிய பொருளாதார கோட் பாட்டாளரிடம் எந்தப் பதிலும் இல்லை. இதையே தமது அரசியல் கோட்பாடாக வரிந்ததுடன், இனவாதிகளாகவே தம்மை அரசியல் மயப்படுத்தியவர்கள் இவர்கள்.

மார்க்சிய அடிப்படையில் இருந்து இவர்கள் எதையும் மக்களுக்காக கற்றுக் கொடுப்பதில்லை. அவர்கள் விளம்பரத்துக்காக கொண்டு செல்லும் மார்க்சிய தலைவர்களின் முரணற்ற அரசியலை, ஆணையில் வைக்க வேண்டும். ஆனால் ஜே.வி.பி பச்சை இனவாதத்தையே அதற்கு பதிலாக முன்வைக்கின்றனர். எப்படி என்று நாம் தெரிந்துகொள்ள, அவர்கள் படமாக மட்டும் விளம்பரம் செய்யும் லெனின், என்ன சொன்னார் என்பதில் இருந்து தெரிந்து கொள்ளமுடியும்.

*"ஒடுக்கும் நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்க ளைச் சர்வதேசியவாத உணர்வில் பயிற்றுவிக்கும் பொழுது, ஒடுக்கப்படும் மக்களுக்குப் பிரிந்து போகும் சுதந்திரமளிக்க வேண்டும் என்பதை*

*அவர்கள் ஆதரித்து, அதற்காகப் போராட வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும். இது இல்லாமல் சர்வதேசியவாதம் என்பது இருக்க முடியாது. ஒடுக்கும் தேசிய இனத்தைச் சேர்ந்த சமூக-ஜனநாயகவாதி அத்தகைய பிரச்சாரத்தைச் செய்யத் தவறினால் அவ்வாறு தவறியவர் ஒவ்வொருவரையும் ஏகாதிபத்தியவாதி என்றும் கயவர் என்றும் கருதுவது நமது உரிமையும் கடமையுமாகும்"* இதைத் தெளிவாகவே ஜே.வி.பி. க்கு எதிராக லெனின் கூறிவிடுகின்றார்.

ஜே.வி.பி க்கு எந்தவிதத்திலும் இது விதிவிலக்கல்ல. ஜே.வி.பி. ஒரு சிங்களப் பேரினவாதிகள் தான் என்பதையும், அவர்கள் ஏகாதிபத்தியத்துக்கு துணைபோகும் கயவர்கள் தான் என்பதையும் லெனினே கூறிவிடுகின்றார். அதாவது இவர்கள் சிறுபான்மை இனத்தை ஒடுக்கும் கயவர்கள் தான். ஏகாதிபத்திய நோக்கத்துக்கு துணைபோபவர்கள் தான். இதற்கு யாரும் ஒளிவட்டம் கட்டி கொச்சையாக விளக்கம் தரமுடியாது."

தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்ள மறுக்கும் ஜே.வி.பி அடிப்படையில் ஒரு சிங்கள பேரினவாதத்தின் கட்சியாகவே உள்ளனர். தமிழ் மக்கள் மத்தியில் முரணற்ற வகையில் செயல்பட முடியாத ஒரு இனவாதக் கட்சி தான் ஜே.வி.பி. சிங்கள மக்கள் மத்தியில் பிரிவினையை முன்வைத்தும், தமிழ் மக்கள் மத்தியில் ஐக்கியத்தை வலியுறுத்தி கிளர்ச்சி பிரச்சாரத்தை செய்ய முடியாத கட்சி, ஒரு சர்வதேசியக் கட்சியல்ல. மாறாக பேரினவாதத்தினை சுற்றிவளைத்து பிரச்சாரம் செய்யும், ஒரு பச்சை இனவாதக் கட்சி தான். காலகாலமாக தமிழ் மக்களை ஒடுக்கியே வளர்ச்சியுற்ற பேரினவாத இனவாதக் கட்சியுடன், கூட்டுச் சேர்ந்து இனவாதத்தை ஒழிக்கும் பொருளாதார அரசியலை நடத்துகின்றனராம்.. தமிழ் மக்களை ஒடுக்கி உருவான ஒரு சமூக பொருளாதார கட்டமைப்பை பாதுகாக்கும் அரசு இயந்திரத்தில் இருந்த படி, பொருளாதார விடுதலையைப் பற்றியும், அதனூடாக தமிழ் மக்களின் விடுதலைக்கு வழிகாட்டுவதாக கூறுவது அரசியல் சூழ்ச்சியாகும்.

ஜே.வி.பி. கூட்டுச் சேர்ந்து உருவாக்கிய இந்த அரசு இயந்திரமே, சிங்கள பேரினவாதத்திலானது. இந்த அரச இயந்திரம் சிங்கள பேரினவாதமாக உள்ள நிலையில், அதன் உறுப்பாக அதன் சூழ்ச்சிமிக்க நடவடிக்கையில் இணைந்து நிற்கின்றது ஜே.வி.பி. தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சனையை பேரினவாத நோக்கில் இருந்தே அணுகுகின்றது. குறைந்தபட்சம் பாட்டாளிவர்க்கத்துக்கு துரோகமிழைத்து சீரழிந்துள்ள போலி கம்யூனிஸ்ட் கட்சி அளவுக்குக் கூட, முற்போக்காக செயல்பட முடியாத அளவுக்கு ஜே.வி.பி இனவாத அரசியலையே முன்வைக்கின்றனர். இங்கு ஜே.வி.பி. பாட்டாளி வர்க்க கட்சியாகக் கூட இருக்க வேண்டாம், குறைந்தபட்சம் முரணற்ற முதலாளித்துவ பூர்சுவாக் கட்சியாகக் கூட இல்லை. ஒரு தேசிய பூர்சுவாக் கட்சி எடுக்க வேண்டிய அரசியல் நிலைப்பாட்டைக் கூட ஜே.வி.பி. எடுக்கவில்லை. மாறாக உலகமயமாதல் என்ற கட்டமைப்பின் எல்லைக்குள், தாளம் போடும் ஒரு இனவாதக் கட்சியாகவே ஜே.வி.பி உள்ளது.

புலிகளை ஒடுக்க இந்தியாவுடன் கூட சேர்ந்து கொள்ளும் சமிக்கைகளைக் கூட அப்பட்டமாகவே விடுகின்றனர். சுனாமியின் பெயரில் அமெரிக்கா உள்ளிட்ட படைகள் நாட்டில் இறங்க கம்பளம் விரித்து விட்டவர்களே இவர்கள் தான். அன்று வந்த அமெரிக்கா இராணுவம் மீண்டும் செல்லாது இலங்கையில் தங்கி நிற்பதற்கு துணையாக இருப்பவர்கள் இவர்கள் தான். புலிக்கு எதிராக யாரெல்லாம் எதைச் செய்கின்றனரோ, அவற்றை விசுவாசமாக வாலாட்டி ஆதரிக்கின்றனர். புலிக்கு ஆதரவான அனைத்தையும் எதிர்க்கின்றனர். இதை யாரும் எவரும் மறுக்க முடியாது. அரசின் பங்காளிகள் என்ற வகையில், தமிழ் மக்களுக்கு எதிரான அனைத்தையும் ஆதரிப்பதும், தமிழ் மக்களுக்கு சாதகமான அனைத்தையும் எதிர்ப்பதும் ஜே.வி.பி.யின் சமகால அரசியல். ஜே.வி.பி யின் நவீன பொருளாதார விளக்கம் இதைத்தான் செய்கின்றது."

மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக JVP கட்சியின் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரன் (படம்) கேட்டபோது அவரளித்த பதில்கள் வருமாறு:



"முதலாவதாக JVP இனவாதக்கட்சி என்கின்றனர். அவர்களுக்கு நான் ஒன்றை கூறிக்கொள்கிறேன். JVP என்றுமே இனவாதக் கட்சியாக இருந்ததில்லை. அது ஒரு தமிழனின் நிழலுக்குக்கூட இதுவரை தீங்கிழைத்ததில்லை. மாறாக பல தமிழ் மக்களை அது காப்பாற்றியிருக்கின்றது. மேலும் பல வருடங்களாக தமிழ் மக்களை கொன்றுகுவித்து வந்த UNP கட்சியும் அதன் தலைவர் ரனில் விக்கிரமசிங்காவும் நல்லவர்களாக தெரியும் தமிழர் விடுதலைக் கூட்டமைப்பினரின் கண்களுக்கு JVP இனவாதக் கட்சியாக தெரிவதில் வியப்பு ஏதும் இல்லை.

இரண்டாவதாக JVP பொதுக்கட்டமைப்பை எதிர்க்கின்றது என்கின்றனர். ஆம் உண்மைதான். நாங்கள் தமிழர்களுக்கு பொதுக்கட்டமைப்பு வழங்குவதை ஒருபோதும் எதிர்க்கவில்லை. மாறாக புலிகளிடம் மட்டும் பொதுக்கட்டமைப்பு வழங்கப்படுவதையே நாம் எதிர்க்கின்றோம். ஏனெனில்

புலிகள் பாசிசவாதிகள். இந்த யுத்த நிறுத்த காலத்தில் அவர்கள் மாற்றுக்கட்சியினர் ஊடகவியலாளர்கள் மனித உரிமைவாதிகள் எனப்பலரையும் கொன்று குவித்துள்ளனர். அவர்களுக்கு சமாதனத்தில் எந்த நம்பிக்கையும் இல்லை. எனவே அவர்களிடம் பொதுக்கட்டமைப்பை வழங்கினால் அதன்மூலம் அவர்கள் இன்னும் தங்களைப் பலப்படுத்தி மேலும் தமிழ் மக்களை கொன்று குவிப்பார்கள். தமிழ் மக்கள் மீது JVPக்கு உண்மையான அக்கறை இருப்பதால் தான் அது புலிகளிடம் பொதுக்கட்டமைப்பு வழங்கப்படு வதை எதிர்க்கின்றது. மேலும் புலிகளிடம் பொதுக்கட்ட மைப்பை வழங்கவேண்டும் என்று இந்த தள்ளாத வயதிலும் ஒற்றைக்காலில் நிற்கும் தவிகூ தலைவர் சம்பந்தன் ஐயா அவர்களிடம் நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். " உங்கள் தலைவர் அமிர்தலிங்கம் மற்றும் யோகேஸ்வரன், சரோஜினி யோகேஸ்வரன், நீலன் திருச்செல்வம் உட்பட பலரைக் கொன்றது இதே புலிகள் தானே ஐயா?. நாளை இவர்கள் உங்களைக் கொல்லமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்? அல்லது இவர்கள் திருந்திவிட்டார்கள். இனிமேல் எவரையும் கொல்லமாட்டார்கள் என்று உங்களால் உத்தரவாதம் அளிக்க முடியுமா ஐயா? முடியாது. அப்படியாயின் அவர்களிடம் எதற்காக பொதுக்கட்டமைப்பை வழங்கும்படி கூறுகின்றீர்கள்?

மூன்றாவதாக இனப்பிரச்சனை குறித்து எங்களிடம் தீர்வு ஏதும் இல்லை என்று கூறுகின்றனர். எங்கள் கட்சிக் கொள்கைத் திட்டங்களைப் படிக்காதவர்கள் கூறும் குற்றச் சாட்டு இது. எங்களைப் பொறுத்தவரை நாம் புரட்சிவாதிகள். நாம் அனைத்துப் பிரச்சனைகள் குறித்தும் வர்க்கக் கண்ணோட்டத்துடன் பொருளாதாரக் கண்ணோட்டத்துடன் அணுகுகின்றோம். தமிழ் மக்களுக்கு சமவுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதே எங்கள் நிலைப்பாடாகும். ஆனால் சுயநிர்ணயம் என்னும் பேரில் தமிழீழம் என்னும் தனிநாட்டுக கோரிக்கையை ஒருபோதும் நாம் ஆதரிக்க மாட்டோம். தமிழீழத் தீர்வை ஆதரிக்கவில்லை என்பதற்காக எங்களை இனவாதிகள் என்று அழைக்க முடியாது. அப்படியாயின் தமிழீழத் தீர்வை ஏற்றுக்கொள்ளாத சண்முகதாசன் தலை மையிலான கம்யூனிஸ்ட்கட்சி, தமிழ் மக்கள் பாதுகாப்பு பேரவை இயக்கம் போன்றன இனவாதக் கட்சிகளா?

நான்காவதாக தமிழ் மக்கள் மத்தியில் சென்று எமது கருத்துக்களைத் தெரிவிக்க புலிகளும் அவர்களுடைய ஏஜண்டுகளும் எம்மை அனுமதிப்பதில்லை. தமிழ்ப் பத்திரி கைகள் மற்றும் தமிழ் ஊடகங்கள் எமது கருத்துக்களை வெளியிடுவதில்லை. தொடர்ந்து எம்மீது சேறுபூசுகின்றனர். நான் சவால் விடுகிறேன். எங்களுடன் நேருக்கு நேர் விவாதம் செய்ய புலிகளோ, அவர்கள் வால்களோ தயாரா?

இறுதியாக நான் கூறவிரும்புவது நாம் தமிழ் மக்கள் மீது உண்மையான அக்கறை கொண்டுள்ளோம். அதனால் தான் புலிகளின் பாசிச அடக்குமுறையில் இருந்து தமிழ் மக்களை விடுவிக்க போராடி வருகிறோம். இதனை இன்று இல்லாவிடினும் என்றாவது ஒருநாள் தமிழ் மக்கள் நிச்சயம் உணர்ந்து கொள்வார்கள்.



ஜேவிபியின் கொள்கை பரப்புச் செயலர் விமல் வீரவன்ச. மாணவனாக இருக்கும் போதே ஜேவிபியின் அரசியல் வேலைகளில் ஈடுபட்டவர். முழுநேர அரசியலுக்கு வரமுன் பத்திரிகையாளராக கடமையாற்றினார்.

## JVP பற்றி சில கருத்துக்கள்

**எஸ் குகநாதன் :**

JVP யானது மார்க்சிய - லெனினிய அடிப்படையில் ஒரு சோஷலிசப் புரட்சிக்காக உழைத்து வருகிறது. அது சகல விடயங்களையும் மார்க்சியத்திற்கே உரித்தான பொருளாதாரக் கண்ணோட்டத்துடனேயே பார்க்கின்றது. எனவே எழுந்தமானமாக பொதுவாக மற்றைய பேரினவாதக் கட்சிகள் போல் அதனையும் ஒரு இனவாதக் கட்சி என்று முத்திரை குத்துவது தவறு என்றே நான் கருதுகிறேன்.



**ராஜன் :**

JVP யின் புரட்சி என்பது வெறும் புலுடா. அவர்கள் ஒரு கள்ளக் கம்யுனிஸ்டுகள். முன்பு பாராளுமன்றப் பாதையை நிராக ரித்து ஆயுதக் கிளர்ச்சி நடத்தினா ர்கள். இப்போது ஆயுதத்தைக் கீழே போட்டுவிட்டு பாராளுமன்றம் ஜனநாயகம் என்று எல்லாம் பம்மாத்துக் காட்டுகிறார்கள். 1989களில் இந்தியாவை எதிர்த்து கடைகளில் இருந்த மைசூர் பருப்பைக்கூட பறித்துக் கொழுத்தினார்கள். இன்று அதே இந்தியாவிடம் பெட்டி பெட்டியாக பணத்தை வாங்கி விட்டு இந்தியாவே வருக என்று ஆலவட்டம் விரிக்கிறார்கள். இவர்களின் பருப்பு எல்லாம் தமிழ் மக்களிடம் வேகாது. JVP கொழும்பில் கலவரத்தை உருவாக்கும் என்று சிலர் பாட்சா காட்டுகிறார்கள். முடிந்தால் உருவாக்கிப் பார்க்கட்டும். அடுத்த நிமிடம் தமிழீழம் உருவாகும். தமிழன் பயந்தோடிய காலம் மலையேறிவிட்டது. ❑

**தேசம் சஞ்சிகையைத் தொடர்ந்து பெறுவதற்கு நீங்களும் சந்தாதாரர் ஆகுங்கள்.**

**தொடர்புகளுக்கு :**
Thesam, P O Box 35806
London, E11 3JX, UK
Tel : 0208 279 0354

பொதுக் கட்டமைப்பும் முஸ்லீம்களும்



எஸ் எல் எம் பாரூக்

# பாதிக்கப்பட்ட சமூகம் ஓரம்கட்டப்பட்டது.



சுனாமி பேரழிவில் மிகமோசமாக பாதிக்கப்பட்ட முஸ்லீம் சமூகம் தனது சனத்தொகையில் 1% இழநதுள்ளது. மொத்த அழிவில் பாதிக்கப்பட்டவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் முஸ்லீம்களாவர். ஆனால் இச்சமூகம் இன்று அதன் மீள் கட்டமைப்புக்காக உருவாக்கப்பட இருக்கும் சுனாமி முகாமைத்துவ நிர்வாக கட்டமைப்பில் ஓரங்கட்டப்பட இருப்பது மிகவும் கண்டிக்கப்பட வேண்டிய விடயம்.

இந்த பொதுகட்டமைப்பை ஏன் முஸ்லீம்கள் எதிர்க்கின் றார்கள் என்ற உண்மையை குறிப்பாக எமது சகோதர இனமான தமிழர்களுக்கு உணர்த்த வேண்டியது தமிழ் ஊடகங்களின் கடமை என்று நான் நினைக்கின்றேன். முஸ்லீம்கள் இந்த பொதுகட்டமைப்பை பின்வரும் காரணங்களுக்காக எதிர்க்கின்றார்கள் :

1) உருவாக்கப்பட்ட நோக்கம்
2) உருவாக்கப்பட்ட முறை
3) உத்தேச செயற்பாடுகளில் உள்ள குறைபாடுகள்.

## உருவாக்கப்பட்ட நோக்கம் :

முதலில் இது உருவாக்கப்பட்ட நோக்கம் உதவிகளை பகிர்ந்தளிப்பதற்காக அல்ல. இதில் சம்பந்தப்பட்ட நோர்வே அரசாங்கத்துக்கு, புலிகளுக்கு, இலங்கை அரசாங்கத்துக்கு வெவ்வேறுபட்ட நோக்கங்கள் இருந்தன. பலஸ்தீன் - இஸ்ரேல் பேச்சுவார்த்தைகளில் மூக்கறுக்கப்பட்ட நோர்வே இலங்கை பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்ட பின்னடைவுகளை சரி செய்வதற்காக நடுநிலமையிலிருந்து தவறிய நோர்வே எதையாவது செய்து அமைதி முயற்சிகளை எடுத்து நடத்த வேண்டிய தேவை ஒன்று இருந்தது. வெளிநாட்டு உதவி: அரசாங்கத்தையும் புலிகளையும் ஒரே நேரத்தில் இந்த ஏற்பாட்டிற்கு சம்மதிக்க வைத்தது. இந்த நேரத்தில் ஒரு உண்மையை இலங்கையில் உள்ள எல்லா சமூகத்தினரும் உணர வேண்டும். வெளிநாட்டு உதவிகள் சும்மா வருவதில் லை. இன்று குறிப்பாக தெற்கிலும் வடக்கிலும் வெளிநாட்டு உதவி நிறுவனங்களால் கட்டாய மதமாற்றங்கள் நடை பெற்று வருவது காலப்போக்கில் தெரியவரும்.

புலிகள் : அரசாங்கத்துடன் ISGA தவிர வேறு எதுபற்றியும் பேசமாட்டோம் என்றிருந்த புலிகள் இன்று ஒரு அரசாங்க இலாகாவுக்குள் செயற்படத் தயாராகிவிட்டார் கள் என்றால் அதற்கு வேறு காரணம் இருக்கின்றது. கருணாவின் வெளியேற்றத்தால் கிழக்கில் ஏற்பட்டு வரும் அரசியல் மற்றும் ஆயுத பல பின்னடைவுகளில் தள்ளாடிப் போயுள்ள புலிகள் கிழக்கிலும் வடக்கிலும் தனது செல்வாக்கை சரிகட்ட இந்த வெளிநாட்டு உதவிகளை பாவிக்கலாம் என்று கனவு காண்கின்றனர்.

இலங்கை அரசாங்கம் : குழப்பமான பொருளாதார கொள்கைகளாலும் உட்கட்சி முரண்பாடுகளாலும் தனது பதவியின் அந்திம காலத்தை கஷ்டப்பட்டு உருட்டிக்கொண்டி ருக்கும் சந்திரிகாவிற்கு இது ஒரு பெரிய ஆறுதல். அதன் பொருட்டு கிடைக்க இருக்கும் வெளிநாட்டு உதவியோ பெரும் அதிஷ்டம். தெற்கில் சரிந்துவரும் தன் செல்வாக்கை தாக்குபிடிக்க இந்த உதவியை பாவிக்க இருக்கிறார். எனவே இந்த கட்டமைப்பு நாடகத்தில் கதாநாயகர்களிற்கு உதவி பணத்தின் மேல்தான் கண். பாதிக்கப்பட்ட மக்கள் மீதல்ல.

எனவே பாதிக்கப்பட்ட முஸ்லீம் மக்களை எல்லோரும் மறந்து போனதில் எதுவித ஆச்சரியமுமில்லை. தங்கள் தங்கள் அரசியல் லாபத்தையே கவனத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த கட்டமைப்பை எப்படி முஸ்லீம்கள் அங்கீகரிக்க முடியும்.

## உருவாக்கப்பட்ட முறை :

இந்த பொதுக் கட்டமைப்பு முஸ்லீம்களின் பங்களிப்பு இல்லாமலேயே உருவாக்கப்பட்டு உள்ளது. பாதிக்கப்பட்ட எந்த குழுவாவது தங்களது கருத்துக்களை கவனம் கொள்ளா அமைப்பில் இருந்து எதனை எதிர்பார்க்க முடியும். இன்று இலங்கையில் உள்ள இனப்பிரச்சனைக்கான தீர்வு தமிழ் மக்களின் பிரதிநிதிகள் (புலிகள்) இல்லாமல் உருவாக் கப்படுமானால் இதனை தமிழ் மக்கள் அங்கீகரிப்பார்களா?

## உத்தேச செயற்பாடுகள் :

பொதுகட்டமைப்பு அடிப்படையில் உருவாக்கப்படும் முகாமைத்துவ நிர்வாக கட்டமைப்பில் மிக முக்கியமான அபிவிருத்தி திட்டங்களை அங்கீகரிக்கும் நெறிப்படுத்தும் அமைப்பில் முஸ்லீம்களின் ஆதரவு இன்றி புலிகளும் அரசாங்கமும் சேர்ந்து முஸ்லீம்களுக்கு நன்மை பயக்கக் கூடிய அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்தாமல் தங்கள் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தங்களுக்கு நன்மை பயக்கக்கூடிய திட்டங்களை அமுல்படுத்தலாம். முஸ்லீம் களை தனித்தரப்பாக ஏற்றுக் கொள்ள மறுக்கும் புலிகள் முஸ்லீம் பிரதேசங்களின் மீள்கட்டமைப்பிற்கு உதவி செய்வார்களா? மாற்றுக் கருத்துக்களைக் கொண்ட தமது இனத்தவர்களையே பொறுக்காதவர்கள் மாற்று இனத்தவர் களை குறிப்பாக முஸ்லீம்களை மதிப்பார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்? ❑



# எமது உரிமையும் பாதுகாப்பும் பறிக்கப்பட்டுள்ளது.



எஸ் எம் எம் பசீர்

சுனாமியினால் பாதிக்கப்பட்ட வட கிழக்கின் பிரதேசங்களை புனருத்தாரணம், புனர்நிர்மாணம், அபிவிருத்தி செய்தல் தொடர்பிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்கள் வழங்குதல் தொடர்பிலும் சர்ச்சைக்குரியதும் இழுபறிப்பட்டதுமான பொதுக் கட்டமைப்பு குறித்த ஒப்பந்தமொன்றில் யூன் 24ல் இலங்கை அரசும் புலிகளும் கையொப்பமிட்டு உள்ளார்கள். இலங்கை ஜனாதிபதி தனது தற்துணிவு அதிகாரத்தினை, தான் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி என்ற அடிப்படையில்; பாராளுமன்ற அதிகாரத்தையும் மீறி, தனது கூட்டணிக் கட்சியான ஜேவிபியினரது அச்சுறுத்தலையும் அதனைத் தொடர்ந்து அவர்களது வெளியேற்றத்தினையும் கருத்தில் எடுக்காது ஒப்பந்தத்தை அனுமதித்துள்ளார். விகிதாசார ரீதியில் 50 வீதத்துக்கு மேற்பட்ட பாதிக்கப்பட்ட சமூகமான முஸ்லீம்களின் அரசியல் பிரதிநிதிகள் ஒப்பந்தத்தில் சம பிரதிநிதித்துவத்தினை உறுதிபடுத்தக் கோரிய நியாயபூர்வமான வேண்டுகோளையும் புறக்கணித்து இவ்வொப்பந்தத்தினை ஏற்படுத்தியுள்ளார் ஜனாதிபதி.

இவரது கட்சி அறுதிப்பெரும்பான்மை இழந்து கூட்டணி அமைத்து தொங்கிக் கொண்டிருக்கும் நிலையில் தான் தோன்றித்தனமாகவே இந்த முடிவினை ஜனாதிபதி எடுத்து உள்ளார் என்று குற்றம்சாட்டப்படுகிறது. இன்னொருபுறம் தமிழ் மக்களுக்குள் ஜனநாயக செயற்பாட்டினை, மாற்றுக் கருத்தினை மறுக்கின்ற, சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் ஒப்பீட்டளவில் குறைந்த பகுதியினையும் மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற, அரசியற் படுகொலைகள் நடத்துகின்ற, உலகின் சில உதவி வழங்கும் நாடுகளில் பயங்கரவாத அமைப்பாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ள புலிகளுடன் ஒப்பந்தம் செய்துள்ளது இலங்கை அரசு. இ∴தானது இலங்கை அரசு, புலிகளுடன் நிர்வாகத்தை பகிர்ந்து கொண்டு சமபங்காளியாக்கி சர்வதேச நிதி வழங்கி, மீள்கட்டமைப்பில் ஈடுபடுவதற்கு முன்வந்துள்ள நாடுகள், அரசசார்பற்ற நிறுவனங்கள், சர்வதேச நாணய நிதியம், மற்றும் பல்வேறுபட்ட சர்வதேச உதவி வழங்கும் முகவர் நிறுவனங்களின் சட்ட அங்கீகாரத்தை புலிகளுக்கு இவ்வொப்பந்தம் மூலம் வழங்கியிருக்கிறது.

வட கிழக்கில் நிர்வாகம் பண்ணுகிற அரசு - புலி இணைந்த பொதுக் கட்டமைப்பு ஏற்பாடு; புலிகளுக்குள்ள அரசியற் தடைகளை நீக்குவதற்கும் எதிர்கால அரசியல் கோரிக்கைகளை தங்களது உள்ளார்ந்த அரசியல் இலக்குகளை நோக்கி நகர்த்துவதற்கும் வழிசமைத்துள்ளது. ஆனால் ஜனாதிபதியும் நோர்வே அனுசரணையாளர்களும் ஏற்கனவே அமுலில் உள்ள யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை, இப்பொதுக் கட்டமைப்பு பலப்படுத்தி இனப்பிரச்சினைத் தீர்வுக்கு வழிசமைக்குமென்று நம்புவதாக குறிப்பிடுகின்றனர். அதேவேளை புலிகள் இது ஒரு மீள்கட்டுமான உத்தியினை பகிர்ந்து கொள்ளும் நடவடிக்கையென்றும் இதற்கும் சமாதான தீர்வுக்கும் எத்தகைய தொடர்பும் இல்லையென்றும் கருத்தக்களை வெளியிட்டு வருகின்றனர்.

'பொதுக் கட்டமைப்பு' பதம் பத்திரிகைகளின் பதப்பிரயோகம் தான் என்று ஜனாதிபதி விமர்சித்திருந்தார். இவ்வொப்பந்தமானது "சுனாமிக்குப் பிந்திய செயற்பாட்டு முகாமைத்துவக் கட்டமைப்பொன்றினை ஸ்தாபிப்பதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை" - Memorandom of Understranding of the establishment of a Post Tsunami Operation Management Structure (P-TOMS) என்று ஜனாதிபதி குறிப்பிட்டு உள்ளார். இலகுவாகவும் அதிக சொற்களின்றியும் "சுனாமி அகதிகள் சபை" - Tsunami Refugee Council என்றும் பரவலாக இது குறித்துரைக்கப்படுகிறது. எவ்வாறெனினும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் குறித்ததான ஒப்பந்தம் சுனாமியால் அதிக அளவு பாதிக்கப்பட்ட மக்களை ஒப்பந்தத்தின் தரப்பாக கொண்டிருக்காமை இவ்வொப்பந்தம் முஸ்லீம்களை பொறுத்தவரை புரிந்துணர்வை ஏற்படுத்தவில்லை.

"புரிந்துணர்வு" இங்கு அரசியல் மயப்படுத்தப்பட்ட சர்வதேச சமூகங்களின் பின்னணியிலிருந்து நோக்கப்பட வேண்டும். முஸ்லீம்களைப் பொறுத்தவரை அவர்களது ஜனநாயக உரிமை மறுக்கப்பட்டு கசப்புணர்வு ஏற்படுத்தப் பட்டு உள்ளது. இந்த P-TOMS குறித்து முஸ்லீம்கள் எழுப்பிய முக்கியமான கேள்வி குறித்து புலிகள் இரட்டை வேடம் பூண்டிருக்கிறார்கள் என்று திட்டவட்டமாகவே தெரிய வந்துள்ளது. நோர்வே அனுசரணையாளர் ஹெல்கீசனிடம் மூன்றாவது தரப்பாக முஸ்லிம்கள் இடம்பெற முடியாது என்று மறுத்துவிட்டு; பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் தமிழ்ச்செல்வன், ஜனாதிபதியின் வாக்குறுதிகள் குறித்து தனது விமர்சனத்தை முன்வைத்து, "நாங்கள் முஸ்லீம்களை இணைப்பது குறித்து வலியுறுத்தி வருவதாகவும் தங்களால் ஜனாதிபதி போல் வாக்குறுதி வழங்க முடியாது" என்றும் வஞ்சகப் புகழ்ச்சியுடன் குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதியின் முஸ்லீம்கள் பற்றிய செய்தியை காவிச் சென்ற விதார் ஹெல்கீசனிடம் புலிகள் தெட்டத் தெளிவாக முஸ்லீம்கள் பங்காளியாக இருக்க முடியாது என்பதற்கு

தொடர்ச்சி..... 28ம் பக்கம் --->

# ஈரான் $/€ அமெரிக்காவின் அடுத்த இலக்கு






தோழர் ச வேலு

ஈரான் தனது எல்லைப் பாதுகாப்பை வலுப்படுத்த புதியதாக நீண்டதூர ஏவுகணையை பரிசோதனை செய்துள்ளது. மேலும் ஈரானுடைய பொருளாதாரத்தை வலுப்படுத்தும் பொருட்டு அந்நாட்டு மத்திய வங்கியின் செயலரும், எண்ணெய் அமைச்சகத்துக்கான ஆலோசகருமான முஹம்மது ஷாவித் இனி எண்ணெய் பரிவர்த்தனையை யூரோவில் தான் நடத்துவது என அறிவித்துள்ளார். இந்தியா, சீனாவுடன் இயற்கை வாயு மற்றும் எண்ணெய் விநியோகத்திற்கான புதிய ஒப்பந்தத்தை ஈரான் அரசு கைச்சாத்திட்டுள்ளது. செப்டெம்பர் 11 இற்குப் பிறகு அராபிய முதலீட்டாளர்கள் ஈரானில் தமது முதலீடுகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்தச் சூழ்நிலையில் அமெரிக்கா ஈரானிடம் அணு ஆயதம் உள்ளதாகக் குற்றம் சாட்டியுள்ளதுடன், அதனை அச்சுறுத்தும் வகையில் நடவடிக்கைகளை எடுக்க (ஈராக்கைப் போல) தயாராகி வருகின்றது. கிறிஸ்மஸ் 2005க்கு முன்னர் ஈரானை தாக்கும் அமெரிக்கத் திட்டம் வெளிவரத் தொடங்கியுள்ளது.

ஈராக்கைத் தொடர்ந்து ஈரானை அமெரிக்கா குறிவைக்கக் காரணம் என்ன? அமெரிக்காவின் தேவை என்ன? இவைகளை ஆராய்ந்தால் தான் உண்மைகளை புரிந்து கொள்ள இயலும்.

அமெரிக்கா ஆண்டுக்கு 19 மில்லியன் பீப்பாய் (1 பீப்பாய் 160 லீட்டர் ) எண்ணெயை (நாளுக்கு மூவாயிரம் மில்லியன் லீட்டர் எண்ணையை) நுகர்கிறது. இதில் மூன்றில் இரண்டு பங்கு கார்கள், தனியார் போக்குவரத்தால் நுகரப்படுகின்றது. எஞ்சியவை வீடுகள் மற்றும் அலுவலகங்களால் நுகரப்படுகின்றது.

அமெரிக்க எண்ணெய் உற்பத்தி 1990களில் 15 சதவீதமாகக் குறைந்துள்ளது. ஆனால், இந்தப் பத்து ஆண்டுகளில் எண்ணெய் நுகர்வது 11 சதவீதமாக உயர்ந்துள்ளது. எதிர்காலத்தில் இதன் தேவையானது மேலும் அதிகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போது குறைந்தபட்சம் 50 சதவீத எண்ணெய் இறக்குமதி செய்கிறது. இது அடுத்த சில ஆண்டுகளில் 60 சதவீதமாக உயரும்.

உலகின் எண்ணெய் நுகர்வு 84 மில்லியன் பீப்பாயிலிருந்து இருபது ஆண்டுகளில் 120 மில்லியன் பீப்பாயாக உயரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எண்ணெய்க்கான அமெரிக்காவின் அகோரப் பசியானது இரண்டு அம்சங்களில் உருவாகின்றது.

1. பெரும்பான்மையான அமெரிக்க நகரங்களில் பொதுத்துறை போக்குவரத்து நடைமுறையில் இல்லை. பெரும்பான்மையான மக்கள் அவர்களின் அடிப்படைத் தேவைகளுக்கு கார்களையே பயன்படுத்துகின்றனர். தற்போது அமெரிக்கர்கள் 200 மில்லியன் கார்களை வைத்துள்ளனர்.

2. முரட்டுத்தனமான நுகர்வுத்தன்மை கொண்ட அமெரிக்க வாழ்நிலையானது உலகம் முழுவதும் நுகரப்படும் எண்ணெயில் கால்பங்கை நுகர்கின்றது.

அமெரிக்காவில், அலாஸ்கா, வடகடலில் உள்ள பல எண்ணெய் வளங்கள் வெறுமையாய் உள்ளன.

## எண்ணெய்: அதிகாரம் செய்வதற்கான கருவி :

சவுதி அரேபியாவிற்கு அடுத்ததாக உலகின் இரண்டாவது மிகப்பெரிய எண்ணெய் வளம் உள்ள பகுதி, ஈராக் மற்றும் ஈரான் ஆகும். இங்கு குறைந்த சல்பரை (கந்தகம்) உள்ளடக்கிய எண்ணெய் நல்ல தரம் வாய்ந்ததாகவும், எண்ணெய் எடுப்பது என்பது உலகிலேயே

இங்குதான் மலிவானதாகவும் உள்ளது. சவுதியில் செலவிடும் 2.5 டாலரை ஒப்பிடுகையில் ஒரு பீப்பாய்க்கான செலவினம் ஒரு டாலருக்கும் குறைவானது. அமெரிக்காவிலும் ரஷ்யாவிலும் இது 12-15 டாலராகும்.

அமெரிக்கா மற்றும் பிரித்தானியாவின் பெரிய 15 நாடு கடந்த நிறுவனங்களில் சில அதிக இலாபத்தைப் பெறுவதற்கு எண்ணெய் ஒரு ஆதாரமாக உள்ளது. 2002இன் பட்டியலில் 15 பெரிய கம்பெனிகளில் ஐந்து கம்பெனிகள் எண்ணெயில் அதிக லாபத்தை பெற்று உள்ளன. அமெரிக்காவின் ஸ்டான்டர்ட் எண்ணெய் நிறுவனத்தின் நிறுவனரான ராக்பெல்லர் உலகிலேயே பெரிய பணக்காரர். எக்சான் (முன்பு ஜெர்சி ஸ்டான்டர்ட் என்றிருந்தது) பத்தாண்டுகளாக உலகின் முக்கிய 5 கம்பெனிகளில் ஒன்றாக விளங்குகின்றது.

எண்ணெய் விலை அமெரிக்காவில் ஒரு பீப்பாய்க்கு 25 டாலர் எனில் இலாபங்கள் சமமாக கம்பெனிகளில் பங்கீடு செய்யப்பட்டால் எண்ணெயிலிருந்து கம்பெனிகளுக்கு ஆண்டு இலாபம் 29 பில்லியன் டாலராகும். 2001இல் ஐந்து பெரிய தனியார் கம்பெனிகளில் இலாபம் மட்டும் 44 பில்லியன் டாலராகும்.

அமெரிக்காவில் ஜோர்ஜ் புஷ் உட்பட பெரும்பாலான தலைமை நிர்வாகிகள் எண்ணெய் கம்பெனிகளுடன் தொடர்புடையவர்கள். அமெரிக்க எண்ணெய் கம்பெனிகள் ஈராக்கிய பெற்றோலிய நிறுவனத்தைச் சொந்தமாக்கப்பட்டிருந்த நிலைமை 1972இல் எண்ணெய் வளங்கள் தேசியமயமாக்கப்பட்டபின் மாறியது. 1973இல் அராபிய - இஸ்ரேலிய போரின்போது தெற்கு ஈராக்கில் அமெரிக்கா மற்றும் டச்சுக்காரர்களால் செயல்படுத்தப்பட்ட பாஸ்ரா பெற்றாலிய கம்பெனிகளை ஈராக்கிய அரசு எடுத்துக் கொண்டது. எண்ணெய் மீது கொண்டிருந்த அமெரிக்க - பிரிட்டிஷ் கட்டுப்பாடுகள் தளர்வடைந்தன. அந்நாள் முதல் எண்ணெயில் இருந்து அமெரிக்க - பிரிட்டிஷ் நேரடி பங்கீடு எடுத்ததில்லை.

1998இல் பாக்தாத்தில் வெடிகுண்டு வீசப்பட்டதைத் தொடர்ந்து ஈராக்கிய எண்ணெயை நேரடியாக வாங்குவதிலிருந்து அமெரிக்க எண்ணெய் கம்பெனிகளை சதாம் தடுத்து நிறுத்தினார். இந்த எண்ணெய் கம்பெனிகள் பிரான்ஸ், ரஷ்யா, சீனா நடுவர்களிடமிருந்து ஈராக்கிய எண்ணையை வாங்குவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர். சீன அரசுக்குச் சொந்தமான சீன தேசிய பெற்றோலிய நிறுவனத்திற்கு அல் அகாதப் எண்ணெய் வளம் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது. பிரான்சின் போடல் பின், எல்ப், ஐரோப்பாவின் மிகப்பெரிய கம்பெனிக்கு தெற்கு ஈராக்கில் மஜ்நூன், நகர் ஒபர் எண்ணெய் வளங்கள் ஒதுக்கப்பட்டு உள்ளன. ரஷ்யாவின் மிகப்பெரிய கம்பெனியான லூக்காயிலுக்கு பாஸ்ராவின் மேற்கில் மேற்கு குர்னா எண்ணெய் வளங்களும் சல்வரிப்டுக்கு தெற்கு ஈராக்கில் டூபாவிலும் எண்ணெய் வளங்கள் ஒதுக்கப்பட்டு உள்ளன.

தற்போது ஈரானிய அரசும், இதுகாலவரையில் டாலரில் ஆதிக்கம் செலுத்திவந்த **NYMEX (New York Mercantile Exchange)** மற்றும் **IPE (London's International Petroleum Exchange)** என்பன இனி எண்ணெய் பரிவர்த்தனையை யூரோவில் செயல்படுத்த வேண்டும் என்று அறிவித்ததன் வாயிலாக அமெரிக்காவிற்கு பெரிய பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தி உள்ளது. அதனால் தான், அமெரிக்க கம்பெனிகள் மற்றும் அமெரிக்க நலன்களுக்கு ஆதரவான ஆட்சி வேண்டுமெனக் கருதுகின்றது. ஈராக்கைத் தொடர்ந்து ஈரான் மேல் கவனம் செலுத்துகிறது.


எண்ணெய் வளங்கள் தேசியமயமாக்கப்பட்டபின் நாடு கடந்த நிறுவனங்களால் இலாபங்களை அதிகரிக்க முடியவில்லை. எண்ணெய் தேசியமயமாக்கலை விலக்கக் கோருகின்றன. சவூதி அரேபியா, ஈரானிடம் தேசியமயமாக்கல் விலகலை நிர்ப்பந்திக்கின்றனர். உலகம் முழுவதும் எண்ணெய் மீதான கட்டுப்பாட்டைப் பெற அமெரிக்கா சில திட்டமிடல்களை தீட்டியுள்ளது.

ஈரான் மற்றும் ஈராக் மீது அமெரிக்கா முழுமையான கட்டுப்பாட்டை பெற்றவுடன் பிரான்ஸ், சீன, ரஷ்யக் கம்பெனிகளை அங்கிருந்து வெளியேற்றிவிட்டு, ஐரோப்பாவையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவர முயற்சிக்கின்றது. ஐரோப்பா அதன் 50 சதவீத தேவைகளுக்காக மத்திய கிழக்கு எண்ணெயைச் சார்ந்து உள்ளது. பிரிட்டன் மற்றும் ரஷ்யாவைத் தவிர அனைத்து பெரிய நாடுகளும் எண்ணெய் இறக்குமதியை சார்ந்து உள்ளன.

அமெரிக்கா பெருசியான் எண்ணெய் வழியை (துருக்கி வழியாக காஸ்பியனிலிருந்து மெடிடேரியன் வரை செல்லும் பாதை) உருவாக்க முயற்சிக்கின்றது. ஆப்கானிஸ்தானை அமெரிக்கா ஆக்கிரமித்ததுடன், அமெரிக்கா மத்திய மற்றும் தெற்கு ஆசியாவில், பாக்கிஸ்தான், ஆப்கானிஸ்தான், கசகிஸ்தான், தஜிக்கிஸ்தான் போன்ற இடங்களில் இராணுவ அடித்தளத்தை ஏற்படுத்தியது. ஆப்கானிஸ்தான், பாக்கிஸ்தான் நாடுகளுக்குக் குறுக்காகச் செல்லும் எண்ணெய் குழாய்களின் மூலம் மத்திய ஆசிய வாயுவை இந்தியாவின் பெரிய சந்தைக்கு கொண்டுவர வேண்டும் என்பது அமெரிக்க விருப்பத்தின் ஒரு பகுதியாகும். இயற்கை வாயுவிற்கு இந்திய சந்தை திறந்தள்ளது என்ற நிபந்தனையின் அடிப்படையில் பங்களாதேஷிலும் அதன் இயற்கைவாயு (Gas) ஒதுக்கீடுகள் மீதான கட்டுப்பாட்டைப் பெற முயற்சிக்கிறது.

சார்க் நாடுகளுக்குள் சுதந்திர வாணிப பகுதியை ஊக்கவிக்க முயலும் அமெரிக்காவின் பின்னணியை புரிந்துகொண்ட இந்தியா தற்போது ஈரானுடன் இயற்கை வாயு மற்றும் எண்ணெயை இறக்குமதி செய்ய ஒப்பந்தம்

கைச்சாத்திட்டு உள்ளது. ஈரான் ACU, (Asian Clearing Union) மூலமாகத் தனது 30 சதவீத உற்பத்தியை விநியோகிக் கத் திட்டமிட்டுள்ளது.




இதனை ஜீரணித்துக் கொள்ள இயலாத அமெரிக்கா இந்தியாவை வெறுப்படையச் செய்யும் நோக்கில் பாக்கிஸ்தானுக்கு F15ரக போர் விமானங்களை விற்பனை செய்துள்ளதுடன், இந்தியாவில் விபச்சாரம் பெருகி உள்ளதாக குற்றஞ்சாட்டியுள்ளதுடன் பொருளாதாரத் தடையைக் கொண்டு வருவதாகவும் எச்சரித்துள்ளது.

ஈரான் சீனாவுடனும் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. தனது தேவைகளைப் பூர்த்திசெய்ய சீனாவிடம் எண்ணெய் இல்லை. ரஷ்யாவைப் போலல்லாமல் இது ஒட்டுமொத்த எண்ணெய் இறக்குமதி செய்கின்றது. 1993இல் ஒப்பிடுகையில் சீன எண்ணெய் இறக்குமதி என்பது 1996 வரை 18 முறை உயர்ந்துள்ளது. ஒரு நாளைக்கு 450,000 பீப்பாய் எண்ணெய் தேவைப்படுகின்றது. சீன தொழிற்சாலை விரிவடைவதுடன் எண்ணெய் விநியோகமும் சீனாவின் முக்கிய நோக்கமாகும். சீனா அதன் எண்ணெய் விநியோகிக்கும் ஏற்பாடுகளை செய்து வருவதனால் அது அமெரிக்காவினாலும் ஒவ்வொரு இடத்திலும் கண்காணிக்கப்படுகின்றது.

2001இல் இந்தோனேசியா - சீனாவுடன் இயற்கை வாயுவை விநியோகிக்க 9 பில்லியன் டாலருக்கு ஒப்பந்தம் கைச்சாத்திட முயற்சித்தபோது அமெரிக்கா அதன் செயற்பாடுகளைத் தொடக்கியது.

இந்தோனேசியரால் அல்கெய்தா நபர்களை ஒடுக்க அமெரிக்காவின் ஒத்துழைப்பை ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்தித்தது. விதிமுறைகளை மீறி ஈரான், ஈராக், லிபியா, சிரியா, மேற்காசிய நாடுகளில் சீனா மேற்கொண்ட எண்ணெய் வள வளர்ச்சியை அடித்து வீழ்த்தியுள்ளது.

கொலம்பியாவில் போராட்டத்தை ஒடுக்க இரண்டு படைப்பிரிவு (பெட்டாலியன்) கப்பற்படையை அனுப்பவுள்ளது. அந்த நாட்டில் பெற்றோல் எண்ணெய் குழாயை பாதுகாக்க ஒரு புதிய படைப்பிரிவுக்கு பயிற்சி அளிக்கின்றது. வெனிசூலாவில் ஐரோப்பிய ஆதரவுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை தூக்கி எறிய ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

சாவேடோம் தீவு, நைஜீரியாவின் தெற்குப்பகுதி, கடற்கரைத் தளங்களுக்கான சாத்தியமான இடங்களில் எல்லாம் அமெரிக்க இராணுவ ஆணையை ஏற்படுத்த “முன்னேறிய அரசியல் படிப்பு நிறுவனம்”என்ற இஸ்ரேலிய ஊதாரித்தனமான குழுவொன்று ஜூலை 02 இல் நைஜீரிய ஜனாதிபதி ஒப்சன்ஜோவை சந்தித்து அமெரிக்காவின் இருப்பினை ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்தித்துள்ளது. அங்கோலா, கேபன் கேம்ரூன் மற்றும் ஆபிரிக்காவின் மேற்குப் பகுதிகளில் எண்ணெய் ஒதுக்கீடுகளைக் கட்டுப்படுத்த அமெரிக்கா முயற்சிக்கின்றது. பிரிட்டிஷ் டச்சுக் கம்பெனியான ஷெல் இங்கு அதிகம் நாட்டமாய் உள்ளது.

## செலாவணிப் போர் :

அராபிய முதலீட்டாளர்கள் ஏறத்தாழ 1500 பில்லியன் டாலர் ஒவ்வொரு வருடமும் அமெரிக்காவில் முதலீடு செய்கின்றனர். செப்டெம்பர் 11க்குப் பிறகு தீவிரவாதத்திற்கு நிதி வழங்கியதாகப் பல சவுதி வர்த்தக நிறுவனங்கள் மற்றும் அறநிலையங்கள் மீது அமெரிக்க நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதையடுத்து அராபிய முதலீட்டாளர்கள் 200 பில்லியன் டாலரை அமெரிக்காவில் இருந்து திரும்பப் பெற்றனர். அராபிய முதலீட்டாளர்கள் தற்போது ஈரானில் அதிக முதலீடுகளைச் செய்கிறார்கள்.

1999 வரையிலான டாலரின் ஆதிக்கத்திற்குச் சவாலாக எந்த செலாவணியும் இல்லை. இன்று டாலரின் ஆதிக்கத்துக்கு எதிராக யூரோவினால் மட்டுமே சவால் விட முடியும். அதுவும் எண்ணெய் வாணிபம் ஒரு வருடத்திற்கு ஓராயிரம் பில்லியன் டாலருக்கு மேலானது. உலக வணிக வியாபாரத்தில் இது 10சத வீதம். இது டாலரில் இருந்து யூரோவிற்கு சென்றாலே டாலரின் வீழ்ச்சி உறுதியாகிவிடும்..

நவம்பர் 6, 2000 அன்று ஈராக்கில் எண்ணெய் வருமானம் இனி யூரோவில் தான் இருக்கும், டாலரில் இருக்காது என்று சதாம் அறிவித்தார். ஈராக்கின் 10 பில்லியன் அந்நிய செலாவணி யூரோவுக்கு மாற்றப்பட்டது. ஈராக்கே துணிச்சலுடன் இப்படிச்செய்த முதல் எண்ணெய் ஏற்றுமதி நாடாகும்.

ரஷ்யா அதன் பங்கை 10 சதவீதத்தில் இருந்து 38 சதவிதமாக யூரோவில் ஜூன் 2003இல் அதிகரித்திருந்தது. வெனிசூலா, வட கொரியா மற்றும் பல நாடுகள் (ஐரோப்பிய யூனியனுக்குப் பிறகு 12 இலிருந்து 22 நாடுகள்) யூரோவை மாற்றாகக் கருத ஆரம்பித்தன. இவை அனைத்தும்

யூரோவின் மதிப்பை அதிகரித்தன. OPEC (எண்ணெய் வள நாடுகள்) நாடுகளும் யூரோவிற் குச் சென்றுவிடுமோ என்ற அச்சம் அமெரிக்காவிற்கு இருந்தது. ஏனெனில் ஜனவரி 2001 முதல் அமெரிக்க பங்குச் சந்தையின் சரிவின் பகுதியாக எண்ணெய் வாணிபத்தில் யூரோவிற்கு செல்லும் முயற்சியானது, தொடர்ச்சியாக டாலரின் மதிப்பில் அதிகச் சரிவு ஏற்படவும், டாலர்களில் விற்பனையில் மேலும் மதிப்பு குறைவதற்கும், நம்பிக்கையின்மை மற்றும் பயம், ஏனைய பொருளாதாரத்திற்கு முதலீடு மாற்றமடைவது, அதன் அதிக அளவு கடன்களை அதிகரிக்க அமெரிக்காவின் தகுதியின்மை, 450 பில்லியன் டாலருக்கும் மேலாக அதன் பெரிய வணிபப் பற்றாக்குறை ஆகியனவேயாகும்.

ஈரானும் அதிரடியாகத் தனது எண்ணெய் பரிவர்த்த னையை யூரோவிலேயே இனி இருக்கும் என அறிவித்தது டன் தனது 60 சதவீத அந்நியச் செலாவணியை யூரோவிற்கு மாற்றியதை அடுத்து NYMEX, IPE ஆகிய னவும் எண்ணெய் பரிவர்த்தனையை டாலரில் இருந்து யூரோவிற்கு மாற்றுமாறு கோரியுள்ளது. இது டாலரின் சரிவை மேலும் பாதாளத்திற்குத் தள்ளக்கூடும்.

இப் பின்னணியில் தான் ஈரான் மீது அமெரிக்காவின் கவனம் அதிகரிக்கின்றது. டாலருக்குச் சவாலாக யூரோ உருவாவதின் முரண்பாடு கூர்மை அடையும் இந்த வேளை யில் செப்டெம்பர் 17, 2002 இல் அமெரிக்காவின் அதிகாரபூர்வ அறிக்கையான "அமெரிக்காவின் பாதுகாப்பு மூல உத்தி" (National Security Strategy of NSS USA) யில் "ஐரோப்பிய பாதுகாப்பு ஏற்பாடுகள் உருவாகு வதை நாம் தவிர்க்க முயற்சிக்க வேண்டும்" எனக் கூறியுள்ளது. இது ஐரோப்பிய, அமெரிக்கச் சக்திக்குக் கீழாகவும், சார்ந்ததாகவும் வைக்கப்பட வேண்டும் என்பதையே காட்டுகின்றது. இது அமெரிக்க சர்வாதிகாரத் திற்கு மாற்றாக எதையும் உருவாகாமல் தடுப்பதற்கான இலக்குகளாகும். யாரையும் மீறி பொருளாதாரக் கட்டுப்பாட் டைப் பெற அமெரிக்கா அதன் மிகப்பெரிய இராணுவ ஆதிக்கத்தைப் பயன்படுத்தவதைத் தொடரும்.

### உசாத்துணை:


1. ஈராக் போரும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உலக மேலாதிக்க மூல உத்தியும் - இ.க.க. (மா-லெ) மக்கள் யுத்தம்.

2. William Clark. The Emergining Euro-denominated International oil market.

3. Sivakumar. C. "Iran offers oil to Asian Region on easier terms", The Hindu Business Line, (June 16, 2003) ❑



கலாநிதி எஸ் தியாகராஜாவின்

**ஈழத் தமிழரின் ஆதிச் சுவடுகள்**

**வரலாற்று நூல்**

**விரைவில் வெளியிடப்படவுள்ளது.**

தொடர்பு : 020 8279 0354

# S . SATHA & Co

## SOLICITORS

*IMMIGRATION - CONVEYANCING - INJUNCTIONS*
*CRIMINAL - DIVORCE - LEGAL AID WORK*

Community Legal Service

Specialist Help Point Immigration Crime

376 - 378 High Street North,
Manor Park, London E12 6PH

Criminal Defence Service

ILPA

**Tel : 020 8471 9484    Fax : 020 8471 9485**






வி சிவலிங்கம்
அரசியல் ஆய்வாளர்

# தமிழீழக் கோரிக்கையும் அதன் பலவீனங்களும்

இலங்கை அரசியலில் இறைமை என்பது பிரச்சினைக் குரிய அமசமாக மாறி வருகின்றது. தமிழ் ஈழக் கோரிக் கையின் அடிப்படையே இறைமை சம்பந்தப்பட்ட விவகார மாகவே உள்ளது.

இறைமை என்பது நிலம் சார்ந்தது அல்ல. அது மக்கள் சார்ந்தது. மக்கள், மக்களுக்காக, மக்களால் உருவாக்கப்படும் அரசே இறைமை அதிகாரத்தைப் பெறு வதாகக் கருதப்படுகின்றது. அதுவே ஜனநாயகம் எனப்படு கின்றது. அதாவது ஒரு கூட்டம் மக்கள் தமது எதிர் காலத்தைத் தாமே தீர்மானிக்கும் வகையில் தமக்கெனப் பிரதிநிதிகளைத் தேர்வுசெய்து அப்பிரதிநிதிகள் மூலமா கத் தம்மை ஆட்சிசெய்யும் உரிமையே இறைமை எனப் படுகின்றது. இவ்விறைமை அதிகாரம் என்பது ஒருவருக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படையில் வழங்கப்படும் உரிமை.

ஒரு லட்சம் மக்கள் ஒரு நாட்டில் வாழ்வதாக எடுத்துக் கொண்டால் அந்த ஒரு லட்சம் பேரும் ஒரு பாராளுமன்றத் தை உருவாக்கி, அத்தனை பேரும் உட்கார்ந்து தமது எதிர்காலத்தைத் தாமே தீர்மானிக்க முடியாது என்பதால் தான் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு ஒரு பிரதிநிதி என்ற அடிப்படையில் அந்த ஒரு லட்சம் பேரும் தமக்குரிய பிரதிநிதிகளைத் தெரிவுசெய்கின்றனர். தமது விருப்பு வாக்கின் அடிப்படையில் அப்பிரதிநிதிகளை அவர்கள் தேர்வு செய்வதால் தம்மிடம் உள்ள வாக்குச்சீட்டின் மூலம் கிடைத்த இறைமை அதிகாரத்தைத் தத்தமது பிரதிநிதிகளுக்குப் பாராதீனப் படுத்துகின்றனர். இப்பிரதி நிதிகள் சகலரும் இணைந்து தமக்கு வழங்கப்பட்ட இறைமை அதிகாரத்தைத் தம்மால் தேர்வு செய்யப்பட்ட மந்திரிசபைக்கு பாராதீனப்படுத்துகின்றனர்.

இவ்வாறு மக்கள் தமது வாக்குச்சீட்டின் மூலம் தமது இறைமை அதிகாரத்தைப் பிரயோகிக்கின்றனர். இங்கு ஒரு கேள்வி எழுகின்றது. அதாவது, மக்கள் தமது இறைமை அதிகாரத்தைத் தமது பிரதிநிதிகளிடம் கையளித்தால், அதன் பின்னர் மக்கள் அந்த இறைமை அதிகாரத்தை இழந்து விடுகின்றார்களா என்ற கேள்வி எழுகின்றது. அவ்வாறு இல்லை என்பதே அறிஞர்களின் பதிலாகும். ஏனெனில், மக்கள் தற்காலிகமாக ஓர் குறிப்பிட்ட காலத்திற்குத் தமது அதிகாரத்தைக் கையளித் துள்ளார்களே தவிர நிரந்தரமாக அல்ல என்பதாகும். அது மட்டுமல்லாமல், இப்பிரதிநிதிகள் எந்த மக்களின் விருப்பத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாகத் தெரிவித் தார்களோ, அவர்கள் அம்மக்களின் விருப்பத்திற்கு மாறாகச் செயற்பட்டால் அப்பிரதிநிதிகளை மீளப்பெறும் அதிகாரமும் மக்களுக்கு உண்டு.

மேற்குறிப்பிட்ட விளக்கத்தின் மூலம் இறைமை என்பது மக்கள் சார்ந்தது என்பது வெளிப்படை. இந்நிலை யில் இலங்கையில் தமிழ் அரசியலில் காணப்படும் இறைமை பற்றிய வாதங்களுக்குச் செல்வோம்.

தமிழ்பேசும் மக்கள் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாகத் தமது இறைமை அதிகாரத்தை இலங்கைப் பாராளுமன்றம் செல்வதற்கான பிரதிநிதிகளிடம் கையளித் தார்கள் எனவும் இப்பிரதிநிதிகளால் தமது விருப்புகள் நிறைவேற்றப்படவில்லை எனவும் இதற்கான காரணம் அங்கு காணப்பட்ட சிங்களப் பெரும்பான்மைவாதமே எனவும், அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்க ளும் வலுவற்று, செயலற்றதாக்கப்பட்டதற்குக் காரணம் சிங்களப் பேரினவாதமே எனவும் வாதிடப்படுகின்றது.

இவ்வாறான தொடர்ச்சியான மறுப்புகளும் ஏமாற்றங்க ளும் தமிழ் மக்களின் இறைமை அதிகாரத்தை நிராகரித்து ச் செல்லும் செயலாகவே கருதப்பட்டது. இதன் விளைவாகவே இலங்கைப் பாராளுமன்றம் என்பது சிங்கள மக்களின் இறைமை சார்ந்த ஒன்றாக வாதிக்கப் பட்டது. தமிழ் பேசும் மக்கள் தொடர்ச்சியாகப் புறக்கணிக் கப்பட்டதால், தமிழ் பேசும் மக்கள் தமது இறைமை அதிகாரத்தைப் பயன்படுத்தித் தமக்கென ஒரு ஆட்சியை உருவாக்க உரித்துடையவர்கள் என்ற அடிப்படையில் தமிழ்ஈழக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

எனவே தமிழ் ஈழக் கோரிக்கை என்பது தமிழ் பேசும் மக்களின் இறைமை சார்ந்தது என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். தமிழ் ஈழக் கோரிக்கை பலவீனம் அடையும்போது தமிழ் மக்களின் இறைமை அதிகாரமும் பலவீனம் அடைகின்றதா என்ற கேள்வி எழுகின்றது. நிச்சயமாக இல்லை. பதிலாக, தமிழ்பேசும் மக்கள் அந்த அதிகாரத்தை மாற்றுத் தீர்வு ஒன்றில் பிரயோகிக் கின்றார்கள் என்பதே உண்மையாகும். மக்களின் கைகளில் உள்ள வாக்குரிமை மூலம் பிரயோகிக்கப்படும் இறைமை அதிகாரம் மாறி மாறி வெவ்வேறு திசை வழிகளில் பிரயோகிக்கப்படுமாயின் அவ்வாறான இறை மை அதிகாரத்தினை மிகவும் பலவீனமான ஒன்றாகவே நாம் கருதமுடியும்.

இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் காணப்படும் ஆட்சிமுறையானது லிபரல் ஜனநாயக கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டதாகும். இவ்வாறான லிபரல் ஜனநாயக ஆட்சி முறையைக் கொண்டுள்ள நாடுகளில் அரசியல் கட்சிகள் முக்கிய பங்கை வகிக்கின்றன.

அரசியல் கட்சிகளே மக்களின் இறைமை அதிகாரத் தைப் பெறுகின்றன. இந்த வகையில் பார்க்கும்போது, மக்களால் வழங்கப்படும் இறைமை அதிகாரத்தைத் துஷ் பிரயோகம் செய்யும் கட்சிகள் மக்களின் விருப்பங்களுக் குத் துரோகம் இழைக்கின்றன. எனவே மக்களின் இறைமை அதிகாரத்தைப் பெறுபவர்கள் அதனைத் துஷ் பிரயோகம் செய்யின் அம்மக்களின் பிரதிநிதித்துவத்தைக் கோரும் உரிமையை இழக்கின்றனர்.

தமிழ்ப் பகுதிகளில் தற்போது வாதிக்கப்படும் இறை மை சம்பந்தப்பட்ட வாதங்களைப் பார்க்கும்போது அங்குள்ள அரசியல் சக்திகள் மக்களின் விருப்பத்திற்கு மாறாக செயற்பட்டிருப்பதை அல்லது செயற்பட்டு வருவதை நாம் காணலாம். இதனை அவதானிப்பதற்கு, இலங்கைப் பாராளுமன்றம் சிங்களவர்களுடையது எனவும், தமிழர்களின் இறைமை தமிழர்களாலேயே பாதுகாக்கப்பட வேண்டும் என்ற வாதத்தை மையமாக வைத்துப் பார்ப்பதே பொருத்தமானதாகும்.

தமிழர்களின் இறைமை தமிழர்களாலேயே பாதுகாக் கப்பட வேண்டும் எனவும், அதற்கான ஒரே வழி தமிழ் ஈழமே எனவும் வாதிப்பவர்கள், அவ்வாறான கோரிக்கை யை முன்னெடுக்க மேற்கொண்டுள்ள வழிகள் முற்றிலும் முரண்பட்டதாகவே உள்ளன.

1976ம் ஆண்டு தமிழ் ஈழப் பிரகடனம் வட்டுக்கோட்டை மகாநாட்டில் எடுக்கப்பட் டது. இத்தீர்மானத்தின் மூலம் இலங்கைப் பாராளுமன்றத்தின் இறைமை அதிகாரம் தமிழ்ப் பகுதிகளில் செல்லாது என்பதை அறிவிப்பதாகவும் கருதமுடியும். அதாவது இத்தீர்மானத்தின் பின்னர், சிங்களப் பாராளுமன்றத்தின் அதிகாரங்களை அதன் நடைமுறைகளை ஏற்றுக்கொள்வது அதன் இறைமையை ஏற்றுக்கொள்வதாக அமைகின்றது.



வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை எடுத்த தமிழரசுக் கட்சியும், அதனைத் தொடர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணியும் மீண்டும் பாராளுமன்ற அரசியலில் பிரவேசித் தன. இலங்கைப் பாராளுமன்றத்தின் சட்டவிதிகளுக்கு அமைவாக இடம்பெற்ற தேர்தல்களில் தமிழ்பேசும் மக்கள் தமது இறைமை அதிகாரத்தைப் பிரயோகித்துள்ளனர். அதன் பின்னர் இக்கட்சிகளின் போக்குத் தவறானது எனவும், வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் பிரகாரம் இக் கட்சிகள் இயங்கவில்லை எனவும் கூறி வெவ்வேறு இயக் கங்கள் தோன்றின. இவ்வியக்கங்கள் தமிழ்பேசும் மக்க ளின் இறைமை அதிகாரத்தைச் சரியாகப் பிரதிநிதித்துவப் படுத்தினார்களா என்ற கேள்வி தற்போது எழுகின்றது.




தமிழ் மக்களின் இறைமை அதிகாரத்தைத் தாமே பிரதி நிதித்துவப்படுத்துவதாகக் கூறும் விடுதலைப் புலிகள் அமைப்பு இந்த விடயத்தில் எவ்வாறு நடந்து கொள்கின்றது? இலங் கை அரசுடன் பேச்சவார்த்தை கள் நடத்திய சந்தர்ப்பங்களி லும், அதன் பின்னர் இடம்பெற்ற தேர்தல்களிலும் இவர்கள் பங்கு பற்றியதன் மூலமும் இறைமை பற்றி அவர்களது நிலைப்பாடு கேள்விக்குரியதாகின்றது.

பல்வேறு நாடுகளில் இடம்பெற்ற சமாதானப் பேச்சு வார்த்தைகளின்போது உள்ளக சுயநிர்ணய உரிமை பற்றியே கூறப்பட்டது. சமஷ்டி அடிப்படையிலான தீர்வு ஒன்றை நோக்கிய பாதை ஒன்றைத் தேடுவதாகக் கூறப் பட்டது. உள்ளக சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையும் சமஷ்டி அடிப்படைத் தீர்வும் இலங்கைப் பாராளுமன்றத் தின் இறைமை அதிகாரத்தை ஏற்றுக்கொள்வதாகும். அவ்வாறானால் சிங்களப் பாராளுமன்றம் என்ற வர்ணிப்பு களும், தமிழர்களின் இறைமை தமிழர்களாலேயே பிரயோகிக்கப்பட வேண்டும் என முன்வைக்கப்பட்ட வாதங்களும் செல்லுபடியற்றதாகின்றன.

விடுதலைப் புலிகளைச் சார்ந்தவர்கள் தேர்தலில் ஈடுபட்டமை, பாராளுமன்றம் சென்றமை, பாராளுமன்றச் சலுகைகளைப் பெற்றமை, கடவுச்சீட்டுக்களைப் பெற்ற மை என்பன இலங்கைப் பாராளுமன்றத்தின் இறைமை அதிகாரத்தை ஏற்றுக்கொண்டமையைக் காட்டுகின்றன.

இறைமை பற்றி விடுதலைப் புலிகள் தெரிவித்துவரும் நியாயங்கள் யாவும் மக்கள் சார்ந்தது என்பதை விட நிலம் சார்ந்தது எனக் குறிப்பிடுவதே மிகவும் பொருத்தமானது. இறைமை என்பது மக்க ளின் சுயவிருப்பம் சார்ந்தது. இச்சுயவிருப் பத்தை வெளியிடுவதானால் மக்கள்

சுதந்திரமாக செயற்படும் வாய்ப்பு இருத்தல் வேண்டும். கடந்த இருபது வருட காலப் போர் மக்களின் சுதந்திரத்தை மிகவும் கட்டுப்படுத்தியது. ஜனநாயகத்தின் அடிப்படை வேர்களான கருத்துச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், அரசியல் கட்சிகளை உருவாக்கும், அல்லது அவற்றில் இணையும் உரிமை, மனித உரிமை போன்றன பறிக்கப்பட்டு ஆயதக் குழுக்களின் ஆதிக்கமே தீர்மானகரமாக இருந்தது.

விடுதலைப்போர் நடைபெறும் சூழலில் இவை தவிர்க்க முடியாததே என வாதிப்போரும் உள்ளனர். விடுதலைப் போரானது ஜனநாயக உரிமைக்கான போராட்டமாகும். இந்த ஜனநாயக உரிமைப் போராட்ட காலத்தில் தற்காலிகமாகத் தடுக்கப்பட்டாலும், இவ்வுரிமைகள் யாரால் தடுக்கப்படுகின்றதோ அவர்கள் மத்தியிலாவது அந்த ஜனநாயகம் செயற்பட வேண்டும். அவர்களின் செயற்பாடுகளின் நியாயங்களை மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்போதுதான் தடுக்கப்பட்ட உரிமைகள் மீண்டும் கிடைக்கும் என்ற நம்பிக்கையை மக்கள் பெறுவார்கள்.




தற்போதுள்ள சூழலை அவதானிக்கும் போது, போரை மையமாக வைத்துப் பறிக்கப்பட்ட ஜனநாயக உரிமைகள் நிரந்தரமாகவே பறிக்கப்பட்டுள்ளதென மக்கள் உணரத் தலைப்பட்டுள்ளனர். இருபது வருடகாலப் போர் மக்களை ஜனநாயகமற்ற சூழலில் வாழும் நிலைக்குப் பழக்கப் படுத்தியுள்ளது. ஜனநாயகம் என்பது இருவழிப் பாதை. மக்கள் தமது எண்ணங்களை, விருப்புகளை, தேவைகளை தாம் இணைந்துள்ள கட்சிகளின் மூலமாக மேல்நோக்கி அதன் தலைமைக்குத் தெரிவிப்பார்கள். அதுபோலவே கட்சித் தலைமையும் தனது எண்ணங்களைக் கட்சித் தொண்டர்கள் மூலமாக மக்களை நோக்கிக் கீழே எடுத்துச் செல்லும். தமிழ்ப் பகுதிகளைப் பொறுத்தவரை ஜனநாயகம் என்பது ஒரு வழிப்பாதையாகவே உள்ளது. கட்சித் தலைமைகளே மக்களுக்கு உத்தர விடுகின்றன. பணியும்படி வற்புறுத்துகின்றன.

இங்குதான் இறைமை தொடர்பாக விடுதலைப் புலிகள் கொண்டுள்ள கருத்துப் பற்றிய கேள்வி எழுகின்றது. தமிழ்ப் பிரதேசத்தின் ஒரு பகுதியைக் கட்டுப்படுத்தி வைத்திருப்பதை இறைமை என்பதா? அல்லது மக்களைப் பயமுறுத்தித் தமது விருப்புக்கு ஏற்றவாறு மக்களைச் சேவகத்திற்கு உட்படுத்துவதை இறைமை என்பதா?

ஏற்கெனவே குறிப்பிட்டது போல தேர்தல் ஆள்மாறாட்டம், மோசடிகள், தலையீடு என்பவற்றால் மக்களின் வாக்குரிமை பறிக்கப்படுகின்றது. இதுவே கடந்த தேர்தல் தந்தள்ள அனுபவமாகும். ஒருவருக்கு ஒரு வாக்கு என்ற உரிமை எப்பொழுது மீறப்படுகின்றதோ, எப்போது ஒருவரின் வாக்கை இன்னொருவர் பயன்படுத்துகின்றாரோ அப்போது மக்களின் இறைமை பறிக்கப்படுகின்றது.

எனவே இறைமை பற்றிய கோட்பாடு என்பது மக்கள் சம்பந்தப்பட்டதே தவிர மொழி சார்ந்ததோ அல்லது நிலம் சார்ந்ததோ அல்ல. இங்கு மக்களின் விருப்பமே அதன் அடிப்படையாக உள்ளது. மேலும் மக்களின் இறைமை அதிகாரத்தை அடிக்கடி உச்சரித்துக் கொண்டு அதற்கு எதிராகச் செயற்படுவது துரோகத்தனமாகும்.


பிராமணர் ஒருவர் முட்டை சாப்பிடுதல், புகை பிடித்தல், மது அருந்துதல் போன்ற சிறு காரியங்களைச் செய்தால் அதன் பின்னர் அவரை நாம் பிராமணர் என்று அங்கீகரிப்பது மிகவும் சிரமமானது. அவர் பிறப்பால் பிராமணர் என்பதால் நாம் அவரை பிராமணர் என ஏற்பதா? அல்லது பிராமணர் என்பதற்குரிய தகுதிகளுடன் வாழும் பிராமணரை நாம் பிராமணர் என்பதா?

முட்டை உண்ணும் பிராமணர் நிலையில் தான் விடுதலைப் புலிகள் உள்ளனர். அதாவது தமிழ்பேசும் மக்களின் இறைமைக் காகத் தொடர்ச்சியாகப் போராடிய அதேவேளை அம்மக்களின் இறைமையைப் பறிக்கவும் காரணமாக உள்ளனர். இவர்கள் வாதிக்கும் இறைமை அதிகாரம் என்பது இவர்களாலேயே பலவீனப்படுத்தப்படுகின்றது.

தமிழ் பேசும் மக்களின் இறைமை அதிகாரம் பலவீனப்பட்டுள்ளதா எனில் இல்லை எனலாம். ஏனெனில் தமிழ் மக்கள் தமது வாக்குரிமையை இலங்கைப் பாராளு மன்றத்தின் அதிகாரத்தைப் பயன்படுத்தியே தொடர்ச்சியாக வாக்களித்துள்ளனர். இதன்மூலம் அதன் இறைமை அதிகாரத்தை ஏற்றுள்ளனர். ஆனால் அரசியல் தலைமைகளோ இறைமை பற்றிக் குழப்பத்தில் உள்ளனர்.

இந்த அடிப்படையில் பார்க்கும்போது தமிழ் பேசும் மக்களின் இறைமை அதிகாரம் தமிழ் மக்களாலேயே பாதுகாக்கப்பட வேண்டும் எனவும், அதன் அடிப்படையில் தமிழீழம் தோற்றுவிக்கப்பட வேண்டும் என முன்வைக்கப்படும் வாதங்கள் வெற்றுக் கோஷங்களாகவும், நம்பகத் தன்மையற்றதாகவும் போலியானதாகவும் உள்ளது. ❑

தேசம் சஞ்சிகையின் ஆதரவில்



இளைய அப்துல்லாஹ்வின்
**துப்பாக்கிகளின் காலம்**
சிறுகதைத் தொகுப்பு
வெளியீடு

விபரம் விரைவில்
அறிவிக்கப்படும்.
தொடர்பு: 0208 279 0354



# NO MORE TEARS SISTERS

## Anotomy of Hope and Betrayal



த ஜெயபாலன்

ஹெலனே கொலடாவ்ஸ்கேயின் 'நோ மோர் ரியர்ஸ் சிஸ்ரேர்ஸ்' - 'No More Tears Sisters' ஆவணப்படத்தின் வெளியீடு கனடா ஹவுசில் இடம்பெற்றது. 78 நிமிடங்கள் நீளமான இப்படத்தை கனடிய தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் (NFB) தயாரித்து இருந்தது. கனடிய தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனமே 'வெல்கம் ரு கனடா' - 'Well Come to Canada' என்ற தமிழ் அகதிகளின் கனடிய புலம்பெயர்வு பற்றிய ஆவணப்படத்தையும் தயாரித்து இருந்தது குறிப்பிடத்தக்கது.

NO MORE TEARS SISTERS : Anotomy of Hope and Betrayal என்ற இந்த ஆவணப்படம், 1989 செப்ரம்பர் 21ல் தமிழீழ விடுதலை போராட்டத்தின் பேரால் படுகொலை செய்யப்பட்ட தனது மண்ணையும் மக்களையும் நேசித்த ஒரு பெண் - இரு குழந்தைகளின் தாய் - புத்திஜீவிகள் பலரும் நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருந்த போது தனியொருத்தியாக மருத்துவபீடத்தை இயக்கிய விரிவுரையாளர் - மனித உரிமைவாதி - மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் ஒன்றியத்தின் (UTHR) ஸ்தாபகர்களில் ஒருவர் - 'முறிந்த பனை' ஆசிரியர்களில் ஒருவர் - டொக்டர் ரஜனி திரணகம (படம்) பற்றியது.

இந்திய இராணுவம் இலங்கையின் தமிழர் தாயகத்தில் புரிந்த அட்டூழியங்களை இற்றைநாள் வரையில் ஆவணப்படுத்திய ஒரே நூல் 'முறிந்த பனை'. தமிழ் மக்களுக்காக போராடியதாகக் கூறிக்கொண்ட இயக்கங்கள் - ஒரு காலத்தில் சேர்ந்து இயங்கிய புலிகள் உட்பட அனைத்து இயக்கங்களினதும் மக்கள் விரோதப் போக்குகளை 'முறிந்த பனை' நூல் ஆவணப்படுத்தியது.

தமிழ் பெண்கள் மீதான சகல விதமான ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் போராடிய ரஜனி இந்திய இராணுவத்தால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பெண்களை நேரில் சென்று சந்தித்து ஆவணப்படுத்தி மனித உரிமை அறிக்கைகள் மூலமும் 'முறிந்த பனை' மூலமும் இந்திய அரசை சர்வதேச அளவில் அம்பலப்படுத்தினார்.

ஆனால் 'முறிந்த பனை' நூலுக்காக தான் கொலை செய்யப்படுவேன் என்பதை அறிந்திருந்த ரஜனி 'தமிழ் பெண்ணொருத்தியின் கருவறையில் பிறந்த ஒருவனே தன்னை கொலை செய்வான்' என்பதை தெரிவித்துள்ளார்.

இவ் ஆவணப்படம் ரஜனியுடைய வாழ்க்கையை மையப்படுத்தி அவரின் குடும்பத்தினர்: கணவர் - திரணகம தயாபால; பிள்ளைகள் - நர்மதா, சரிகா; அப்பா, அம்மா - திரு திருமதி ராஜசிங்கம்; சகோதரிகள் - நிர்மலா, சுமதி, வாசுகி ஆகியோர் மூலம் கதை சொல்லப்படுகிறது. இளைய மகள் சரிகா தனது தாயின் பாத்திரத்தை ஏற்று நடிக்கிறார். தயாபால திரணகம, நிர்மலா ராஜசிங்கம் இருவருமே ரஜனியுடன் உறவிலும் அரசியலிலும் கூடிய நெருக்கத்தை கொண்டிருப்பதால் அவர்களது பாத்திரம் முதன்மைப்படுத்தப்படுகிறது.

இவ்ஆவணப்படம் பற்றிய விமர்சனம் அவரவர் அரசியல் பின்னணியின் அடிப்படையில் அமைகிறது. விடுதலைப் புலிகள் சார்பு ஊடகங்கள் இது உண்மைக்கு புறம்பான ஒன்றாக விமர்சிக்கின்றனர். மறுமுனையில் புலி எதிர்ப்பு அணியினர் இவ்ஆவணம் புலிகள் பற்றிய இன்னும் பல உண்மைகளை வெளிக்கொண்டு வந்திருக்க வேண்டும் இன்னும் பலரது படுகொலைகள் பற்றியும் பேசப்பட்டிருக்க வேண்டும் என்கின்றனர்.

பெண்களும் யுத்தமும் என்ற தொடரில் ஆவணப்படங்களை தயாரித்து வந்த ஹெலனே கொலடாவ்ஸ்கே, ஸ்ரான்லி ஜெயராஜ் தம்பையா என்ற கல்வியியலாளரின் அறிமுகத்துடன் இலங்கைப் பெண்ணை மையப்படுத்தி ஒரு ஆவணப்படத்தை தயாரிக்கத் திட்டமிட்டு இருந்தார். அதற்கு பெண் போராளி ஒருவரின் கதையை படமாக்க, அவர் விடுதலைப் புலிகளையும் அணுகினார். ஆனால் விடுதலைப் புலிகள் அதற்கு ஒத்துழைக்காததால் அது கைவிடப்பட்டது என படவெளியீட்டின் போது தெரிவிக்கப்பட்டது. பின்னாளில் ஹெலனே கொலடாவ்ஸ்கே ரஜனி பற்றி கேள்விப்படுகிறார். தொடர்புகளை ஏற்படுத்தினார். 'No More Tears Sisters' தயாரானது.

1970க்களில் ஏற்பட்ட கம்யுனிச அலையால் ஈர்க்கப்பட்ட சகோதரிகள் நிர்மலா விடுதலைப் புலிகளுடனும் ரஜனி மார்க்ஸிச இயக்கத்திலும் இணைகின்றனர். சகோதரி நிர்மலா மூலமாக ரஜனிக்கும் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு ஏற்படுகிறது. 1982ல் நிர்மலா பாதுகாப்புப் படைகளால் சிறைப்பிடிக்கப்பட்டார். 1983ல் புலமைப் பரிசில் பெற்று லண்டன் சென்ற ரஜனி சகோதரியின் விடுதலைக்காக ரஜனி கடுமையாகப் போராடுகிறார். விடுதலைப் புலிகளுடன் நெருக்கமாகிறார். அதற்கிடையே விடுதலைப் புலிகள் 1984ல் சிறையை உடைத்து நிர்மலா உட்பட்டவர்களை சிறை மீட்டு இந்தியாவுக்கு அழைத்துச் செல்கின்றனர்.

இந்தியாவில் தான் சார்ந்த விடுதலைப் புலிகள் அமைப்பு பற்றி முழுமையாக அறிந்து கொள்ளும் போது அவ்வமைப்புப் பற்றி கடுமையான விமர்சனத்தை நிர்மலா முன் வைக்கிறார். விடுதலைப் புலிகள் இயக்கத்தில் அரசியல் இல்லை, ஜனநாயகம் இல்லை, அவர்கள் பெண்க

ளை மூளைச்சலவை செய்து தற்கொலைப் போராளிகள் ஆக்குகின்றனர் என அவரது விமர்சனம் அமைகிறது.

மறுமுனையில் ரஜனி விடுதலைப் புலிகளின்பால் ஈர்க்கப்படுகிறார். ரஜனி ஒரு விடுதலைப் போராளி என்பதற்கு அப்பால் ஒரு மனித உரிமைவாதி, பெண்ணிலைவாதியாக வே இருந்துள்ளார். இரு சகோதரிகளும் இலண்டனில் சந்திக்கின்றனர். விடுதலைப் புலிகள் மீதான ரஜனியின் பார்வை மீளாய்வுக்கு உள்ளாகிறது. மிகவும் வெளிப்படை யாக துணிச்சலாகத் தனது கருத்தை முன் வைக்கும் ரஜனி எல்லாப் பங்கங்களாலும் அல்லல்படும் தமிழ் மக்களு க்கு தனது சேவையை வழங்க 1986ல் யாழ் செல்கிறார். தனது குழந்தைகளும் அம்மக்களின் அவலங்களை அறிய வேண்டும் அம்மக்களுடன் வாழ வேண்டும் என்பதற்காக அவர்களையும் ஊருக்கு அழைத்துச் செல்கிறார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் தனது மருத்துவ படிப்பிற்காகச் சென்ற, யாழ்ப்பாணத்திலேயே மேற்குலகப் பாணியில் வாழ்ந்த, கிறிஸ்தவப் பெண்ணான ரஜனி மாணவர் தலைவராக இருந்த சிங்கள, பௌத்த, விவசாய கிராமத்தை சேர்ந்த தயபலாவை விரும்புகின்றார். இவர்கள் 1977ல் திருமணம் செய்துகொள்கின்றனர்.



மார்க்சிச இயக்கத்தில் ஈடுபட்டி ருந்த தயபாலா இலங்கை இனப்பிரச்சி னைக்கான தீர்வு சிங்கள - தமிழ் மக்களின் இணைந்த போராட்டமே என்கிறார். அதனால் அவர் விடுதலைப் புலிகளை எந்தக் கட்டத்திலும் ஏற்றுக் கொள்ளவில்லை. ரஜனி விடுதலை புலிகளுடன் இணைந்து செயற்பட்ட போது கருத்தியல் ரீதியில் அவர்கள் விவாகரத்து செய்து கெண்டதாக தயபால தெரிவிக்கிறார். தனது கருத்துக்கு மாறான கருத்துடைய ஒருவரை; அவர் தனது மனைவியாக இருந்த போதும் உறவைப் பேணுவது தனக்கு கடினமாக அமைந்ததாகக் குறிப்பிட்டார் தயபால.

ரஜனி - தயபால உறவு மிகவும் நேர்மையாகப் பதிவு செய்யப்பட்டு உள்ளது. பிரிந்திருந்த வேளையில் லண்டனில் ரஜனிக்கு விஞ்ஞானி ஒருவருடன் ஏற்பட்ட உறவையும் தயபால தயங்காமல் அங்கு பதிவு செய்திருந்தமை ரஜனி - தயபால உறவின் ஆழத்தையும் நேசிப்பின் உண்மையை யும் வெளிப்படுத்தியது.

இந்த ஆவணப்படத்தை ரஜனி குடும்பத்தினரின் பின்ன ணியுடன் இலங்கையின் காலனியாதிக்கம், தமிழ் மக்கள் மீதான ஒடுக்கு முறை, விடுதலைப் போராட்டம் என்பன பின்னப்பட்டு சர்வதேச பார்வையாளர்களை மையப்படுத்தி படைத்துள்ளார் ஹெலனே கொலடாவ்ஸ்கே.

இவ்ஆவணப்படம் ரஜனியின் வாழ்வை மையப்படுத்தி எடுக்கப்பட்டு இருந்த போதும் அவர் கொலை செய்யப்படுவ தற்கான காரணம் முழுமையாக நிலைநாட்டப்படவில்லை. ரஜனியினுடைய அரசியல் செயற்பாடுகளை குறிப்பாக மனித உரிமைக்காகப் போராடியது, பல்கலைக்கழகத்தில் அவர் மேற்கொண்ட போராட்டங்கள் போன்றவற்றுக்கு அழுத்தம் கொடுக்கப்படவில்லை.

மேலும் அவருடைய போராட்டங்கள் தனித்து மேற் கொள்ளப்படவில்லை. அவருக்கு துணையாக பலர் நின்றனர். அவர்களில் செல்வி, சிவரமணி போன்ற சிலர் தற்போது உயிருடன் இல்லை. இவர்களுக்கும் ரஜனிக்கும் இடையி லான அரசியல் உறவுகள் அங்கு நிறுவப்படவில்லை. அவர்களது பெயர்கள் கூட குறிப்பிடப்படவில்லை. மேலும் முறிந்த பனை நூலின் சக ஆசிரியர்களுக்கும் ரஜனிக்குமான அரசியல் உறவுகளையும் இந்த ஆவணப்படம் பதிவு செய்ய தவறியுள்ளது. அவர்கள் இன்றும் மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் ஒன்றியமாக (UTHR) இயங்குகிறார்கள். ரஜனியின் வாழ்வின் இறுதிப்பகுதியை இவர்களின் மூலம் பதிவு செய்வதே பொருத்தமானதாகும்.

மேலும் விடுதலைப் புலிகள் தான் ரஜனியை கொலை செய்தார்கள் என நிர்மலா தெரிவிக்கின்ற விடயம் மட்டுமே ஆவணப்படத்தில் பதிவாகி உள்ளது. இது ரஜனியின் செயற்பாடுகள் விடுதலைப் புலிகளுக்கு மட்டும் எதிரானதாக இருந்தது என்ற பார்வையை ஏற்படுத்து கிறது. ஆனால் ரஜனி அன்று கொல்லப்பட்டு இருக்காவிட்டால் இந்திய இராணுவம் மற்றும் அதனோடு செயற்பட்ட அமைப்புகளாலும் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சூழல் அங்கு இருந்தது. அதுவும் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். அதன் மூலம் தமிழ் மக்கள் எவ்வாறான சூழ்நிலையில் வாழ்ந்தார்கள் என்பதை தெளிவாக ஸ்தாபித்திருக்கலாம்.

ரஜனியின் கொலையில் சந்தர்ப்ப சாட்சியங்களும் அதற்கு பின்னான நிகழ்வுகளும் விடுதலைப் புலிகள் மீதே குற்றத்தை சுட்டி நிற்கின்றன. ரஜனியின் கொலை பற்றியும் அதன் பின்னணி பற்றியும் சற்று ஆழமாக பார்த்திருக்க முடியும். விடுதலைப் புலிகளின் நிலைப்பாட் டையும் ஹெலனே கொலடாவ்ஸ்கே பதிவு செய்திருக்க வேண்டும்.

இலண்டனில் ரஜனியுடன் இணைந்து செயற்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர்கள், யாழ் செல்லு முன்னர் ரஜனியை எச்சரித்ததாக பின்நாட்களில் தனிப்பட்ட முறையில் ஒத்துக்கொண்டனர். இவர்களது பதிவுகளும் பொருத்தமான தாக அமைந்திருக்கும்.

ரஜனியின் வாழ்க்கைப் பதிவை அவரது குடும்ப உறுப்பினர்களின் வாக்குமூலத்துடன் மட்டும் மட்டுப்படுத் தாமல் அதற்கு வெளியேயும் ஆய்வுகளைச் செய்து பதிவுகளை மேற்கொண்டிருந்தால் இவ்ஆவணம் இன்னும் சிறப்பாக அமைந்திருக்கும். ஆனால் அதற்கான சூழ்நிலை அங்கு காணப்பட்டதா ? இந்த ஆவணப்படத்தில் பங்கேற்க எத்தனை பேர் முன்வருவார்கள் ? என்பனவற்றை கவனத்தில் கொள்வது அவசியம்.

ரஜனியின் மரணம் ஓர் அரசியல் படுகொலை. இதற்கு முன்னும் பின்னும் இன்று வரை மனித உரிமைவாதிகள், சிந்தனையாளர்கள், பத்திரிகையாளர்கள், கேள்வி கேட்டவர்கள், ஒத்துழைக்க மறுத்தவர்கள், புத்திசுவாதீனம் அற்றவர்கள் என பல நூறு பேர் இனம்தெரிந்த அல்லது இனம்தெரியாதோரால் படுகொலை செய்யப்பட்டு உள்ளனர்.

இந்த சூழ்நிலையில் தமது குடும்பத்தில் ஒருத்தியை பறிகொடுத்த குடும்பத்தினர் துணிச்சலாக முன்வந்து இந்த ஆவணப்படத்தை தயாரிக்க ஒத்துழைத்து இருப்பது அவர்கள் மனித உரிமைகள் மீது வைத்துள்ள அசைக்க முடியாத நம்பிக்கையையும் அதற்காக தங்களையே பணயம் வைத்திருப்பதையுமே காட்டுகிறது.

மேற்குநாடுகளில் அரசியல் தஞ்சம்கோரி தங்களது உரிமைகளையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்திக் கொண்ட பின்னும் புனைப் பெயர்களுக்குள் பதுங்கிக் கொண்டு அரசியல் நடத்துபவர்களின், விமர்சனம் செய்பவர்களின் மத்தியில் குறிப்பாக நிர்மலா உட்பட ரஜனியின் குடும்பத்தினர் நிச்சயமாகப் பாராட்டப்பட வேண்டும்.

படத்தின் முடிவில் சரிகாவுடன் பேசும் போது அம்மாவின் மரணத்துடன் மனித உரிமைகளுக்கான போராட்டம் நின்றுவிடவில்லை. அது ஒரு ஆரம்பமே என்றார். தனது பல்கலைக்கழக பட்டப்படிப்புக்காக இலங்கையின் வடபுல முஸ்லீம்களைப் பற்றி ஆய்வு செய்யும் இவர் தமிழர் தாயகத்தில் மனித உரிமைகளுக்கான போராட்டங்கள் வலுவடையும் என்று நம்பிக்கையுடன் கூறினார்.



ரஜனி தான் வாழ்ந்த காலத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முக்கிய ஆவணமான ‘முறிந்த பனை’யை எழுதிச்சென்றார். இன்று அவர் எம்முடன் இல்லாத நிலையிலும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மற்றமொரு முக்கிய பதிவை தனது மரணத்தின் மூலம் பதித்துள்ளர். ஈழத்தமிழர்களின் வரலாறு உள்ளவரை இந்தப் பெண்ணும் வாழ்ந்து கொண்டே இருப்பார். ❑

I knew that creating a portrait of a slain human rights activist would be no easy feat – especially given the fact that there were no surviving archives, few photos and, due to security concerns, no access to filming in Jaffna where Rajani lived and worked. In addition, most of her friends, former students and colleagues were far too fearful to speak about her on camera. Almost everything would have to be constructed, but based on careful research. NO MORE TEARS SISTER is about as far you can get from cinema verité. Luckily Rajani's oldest sister and husband – who themselves were leading activists during Sri Lanka's tumultuous years of ethnic strife – were willing to come on board, joined by Rajani's younger sisters, parents, daughters and fellow activists – now living underground.

Helene Klodawsky

---

---> 30ம் பக்கத் தொடர்ச்சி ...... நினைவலைகள்

இவர் எம்மிடையே வலம் வந்தவர்.கொழும்பில் நான் வாழ்ந்த சில காலங்களின் போது, அவர் யாழிலிருந்து கொழும்பு வரும்போதெல்லாம் எமது இல்லத்துக்கு வந்து எம்முடனும் குழந்தைகளுடனும் உறவாடிச் செல்வார்.

கடந்த ஆண்டு எனது நூல்தேட்டம் இரண்டாவது தொகுதியின் அறிமுக விழாவை யாழ் பொது நூலகத்தில் நிகழ்த்த நூலகர் தனபாலசிங்கம் ஒழுங்கு செய்திருந்தார். சிறப்புரையாற்றவென நந்தியும், சொக்கனும் அழைக்கப்பட்டிருந்தார்கள். இன்று இருவரையும் இழந்து நிற்கின்றோம்.

நந்தி தனது சிறப்புரையில்“.. நூல்தேட்டத்தில் எனது எல்லாப் புத்தகங்களும் இடம்பெறாதது செல்வராஜாவின் பிழையில்லை. எழுத்தாளர்களான நாங்கள், எங்கள் படைப்புகளையே சேர்த்துப் பாதுகாத்து வைக்காமல் சோம்பேறித்தனமாக இவ்வளவு காலம் இருந்துவிட்டோம். நாங்கள் தான் அவருக்கு உதவி செய்ய முன்வர வேண்டும். நான் இன்றைக்கு வீட்டுக்குப் போனதும் இவருக்கு என்னுடைய புத்தகங்களைத் தேடி எடுத்துக் கொடுக்கப்போகிறேன். அப்போது தான் அடுத்த தொகுதியிலாவது அது பதிவுக்கு வரும்.” என்று சுவையாக மேடையில் கூறியதுடன் நின்றுவிடவில்லை; வீடு திரும்பியதும் இரவிரவாகத் தனது புத்தகங்களைத் தேடி எடுத்து என்னிடம் ஒப்படைத்தார்.

எனது தொகுப்பு முயற்சியின் முக்கியத்துவத்தை நன்றாகப் புரிந்து கொண்டு, எனது கஷ்டங்களை உணர்ந்து அவர் உரையாடிய அன்றைய காலைப் பொழுது எனது வாழ்வில் மிக முக்கியமானது. இன்று நூல்தேட்டத்தின் மூன்றாவது தொகுதி அவரது எஞ்சிய 10 நூல்களுடன் தயாராகியுள்ளது. அதைப் பார்ப்பதற்கு, பார்த்துத்திருப்திப்படுவதற்கு அவர் தான் இன்று எம்மிடையே இல்லை.

பேராசிரியர் செ.சிவஞானசுந்தரமாக அறியப்பட்டதை விட நந்தி என்றே அவர் இலக்கிய நெஞ்சங்களில் அழியா இடம்பெற்றுவிட்டார். இன்று நந்தி என்ற மனித நேயனை நாம் இழந்துவிட்டாலும், ஈழத்தவர் இலக்கியம் வாழும் வரை தன் படைப்புக்களின் வழியாக அவர் என்றென்றும் எம்மிடையே வாழ்வார். ❑

# துடைப்பானின் சுவரொட்டி



அசோக்

## சிவராம் : வரலாற்று முரண் கொண்ட தொடரின் துயர்கொண்ட ஓர் இறுதி முடிவின் ஆரம்பம்

சிவராம் பற்றி பேசுவதும் எழுதுவதும் இன்றைய தமிழ் ஊடக உலகத்தில் தவிர்க்க முடியாத அம்சமாகி விட்டது. இது இன்னும் சில நாட்களுக்கே. மீண்டும் இன்னுமொரு 'மாமனிதர்' பட்டம் சூட்டும் கதை தொடங்க இவன் கதை முடிந்து போகும். நாம் காணும் துதிபாடும் சார்பு நிலை தமிழ் ஊடக வரலாறு இதுதானே. ஆனால் தவிர்க்க முடியாத இந்த காலகட்ட நாட்களுக்குள் சிவராமைப் பற்றி ஒரு சாரார் கட்டமைக்கும் விம்பங்கள் அச்சார்பு நிலையாளர்களின் அரசியல் மனோ நிலையை புரிந்து எமக்கு ஆச்சரியத்தை தராவிட்டாலும் அவை சில வேளைகளில் நகைச்சுவை உணர்வை அதிகம் தந்துவிடுகிறது. சிவராமை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அதியுயர் நம்பிக்கைக்குரியவனாகவும் அவர்களின் 'அனைத்து' வகை அரசியலையும் ஏற்றுக் கொண்டவனாகவும் அவனைச் சுற்றி கட்டமைக்கும் புனைவுகள் சிவராமை நன்கு தெரிந்த - புரிந்த நண்பர்கள் மட்டத்தில் கேலிக்குரிய ஒரு நகைச்சுவைத் தனம் எழுந்து வருவதை தவிர்க்க முடியாததாக்கி விடுகின்றது. சிவராம் உயிர் கொண்டு எழுவானானால் தமிழீழ விடுதலைப் புலிகள் தன் தலையில் மாட்டிய அந்த மாமனிதர் பட்டம், அவனுக்கு அவனுடைய மட்டக்களப்புத் தமிழில் அவன் அடிக்கடி கூறும் அந்த எள்ளல் மொழியோடு இணைந்து மாபெரும் பகிடியாக தென்பட்டிருக்கும்.

சிவராம் என்ற அந்த மனிதன், மார்க்சியத்தின் வழிகாட்டலோடு அரசியல் களம் புகுந்ததாக அறிக்கைவிடும் பலரில் ஒருவன்தான். ஆனால் சிவராம் ஒரு இனவாதி என்பதில் நாம் யாரும் ஐயம் கொள்ள வேண்டியதில்லை. மார்க்சியம் பேசப்போய் மறுபுறம் இனவாதம்கக்கும் போலிகளிடையே சிவராம் தன்னை கடைசி ஒரு தமிழ் தேசியவாதியாகவாவது காட்டிக் கொண்டவன் என்ற வகையில் நாம் அவனைப் பாராட்டியே தீரவேண்டும்.

கொழும்பு வாழ் சூழல், அதன் நெருக்கடி, இலங்கை அரசின் கண்ணோட்டம் அனைத்தும் சேர்த்து சிவராம் போன்ற நபர்களை இன்னொரு பக்க இனவாதிகளாக மாற்றிவிடும் பரிதாபத்தை செய்து வருகின்றது. அரசின் இனவாதம் அதன் பின்னணி, வர்க்க சார்பு நெருக்கடிகள், சமூகத் தாக்கங்கள் இவை பற்றிய எந்த அவதானிப்பும் - விமர்சனக் கண்ணோட்டமும் அற்று தங்களுக்கு ஏற்படும் தனிப்பட்ட அனுபவ வெறுப்புகளிலிருந்து இவ்வாறானதொரு நிலைப்பாட்டிற்கு வருவதும், இனவாத சேற்றுக்குள் மூழ்குவதுமான பரிதாப தற்கொலை அரசியலை இவர்கள் தேர்வு செய்து வருகின்றனர். மார்க்சியவாதியாக எம்மிடம் அடையாளம் காண்பித்த பேராசிரியர் சிவத்தம்பியே கொழும்பில் சொகுசாய், பாதுகாப்பாய் அனைத்து சௌக்கியங்களோடும் வாழ்ந்து கொண்டு பச்சை இனவாதம் பேசும் போது பாதிப்புக்குள்ளாகும் சிவராம் போன்றவர்கள் இனவாத அரசியலை தேர்வு செய்வது ஒன்றும் ஆச்சரியப்படத்தக்க விடயமல்ல.

அதேவேளை சிவராம் போன்ற; புலிகளின் கொடூரமான வன்முறைகளை எதிர்கொண்ட, புலிகளின் அழித்தொழிப்பு நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கப்பட்ட விடுதலை அமைப்புகளில் இருந்து வந்தவர்களில் புலிகளின் கடந்தகால, நிகழ்கால வன்முறை அரசியலை ஜீரணித்துக் கொள்ள முடியாதவர்களாகவே காணப்படுகின்றனர். அதனால் தங்களின் நிகழ்கால அரசியலை நடத்துவதற்கு தங்குமடங்களாக புலிகளைப் பயன்படுத்திக் கொள்வதோடு தங்களின் சில நோக்கங்கள் நிறைவேறும் வரையிலாவது புலிகளோடு தங்களை இனம்காட்டிக் கொள்ளவும் வேண்டியவர்களாகி விடுகின்றனர். இதற்கு நல்லுதாரணம் சிவராம் என்பேன்.

சிவராமுக்கும் எனக்குமான உறவு ஓரளவு நீண்டது. 1978க்களில் இருந்தே அவன் எனக்கு நண்பனானவன். எங்கள் இருவரையும் இணைத்தது இலக்கியமே. அதன்பின் 1981ல் நான் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தில் - புளொட்டில் இணைந்து கொள்ள சிவராம் 1983ம் ஆண்டில் நான் சார்ந்த விடுதலை அமைப்பினுள் தன்னை இணைத்துக் கொண்டவன். ஒரு காலத்தில் புலிகளின் வன்முறையை ஒடுக்குவதற்கு ஆயுதத்தின் உதவியை நாடுவதில் எவ்வித தயக்கமும் இருக்க வேண்டிய அவசியமில்லை என்ற கருத்தின் மீது நம்பிக்கை கொண்டவர்களில் இவனும் ஒருவனாக இருந்தான். புலிகளின் பாஸிசப் போக்கும் வளர்ச்சியும் தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்கு வேட்டு வைப்பதில் தான் போய் முடியும் என்றும் அவர்களின் பாஸிசப் போக்கு மௌனம் கொண்ட ஒரு அடிமைத் தமிழ் சமூகத்தை உருவாக்குவதையே தலையான கடமையாக கொண்டிருக்கும் என்னும் முன் ஆருடம் கூறியவன் அவன்.

சிவராமுக்கும் எனக்கும் கருத்தியல் சார்ந்த அரசியல் முரண்பாடுகள் ஏராளம். அதில் குறிப்பானது அவனது தீவிர பிரதேசவாத நிலைப்பாடு. கிழக்கு பிரதேச மக்களின் வாழ்வில் சமூக முன்னேற்றத்தில் அவன் கொண்டிருந்த அக்கறையானது அவனை யாழ் மேலாதிக்க மையவாத சிந்தனைக்கு எதிரானவனாக மாற்றியிருந்தது. இந்த சிந்தனையானது புலிகளில் மலிந்து காணப்பட்ட மேலாதிக்க நடவடிக்கைகளுக்கு எதிரானவனாக, அவர்களின் செயற்பாடுகளில் கடும் விமர்சனம் கொண்டவனாகவும், புலிகளுக்கு மாற்றாக கிழக்குப்

பிரதேசத்தில் ஒரு அரசியல் தலைமைத் துவத்தை உருவாக்குவது கால அவசியம் என்ற கருத்தில் கடும் முனைப்பும், அதற்காக எந்தவிதமான செயற்பாடுகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவும் தயாரானவனாக அவனை 'ரகசியமாக' உருவாக்கி இருந்தது. இந்த சிந்தனை வழித்தடங்களின் நீட்சியே விடுதலைப் புலிகளினுள் ஏற்பட்ட கருணா முரண்பாட்டை தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள முயன்ற முறைமையும் அதில் ஏற்பட்ட சிக்கலும். இது பலரும் அறிந்த இரகசிய விடயங்களாகிவிட்டன இன்று.

அவனது மரணத்துக்கு சில மாதங்களுக்கு முன்பு ஐரோப்பிய கடைசிப் பயணத்தின் சந்திப்பின் போது கூட கிழக்கு மாகாணம் பற்றிய அதீத வெறியை வெளிப்படுத்தினான் சிவராம். கருணாவின் உடைவின் மீதான விமர்சனங்களோடு கிழக்கின் தனித்துவ செயற்பாட்டின் மீதான அவனின் விருப்பும் வெளிப்பட்டது. சிவராமின் கடைசிக் கால செயற்பாட்டின் மீதான நம்பிக்கையின்மையே கருணா, இவனை புறந்தள்ள வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கும் என நான் நினைக்கிறேன். கருணாவின் இந்த தள்ளி வைப்பே புலிகளிடம் இருந்து சிவராம் உயிரைக் காப்பதற்கான தற்காப்புக் காரணியாக அமைந்திருக்கும். எனினும் பாம்பின் கால் பாம்பறியும் என்பது போல் சிவராமின் 'அனைத்தும்' அறிந்த புலிகளுக்கு சிவராமின் இறுதி முடிவு துயரைக் கொடுத்திருக்குமா என்பது சந்தேகமே. சிவராமின் மரணம் புலிகளுக்கு மதிப்பிடவியலா அறுவடையை கொடுத்துவிட்டது என்பது தான் உண்மை.

இத்தோடு இப்பத்தி எழுத்தை நிறுத்திக்கொண்டு பின்வரும் சுவரொட்டி வாசகத்தோடு நிறைவு செய்கிறேன்.

'புலிகளின் மேலாதிக்க வன்முறையை பிடித்து இன்னொரு வரலாற்றை உருவாக்க முயன்றவன் வாழ்வு மாமனிதப் பட்டத்தோடு முடிவுற்றது. வரலாற்று முரண் கொண்ட தொடரின் துயர் கொண்ட ஓர் இறுதி முடிவின் ஆரம்பம் இது என்பேன்.'❑

வணக்கம். தேசம் ஒலிபரப்பு கூட்டுத்தாபனம். செய்திகள் வாசிப்பவர் ராசையா புதியவன். தலைப்புச் செய்தி

## கம்பவாருதி ஜெயராஜ் லண்டன் வருகிறார். பெண்கள் பொது இடங்களில் நடமாட வேண்டாம் என எச்சரிக்கப்படுகின்றனர்.

கம்பர்மலைப் பாடசாலை விழாவில் கலந்துகொள்ள கம்பவாருதி ஜெயராஜ் லண்டன் வருகிறார். விழா ஏற்பாட்டார்களின் காலில் விழாத குறையாகக் கெஞ்சிக் கூத்தாடி இம்முறை லண்டன் வருகிறார் என்ற செய்தியை உடனடியாக உறுதிப்படுத்த முடியவில்லை.

கடந்த முறை வெளிநாடுகளுக்கு வந்து சென்ற வாருதி புலம்பெயர்ந்தவர்கள் கூலிவேலை செய்து பிழைக்கிறார்கள் என்று சாதியத்திமிருடன் தாயகம் சென்று கட்டுரை எழுதியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. அதற்கு இணைய சஞ்சிகை ஒன்று வம்பவாரிசு ஜெயராஜ் என பட்டம் வழங்கி கௌரவித்திருந்தது அறிந்ததே.

தனது வெளிநாட்டுப் பயணங்களின் போது சக ஆலயப் பணிபுரியும் மிருதங்கக் குழுவினருடன் தங்காமல் தனக்கென தனியான அக்கமடேசன் கேட்டதால் கூப்பிட்டவர்களின் பட்ஜட் சென்ற ஆண்டு எகிறியது. விமானச்சீட்டுடன் ஒரு சொற்பொழிவுக்கு £50 படி £500 ரக்ஸ் பிறி மணி கொடுக்கப்படுகிறது. இதைவிட வேறு கூட்டங்களுக்கும் சென்று சைட் இங்கம் எடுக்கவும் அவருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வெயில் காலங்களில் வெளிநாடுகளுக்கு வர விரும்பும் வாருதி 'நம் காரிகையர் கால், கைகளில் உள்ள மயிரையும் மழித்துக் கொள்வதும் பட்டராலும் சீசாலும் கொழுத்துக் கிடக்கும் தொடையின் முக்கால் பாகம் தெரியும் காற்சட்டையை போடுவதும்' - (மல்லிகை சஞ்சிகையில் கம்பவாருதி பயன்படுத்திய மொழி) பண்பாடு இல்லை என்று ஆணித்தரமாகத் தெரிவித்திருக்கிறார்.

திருமணமாகாத கம்பவாருதி இம்முறை விஜயத்தின் போது, குமரிகள் என்ன என்ன எல்லாம் போட்டிருக்கிறார்கள் எவ்வளவு பாகம் காட்டுகிறார்கள் என்பதைக் கூர்ந்து அவதானித்து கண்டுபிடித்து தமிழ் பண்பாட்டைக் காப்பாற்றுவதே தனது வாழ் நாள் லட்சியமாக கொண்டிருப்பதாக எமது கொழும்புச் செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

தனது 'லெற்ஸ் ரோக் எபவுட் செக்ஸ்' சொற்பொழிவில் கிக் ஏற்றுவதற்காக பெண்களை மட்டம் தட்டியும் மலினப்படுத்தியும் அவர்களை வைத்து ஜோக் சொல்வதும் வழமையென இவரது வருகைக்கு விசனம் தெரிவித்துள்ளது எக்சைல் ரமில் வுமன் லீக்.

பிந்திக்கிடைத்த செய்தி ஒன்று, விழாவுக்கு வரும்போதோ அல்லது வாருதி ஜயாவை வீட்டுக்கு விருந்துக்கு அழைத்தாலோ பொம்பிளைப் பிள்ளையள் இருந்தால் வடிவாப் போர்த்து மூடிக்கொண்டு கூப்பிடும் படி அகில உலக தந்தையர் அமைப்பு எச்சரித்துள்ளது. இவ்எச்சரிக்கை 10 வயதில் உள்ள சிறுமிகள் முதல் அம்மா மாருக்கும் பொருந்தும் என அவ்வமைப்பினர் சுட்டிக்காட்டி உள்ளனர். இது பற்றி கருத்துத் தெரிவித்த அவ்வமைப்பின் உறுப்பினர் ஒருவர் "அம்மாமார் சேலை கட்டியிருந்தால் வடிவா இழுத்து விடுங்கோ. மனுசன் பொல்லாத ஆள் சைற்றாலை கியிற்றாலைப் பாத்திடும். பண்பாட்டை கூர்ந்து பாக்கிறதிலை மனுசன் விண்ணன், சிங்கன்" என்று தெரிவித்தார். இத்துடன் செய்திகள் நிறைவடைகிறது. நன்றி, வணக்கம்.

# தமிழீழ விடுதலை போராட்டத்தின் மொத்த வியாபாரிகள்

ரி கொன்ஸ்ரன்ரைன்



‘துரோகி’ என்ற வார்த்தை எமது விடுதலைப் போராட்டத்தில் மிகவும் அதிகமாக உபயோகிக்கப்பட்ட மிகவும் மலிந்த சொல். அல்பிரட் துரையப்பா தொடக்கம் தர்மலிங்கம், ஆலாலசுந்தரம், அமிர்தலிங்கம் ஊடாக பழைய பித்தளை பாத்திரங்களுக்கு ஐஸ்கிரீம் கொடுத்தவர்கள், இரவில் கள்ளக் கோழி பிடித்தவர்கள் வரை ‘துரோகி’ என்ற முத்திரை குத்தப்பட்டே சுடப்பட்டனர். இன்று இன்னும் அவசர அவசரமாகக் கொல்லப்படுகிறார்கள். சில கொலைகள் நியாயப் படுத்தப்பட்டும் மற்றையவை காலப்போக்கில் மறக்கப்பட்டும் விட்டது. நேற்றைய கொலைகள் இன்றைய கொலைகளால் மறக்கப்படுகின்றது. இன்றைய கொலைகள் நாளைய கொலைகளால் மறக்கடிக்கப்பட்டு விடும். இக்கொலைகள் அனைத்தும் எமது போராட்டத்திற்கு வித்திட்டது என்ற வாதத்தில் உண்மை இருந்தால் - ‘போரின் கொடூரத்தின் மத்தியில் கொலைகள் தவிர்க்க முடியாதது’ ஆக இருந்தால் கொல்லப்பட்ட எண்ணிக்கையை பார்க்கும் போது நாம் எப்போதோ விடுதலை பெற்றிருக்க வேண்டும்.

மாறிவரும் பூகோளஅரசியல் அணுகுமுறைகள் தற்போது ஆயுதப் போராட்டங்கள் மீது அதீத அழுத்தத்தை செலுத்தி வருகின்றன. தமிழீழ விடுதலைப் போராட்டம் 1980/90களில் இருந்தது போல் பாரிய ஆயுத மோதலை நோக்கி நகருமா என்று வினவினால் இல்லை என்றே கூற வேண்டும். ஆதாரமற்ற குற்றச்சாட்டு களையும் அடிப்படையில்லாத கோசங்களையும் கொண்டு வெற்றிகரமாக வாதிட முடியாது. கடந்த வருடம் சுனாமி வந்ததால் தற்போது அரசியல் களம் சற்று சூடுபிடித்து இருக்கின்றது. சுனாமிப் பணம் எப்படி பங்கிடுவது பற்றி முக்கியமாக ஆராயப்படுகின்றது. இந்த சுனாமி கதையெல்லாம் அடுத்த வருடத்திற்குள் அடங்கிப் போகிற விடயங்கள். அதற்குபின் என்ன?? தொடர்ந்து பேச்சுவார்த்தையா?? இன்னும் எவ்வளவு காலத்திற்கு?? அல்லது போரா?? இது சாத்தியமா?? அல்லது சுனாமி மீண்டும் அடிக்குமா??

தமிழீழ விடுதலைப் போராட்டம் 25 ஆண்டுகளுக்குப்பின் ஒரு முக்கிய திருப்பு முனையில் வந்து நிற்க, லண்டனில் உள்ள பிரமுகர்களின் நிலைமையோ பெரிய கவலைக்கிடம். விடுதலைப் போராட்டத்தின் மொத்த வியாபாரிகள் போல தங்களைக் காட்டிக் கொள்ளும் இந்த ஜென்டில்மென்கள் விடுதலைப் போராட்டத்தின் பெயரில் சம்பாதிக்கவும், பதவிகளைத் தக்க வைக்கவும், சமூக அந்தஸ்தைப் பெறவும் எடுக்கும் பிராயச்சித்தமோ படுகேவலம் - நகைப்பிற்குரியது.

வெளிநாடுகளில் உள்ள பிரமுகர்கள் பணம் அனுப்பி தமிழீழவிடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த காலம் மலையேறிப் போய்விட்டது. விடுதலைப் போராட்டத்தின் ஏஜெண்டுகளாகவும் மொத்த வியாபாரிகளாகவும் இப்பிரமுகர்கள் - தமிழ் பொது அமைப்புகளில் பணியாற்றுபவர்கள், தர்மகர்த்தாக்கள், சில ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் மாறியுள்ளனர்.

பொது அமைப்புகளில் வேலை செய்பவர்கள் பீல்ட் வேக் என்று சொல்லி விட்டு ஸ்ரீலங்கன் எம்பசியில் விசா எடுக்கச் செல்கின்றனர். கவுன்சிலிங் ஒபிசர், சப்போட் ஒபிசர் என்றெல்லாம் இருப்பார்கள் ஆனால் போம் நிரப்பத் தெரியாது. முதலில் அவருக்கு கவுன்சிலிங் செய்ய வேண்டி இருக்கும். ஏதாவது முறைப்பாடு செய்தால் ‘ஊரில எல்லாம் இப்படித்தான் இருந்த நீங்களோ’ என்று ஒரு நக்கல், நளினம். ‘இங்கு வந்தவை எல்லாம் தரவேலை மாடு மேய்த்தவிட்டு அப்படியே ஹீத்ரோவில இறங்கி விட்டம்’ என்றது தான் அவேன்ர நினைப்பு. இப்படி எழுதபோனால் வாராவாரம் நாங்கள் தேசம் விடவேணும். கொம்பியூட்டர் சொல்லிக் கொடுத்து வேலைக்கு பயிற்சியும் வேக் பிளெஸ்மன்டும் எடுத்துக் குடுக்கிறதெண்டு பேப்பர், ரேடியோ, ரிவி என்று விளம்பரம் கொடுத்து அதோடை வாழைப்பழத்தில ஊசி அடிக்கிறமாதிரி நாங்கள் வெட்டினம் புடுங்கினம் என்றெல்லாம் செய்தியையும் குடுக்கிறார்கள்; இது வரைக்கும் ‘பாதிக்கப்பட் எத்தனை இளைஞர்கள்’ இங்கு பயன்பெற்றிருக்கிறார்கள். கொலீஜ்க்கும் யுனிக்கும் போறவைக்கு உங்கட உதவி பெரிசா தேவையில்லை. வழிதெரியாமல் ஒரு இளம் சமூகம் தட்டுத்தடுமாறி வீதியில் நிற்கிறார்கள். அவர்களை நோக்கி உதவிக் கரங்களை நீட்டுங்கள்.

கோயில்களை எடுங்கள், ஈலிங் அம்மன் ஆலயத்தைத் தவிர எந்தக் கோயில் தனது வருமானத்தில் எத்தனை வீதம் தமிழர் தாயகத்துக்கு கொடுப்பதாக உண்மையாகச் சொல்ல முடியும்? மாமனிதர்களுக்கு நினைவு விழா, பிரபாவின் பிறந்த நாளுக்கு கேக் வெட்டுவது, மாவீரர் தினத்துக்கு விசேட பூசை என்ற போர்வையில் நாங்களும் போராட்டத்துடன் தோளோடு தோள் நிக்கிறோம் என்று

பறைசாற்றி உண்டியலை நிரப்பி அதனை தங்கள் பொக்கற்களுக்கு பைப்பாஸ் செய்கிறார்கள்.

லண்டனில் கோயில் கட்டுவதற்காக £900,000க்கு நிலம் வாங்க சம்மதித்துள்ளார் ஒரு தர்மகர்த்தா. அவரது பிள்ளையின் திருமணத்திற்கு £60,000 ரொக்கமாக வழங்கப்பட்டு இருக்கிறது. இத்தொகை பணத்தை பெறுவதற்குரிய வசதி ஒரு தர்மகர்த்தாவிற்கு எப்படிக் கிடைக்கின்றது? தாயகத்தில் தமிழர்கள் தவிக்கிறார்கள் இங்கு இவர்கள் தங்கத் தேர் கட்டி இழுக்க போவதாக தாண்டவம் ஆடுகிறார்கள். இதுதான் மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதா ??

இதுக்குள்ள சில ஊடகங்கள் தொப்பிள் கொடி, அறுநாக் கொடி என்று பிழைப்பு நடத்துகிறார்கள். மற்றவையெல்லாம் போராட்டத்துக்கு எதிர் நாங்கள் மட்டும் தான் போராட்டத்தை குத்தகைக்கு எடுத்திருக்கிறோம் என்று அவர்கள் அளக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கும் கோடம்பாக்கம் தான் கை கொடுக்கிறது. கானக்குயில், இன்னிசைக் குயில், பாட்டுக்கு பாட்டு எல்லாமே கோடம்பாக்கத்தை உல்டா பண்ணித்தான் செய்கிறார்கள். நீங்கள் பிஸ்னஸ் செய்கிறோம் என்று சொல்லுங்கள். ஆனால் சேவை செய்கிறோம், கலை வளர்க்கிறோம், தமிழ் வளர்க்கிறோம் என்று பம்மாத்து விடக்கூடாது.

எழுத்தாளர் கூட்டம் ஒன்று விடுதலைப் போராட்டத்தினதும் விடுதலைப் புலிகளினதும் கொப்பிறைட்டைஸை தாங்கள் மட்டும் தான் எடுத்து வைத்திருப்பது போல் நடக்கிறார்கள். சற்று மாறுதலுக்காக, வாசகர் கடிதம், கொஞ்சம் யோசிங்க என்று சொல்லிக் கொண்டு வரும் இவர்கள் சேயோன், தேவபுத்திரன், எல்லாளன், முதல்வன், கள்ளன் என்ற பெயர்களில் சாமத்தியப்பட்ட பிள்ளைகள் போல வெக்கப்பட்டுக் கொண்டு ஒழிந்து இருந்து எழுதுகிறார்கள் இந்த மன்மதக் குஞ்சுகள். தங்கள் சொந்தப் பெயர்களில் தங்கள் சொந்தக் கருத்துக்களை சொல்லத் தயங்குகிறார்கள். ஏனென்றால் இவர்களின் எழுத்தில் உண்மையில்லை, நாகரீகம் இல்லை, நியாயமும் இல்லை. சொந்தப் பெயரில் எழுதினால் தங்கள் வண்டவாளங்களும், சிலுமிசங்களும், மன்மத லீலைகளும் வீதிக்கு வந்துவிடும் என்று அச்சம்.

அதிலும் சிலர் முன்னர் விடுதலைப் புலிகளை வசைபாடி விட்டு தற்போது தம்மை விடுதலைப் புலிகளின் தூண்களாகக் காட்டிக் கொண்டு மற்றவர்களை வசைபாடுகின்றனர். புனைப் பெயர்களில் ஒழிந்துகொண்டு மற்றையவர்களை ஆதாரமற்று பொதுப்படையாகக் கரிபூசி வருகின்றனர். தமது தனிப்பட்ட கோபதாபங்களையும் மனக்கசப்புகளையும் தீர்க்க; தம்மை விடுதலைப் புலிகளின் ஏஜெண்டுகளாக காட்டிக் கொண்டு தமக்குத் தாமே தளம் அமைத்து வருகின்றனர்.



"புலிகள் அழிக்கப்படவேண்டிய சக்தி" என மிகக் கடுமையான விமர்சனங்களை வைத்த டேவிட் ராஜேந்திரன், கலாநிதி கிருஷ்ண ராஜா, சேயோன், ..... போன்ற புனைப் பெயர்களுக்குள் ஒழிந்து கொண்டிருக்கும் ரவி அருணாச்சலம் - அ ரவி 'சரிநிகர்'ரில் புலிகள் பற்றியும் அதன் தலைவர் பிரபாகரன் பற்றியும் மிகவும் கொச்சைத்தனமாக எழுதியவர். ரிரிஎன், ஐபிசி நிறுவனப் பொறுப்பு தனக்கு வரும் என்ற கனவில் அடித்தார் பல்டி. 'தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன்' என்று போட்டார் நாமம். எல்லாம் அந்த சர்வேஸ்வரனுக்குத் தான் வெளிச்சம்.


இன்று இவர் ந சபேசன், மு நித்தியானந்தன், சோபா சக்தி, சி புஸ்பராஜா போன்ற மாற்றுக் கருத்துடையவர்களை புலி விரோதிகளாகவும் விடுதலைப் போராட்டத்தின் விரோதிகளாகவும் காட்ட முற்பட்டுள்ளார். இவர்களை விமர்சனரீதியாக அணுக முடியாமல் அவர்களது தனிப்பட்ட வாழ்க்கையை திரிபுபடுத்தி கொச்சைத் தனமாக எழுதுகிறார். 'சரிநிகர்'ரில் எழுதிய கட்டுரைகளை நன்றி : அ ரவி என்று கூறி மீள்பிரசுரம் செய்தால் சம்பந்தப்பட்டவர் துண்டைக் காணோம் துணியைக் காணோம் என்று ஓட வேண்டிய நிலைவரும். (முன்னொரு முறை வேறொரு காரணத்திற்காக இப்படி ஓடியதாகக் கேள்வி)

மு நித்தியானந்தன் தன்னை பேராசிரியர், கலாநிதி என்றெல்லாம் அடையாளப்படுத்தியதாக குற்றம்சாட்டப்பட்டார். அப்படி அவர் தன்னை எங்கும் அடையாளப்படுத்தவில்லை. அவரது கட்டுரைகளில், நூல்களில், தொலைக்கட்சியில் அவர் மு நித்தியானந்தன் என்றே குறிப்பிட்டுள்ளார். ஆனால் அப்படி கூப்பிட வேண்டாம் என்று கூட்டத்தில் சொல்லியும் இருக்கிறார். மற்றையவர்கள் அப்படி கூப்பிடுவதற்கு அவர் பொறுப்பல்ல. இதே பிரச்சினை மதியுரைஞர் பால சிங்கத்தக்கும் ஏற்பட்டது.



தனது சொந்தக் குப்பைகளை புனைப்பெயர்களுக்குள் ஒழிந்து கொண்டு வாரி வீசும் அ ரவி பவானி என்ற இளம் எழுத்தாளர் எழுதிய 'இனம் கானல்' என்ற சிறந்த சிறு கதையை திருடி 'நாச்சியார் திருமொழி' என்று பெயரிட்டு தனது பெயரில் 'குமுதம் - தீராதநதி' என்ற சஞ்சிகையில் வெளியிட்டார். (பார்க்க : தேசம் இதழ் 20, பக் 27) சொந்தக் கருத்தை புனைப்பெயரிலும்; திருடிய சிறுகதையை சொந்தப் பெயரிலும் வெளியிடும் இந்த இலக்கியகர்த்தாவை என்னவென்பது.

இவர் எழுதுகிறார் 'குமுதம், விகடன், இந்தியா ருடே, காலச்சுவடு, உயிர்மெய் எல்லாமே இந்திய மேலாதிக்க கருத்தக்களை வெளிப்படுத்துவதாகவும் பிராமனிய நிலைப்பாடு கொண்டவை' என்றும் "இந்த ஊதுகுழல்களுக்கு ஒத்து ஊதியவர்கள் தாம் இந்த இருவரும். (சோபாசக்தி, சி புஸ்பராஜா) ........" 'குமுதம் - தீராதநதி'யில் அண்ணன் எழுதிய நாச்சியார் திருமொழி வெளிவந்த பின்னர் தான் அவருக்கு 'குமுதம் - தீராதநதி' இந்திய மேலாதிக்கத்தை பரப்புவது தெரியவந்ததாக்கும். அதுவரை அண்ணன் என்ன விரல் சூப்பிக் கொண்டிருந்தாரா?? பத்மநாப ஐயர் புலிகளின் தீவிர அனுதாபி என்றது எல்லோருக்கும் தெரிந்த ரகசியம்.



ஆனால் ஐயர் 'காலச்சுவடு' சஞ்சிகையின் கௌரவ ஆசிரியர் - ஆலோசனைக் குழு உறுப்பினர். மேலும் தனக்கும் றோவுக்கும் இருந்த தொடர்பை அன்ரன் பாலசிங்கமே குறிப்பிட்டு உள்ளார். அண்ணனையும் 'தீராதநதி'யிலோ 'காலச்சுவடு'இலோ பேட்டி கேட்டிருந்தால் கௌரவ ஆசிரியராக இருக்க கேட்டிருந்தால் புன்னகையோடு ஏற்றிருப்பார். பலகோணங்களிலும் போஸ்கொடுத்து படமும் கொடுத்திருப்பார். என்ன அவர்கள் அண்ணனை கேட்கவில்லை. அதனால் அண்ணன் சூடாகி இந்திய மேலாதிக்கம், மனசாட்சி என்றெல்லாம் பொரிந்து தள்ளிவிட்டார்.

"நமக்கு என்ன பிரான்ஸில் நல்லவாழ்வு.... அகதிப் பணம்.... சாப்பிட்டு, ஏவறைவிட்டு...." இதென்ன விமர்சனம். உம்மட புட்டியும், லிலைகளும் வெளில வந்திட்டா அசிங்கமா போடும். ஜனநாயகம், எழுத்துச் சுதந்திரம், மனித உரிமை, லொட்டு, லொசுக்கெல்லாம் கதைச்சுப் போட்டு என்னத்தை எழுதுறியல். 'கொஞ்சம் யோசிங்க'! 'சற்று மாறுதலுக்காக' என்று தொடங்கி உங்களை பச்சையா விமர்சிசா நிலை என்ன? கண்ணாடி வீட்டில இருந்து கல்லெறியிறியளே.

இந்த ஏஜெண்டுகள் மீது வைக்கப்படும் விமர்சனங்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் என்ற மாயையை காண்பிக்கப்பித்துவிட்டு இந்த ஏஜெண்டுகள் தமிழீழம் என்ற வெற்றுக் கோஷத்துக்குப் பின்னால் பதுங்கிக் கொள்கின்றனர்.

காலம்சென்ற கேணல் கிட்டு லண்டனில் உள்ள தமிழர் தகவல் நடுவத்தில் தமிழ் எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் எனப் பலதரப்பட்டவர்களையும் கூட்டி ஒரு கூட்டம் வைத்தார். அதில் கிட்டுவின் கவனத்தை ஈர்க்க பலர், சிலரை தமிழினத் துரோகிகள், புலிகளுக்கு எதிரானவர்கள் என முண்டியடித்துக் கொண்ட வசைபாடிக் கொண்டிருந்தனர். கிட்டு அனைத்தையும் செவிமடுத்துவிட்டு மிகவும் அழகாகச் சொன்னார் "ஒருவர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக அல்லது தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக எழுதினால் அதில் எமக்கு பெரிய பிரச்சினையில்லை. ஏனெனில் சம்பந்தப்பட்டவரின் அரசியல் நிலைப்பாடு என்னவென்று எமக்கு தெட்டத்தெளிவாகத் தெரியும். என்னைப் பொறுத்தவரை யார் ஆபத்தானவர்கள் என்றால் எம்மைத் துதிபாடிக்கொண்டு, எமக்கு விசுவாசமானவர்கள் போல் நடித்துக் கொண்டு தமது சொந்த அபிலாசைகளை எம்மை வைத்துக் கொண்டு நிறைவேற்றுபவர்கள் தான் எனக்கு கவலை அளிக்கின்றது" எனக் கூறினார். 15 ஆண்டுகளுக்கு முன்னர் அன்று கிட்டு கூறியது இன்றும் பலருக்கும் பொருத்தமாக இருக்கிறது.❑

IMMIGRATION / EMPLOYMENT / HOUSING / WELFARE

# SOLICITORS

Rengan N Devarajan

**Immigration & Nationality**
**Employment**
**Land Lord & Tenant**
**Housing**
**Welfare Benefits**
**Matrimonial**

**Tel : 020 8478 5797**
**Fax : 020 8478 4486**

**1ST Floor**
**128 Ilford Lane, Ilford**
**Essex, IG1 2LE**







எஸ் பாலச்சந்திரன்

# மகத்தான பாட்டாளிவர்க்க கலாச்சாரப்புரட்சி

ரஷ்சிய சீனப் புரட்சி களின் பின்னா் உலகில் ஏற்பட்ட மிகவும் முக்கி யமான வரலாற்று நிகழ்ச்சியாக சீனாவில் 1966களில் இடம்பெற்ற மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியைக் கொள்ள லாம். இக்கலாச்சாரப் புரட்சியானது தோழர் மாசேதுங் தலைமையில் சீனக் கம்யுனிஸ்ட் கட்சியின் நெறிப்படுத்தலின் கீழ் சுமார் பத்தாண் டுகளுக்கு மேலாக இடம்பெற்றது. பரந்துபட்ட மக்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்ட இப்புரட்சியானது சீனா வில் முதலாளித்துவ மீட்சிக்கு இடங்கொடாமல் சோஷலிசப் புரட்சியை உறுதியாக முன்னெடுத்துச் சென்றது. சீனாவில் இடம்பெற்ற இவ் மகத்தான பாட்டாளிவர்க்கக் கலாச்சாரப் புரட்சிபோல் அவதூறு பொழியப்பட்ட வேறெதுவும் நடை பெறவில்லை என்றே கூறவேண்டும். மாபெரும் தலைவரும் கலாச்சாரப் புரட்சியை தொடங்கி வைத்தவருமான தோழர் மாசேதுங் அவர்களை முதலாளித்துவவாதிகள் எல்லா விதத்திலும் திட்டினார்கள். இக்கலாச்சாரப் புரட்சியை "பைத்தியக்காரத்தனத்தை அண்மிய கேலி நாடகம்" என்று மேற்கத்திய முதலாளித்துவப் பத்திரிகைகள் விமர்சித்தன. சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் கீழ் இருந்த திரிபு வாதிகள் "இது சோஷலிசப் புரட்சியைக் கொச்சைப்படுத்தும் செயல்" எனக் குறிப்பிட்டனர். ஆனால் உலகெங்கும் இருந்த புரட்சிவாதிகள் "சீனாவில் இடம்பெற்றது உலகில் நடை பெற்ற மகத்தான அறிவு ஜீவிகளின் கொந்தளிப்பு" எனக் கருதினார்கள். எனவே இக்கருத்துக்கள் ஒருவருடைய வர்க்க நோக்கைப் பொறுத்து ஏற்படுகின்றது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

ரஷ்சியப் புரட்சியின் வெற்றிக்குப் பின்னர் தோழர் லெனின் பின்வருமாறு கூறினார். " புரட்சியின்போது தூக்கி எறியப்பட்ட முதலாளித்துவ வர்க்கத்தின் எதிர்ப்பு பல மடங்காக அதிகரிக்கின்றது. அதன்பலம் அதனைத் தூக்கி எறிந்த பாட்டாளிவர்க்கத்திலும் பார்க்க பெரிதாக இருக்கிறது. ஏனெனில் முதலாளித்துவ வர்க்கத்திடம் இன்னும் பணமும் அறிவும் அதிகார நிர்வாகப் பழக்கமும் வெளிநாட்டு மூலதன த்துடனான தொடர்பும் இருக்கின்றன. மக்கள் மனங்களில் முதலாளித்துவ வர்க்கத்திற்கு சாதகமாக பழக்கத்தின் சக்தி யும் இருக்கின்றது. எனவே மக்களின் பழக்க வழக்கங்களில் மாற்றம் ஏற்படும்வரை புரட்சி உத்தரவாதமாகிவிட்டது என்று கூறமுடியாது." தோழர் லெனினின் கூற்றில் இருந்தும் சீனாவி னதும் மற்ற நாடுகளின் புரட்சியின் அனுபவங்களில் இருந் தும் தோழர் மாசேதுங் அவர்கள் "சோஷலிசத்திலிருந்து கம்யுனிசத்திற்குச் செல்லும் முழு வரலாற்றுக் காலகட்டத்தி லும் வர்க்கங்களும் வர்க்கப் போராட்டங்களும் நிலவும் எனவும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் கவிழ்க்கப்படும் ஆபத்து இருக்கும்" எனவும் சுட்டிக்காட்டினார்.

முதலாளித்துவவாதிகள் தாம் இழந்த சொர்க்கத்தை மீண்டும் பெறக் கனவு காண்கின்றனர். சீனக் கம்யுனிஸ்டுகள் தமது மகத்தான தலைவர் மாசேதுங் வழிகாட்டலில் தம்மை எதிர்நோக்கிய ஆபத்தை உணர்ந்தார்கள். சோவியத் ரஷ்சியாவில் குருஷேவ் தலைமையில் முதலாளித்துவ மீட்சி இடம்பெற்றதுபோல் சீனாவில் ஏன் ஏற்படாது என்ற கேள்வியை எழுப்பினார்கள். எனவே இதைத் தடுப்பதற்கு ஒரே வழி மக்கள் இதை எதிர்த்துப் போராட அவர்களுக்கு ஒரு ஆயுதத்தை அளிப்பதாகும் எனக் கருதினார்கள். சீனாவில் குருஷேவ்கள் தோன்றுவதைத் தடுக்க, சீனாவில் முதலாளித்துவ மீட்சி ஏற்படுவதைத் தடுக்க நூறு கோடி சீன மக்களையும் மார்க்சிய-லெனிய மாசேதுங் சிந்தனையால்

ஆயுதபாணியாக்க அவர்கள் நடவடிக்கை எடுத்தார்கள்.

அரசியல் அதிகாரத்தை கைப்பற்ற முயலும் பிற்போக்கு வர்க்கங்கள் யாவும் முதலில் மனிதரின் சிந்தனையைப் பின்னடையச் செய்து சித்தாந்தத் துறையில் தயாரிப்புச் செய்து பின்னர் இதனைப் பயன்படுத்தி அரசியல் அதிகாரத் தைக் கைப்பற்றுகின்றனர். எனவே அரசியல் எதிப்புரட்சிக்கு முன்னர் சித்தாந்த எதிர்ப்புரட்சி ஏற்படுவதால்தான் சீனாவில் முதலில் கலாச்சாரத்துறையில் புரட்சி மேற்கொள்ளப்பட்டது.

1966ம் ஆண்டு மே மாதம் 10ம் தேதி 'விடுதலை சேனை'த் தினசரியும் ஷங்காய் தினசரி 'வென்குயேபா'வும் அரசியல் சித்தாந்த கலாச்சாரத் துறைகளில் மகத்தான கலாச்சாரப்புரட்சி ஒன்றை நடத்தும் பிரச்சனைகளை எழுப் பின. அதன் பின்னர் மே 25ம் தேதி பிற்போக்கான முதலா ளித்துவ வர்க்க கல்வி இயல் அதிகாரிகளை விமர்சிக்கும் முதலாவது சுவரொட்டி பீக்கிங் பல்கலைக்கழகத்தில் தோன்றியது. அப்பல்கலைக்கழகத்தின் தலைவர் ஒரு திரிபுவாதி என அம்பலப்படுத்தப்பட்டார். ஜீன் 2ம் தேதி பீக்கிங் வானொலி இந்தச் சுவரொட்டியை ஒலிபரப்பியது. மக்கள் தினசரியும் செங்கொடியும் தலையங்கங்கள் எழுதி அதைப் பாராட்டினர். இவ்வாறுதான் சமருக்கான சங்கநாதம் தோன்றியது. ஆம்; மகத்தான கலாச்சாரப்புரட்சி ஆரம்பித்து விட்டது. முதலாளித்துவ பாதையை எடுக்க விரும்பும் அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு எதிராகப் போராடி அவர்களை துாக்கியெறியும்படியும், பிற்போக்கான கல்வி இயல் அதிகாரிகளை விமர்சித்து நிராகரிக்கும்படியும், சோஷலிசப் பொருளாதார அடிப்படைக்கு பொருந்தாத மேல மைப்பில் உள்ள அனைத்து விடயங்களையும் விமர்சிக்கும் படியும், சுரண்டும் வர்க்கங்களின் பழைய சிந்தனைகள், பழைய பழக்கங்கள், பழைய வழக்கங்கள், பழைய கலாச்சா ரம் ஆகிய நான்கு பழையவற்றையும் அழித்தொழிக்கும் படியும், பாட்டாளிவர்க்கத்தின் புதிய சிந்தனைகள், புதிய பழக்கங்கள், புதிய வழக்கங்கள், புதிய கலாச்சாரம் ஆகியவற்றை ஸ்தாபிக்கும்படியும் மக்களுக்கு அறை கூவல் விடப்பட்டது.

1966ம் ஆண்டு ஆகஸ்டில் கட்சி மத்திய கமிட்டி பாட்டாளி வர்க்க கலாச்சாரப்புரட்சியின் 16 அம்ச அறிக்கை யை வெளியிட்டது. அப்பொழுது சில கல்லூரிகளில் செங்காவலர்கள் தன்னிச்சையாக தோன்றினார்கள். தோழர் மாசேதுங் அவர்கள் இந்த செங்காவலர் ஸ்தாபனம் மூலம் கலாச்சாரப்புரட்சியை கொண்டு நடத்த முடியும் என்று கண்டுபிடித்தார். ஆகஸ்டு 18ம் தேதி தோழர் மாசேதுங் அவர்கள் பீக்கிங்கில் புரட்சிகர மாணவர்களையும் ஆசிரியர் களையும் பார்வையிட்டதுடன் செங்காவலர் நாடாவை தாமும் அணிந்து செங்காவலர்கள் உருவாக்கத்திற்கு பகிரங்க அங்கீகாரம் வழங்கினார். அப்பொழுது முதல் கலாச்சாரப் புரட்சி காட்டாற்று வெள்ளம் போல் தளைகளை எல்லாம் தாண்டிப் பாய்ந்தது.

பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் முதலாளித்துவ வர்க்க கல்வி இயல் அதிகாரிகள் அரண் கொண்டிருந்தார்கள்.



மாணவர்களை கலாச்சாரப்புரட்சிக்கு அழைக்கும் சுவரொட்டி. அதில் உள்ள வாசகங்களின் ஆங்கில மொழி பெயர்ப்பு: **"We must learn from our highest director, We must carry out that faithfully, and truthfully and courageously."**

அவர்கள் விவசாயிகள் தொழிலாளர்கள் மத்தியில் இருந்து வந்த மாணவர்களை வெறுத்தார்கள். சீமான், சீமாட்டிகள் போல் பேசி நடக்கமுடியாத மாணவர்களை வீட்டுக்கு அனுப்பினார்கள். இந்த அதிகாரிகள் பரீட்சைகளை வழிபட்டார்கள். தோழர் மாசேதுங் இதனை ஒரு கொடிய முறை என வர்ணித்தார். எனவேதான் செங்காவலர்கள் தமது போராட்டங்களையும் சீர்திருத்தங்களையும் முதலில் கல்லூரிகளிலும் பாடசாலைகளிலும் ஆரம்பித்தார்கள். கல்லூரிகளிலும் பாடசாலைகளிலும் ஆரம்பித்த போராட்டத்தைப் பின்னர் சமுதாயத்திற்கு வீதிகளுக்கு பெரிய அளவில் கொண்டு வந்தார்கள். அவர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகால பழைய சமுதாயம் விட்டுச் சென்ற கெட்ட விடயங்களைத் துடைத்தெறிந்தார்கள்.

நிலப்பிரபுக்கள் எதிர்ப்புரட்சிவாதிகள் பல நகரங்களுக்கு தப்பியோடி அங்கு மறைந்து வாழ்ந்தார்கள். இவர்கள் எதிர்ப்புரட்சியின் வெற்றிக்காக காத்து இருந்தார்கள். இவர்கள் தமது நிலப்பட்டாக்களை இரகசியமாக பாதுகாத்து வைத்திருந்தார்கள். செங்காவலர்கள் இந்தப் பட்டாக்களை மட்டுமன்றி தங்க, வெள்ளிகட்டிகள், துப்பாக்கிகள், கத்திகள், நாணயங்கள் முதலியவற்றையும் கைப்பற்றினார்கள். இவ்வாறு தமது ஏஜண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டதையொட்டி ஏகாதிபத்தியவாதிகளும் திரிபுவாதிகளும் கூச்சல் போட்ட தைப் புரிந்துகொள்வது கஸ்டமல்ல.

ஆரம்ப நாட்களில் செங்காவலர்கள் பாட்டாளிவர்க்க தரத்திற்கு ஒத்துவராத வகையில் தலைமயிரையும் உடை களையும் அழகுபடுத்துகின்றவர்களுக்கு எதிராக நிர்ப்பந்தத் தைப் பாவித்தார்கள். ஆனால் இது நீண்டகாலம் நீடிக்க வில்லை. நிர்ப்பந்தத்திற்குப் பதிலாக அறிவுறுத்தும் முறை யைப் பயன்படுத்தும்படி அவர்களுக்கு கூறப்பட்டது. நிர்ப்பந் தம் தோலைத்தான் தொடும். ஆனால் அறிவுறுத்தல் உள்ள த்தைத் தொடும் என அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. செங்காவலர்கள் வன்முறையில் ஈடுபட்டதாக ஏகாதிபத்திய வாதிகள் கூச்சல் போட்டார்கள். ஆனால் உண்மையில் செங்காவலர்கள் ஈடுபட்டதிலும் கூடுதலான வன்முறை

அவர்களுக்கு எதிராக பாவிக்கப்பட்டது. செங்காவலர்கள் எவரையும் கொல்லவில்லை. ஆனால் எதிர்ப்புரட்சிவாதிகள் பல செங்காவலர்களைக் கொன்றார்கள்.

கலாச்சாரப்புரட்சி ஏன் அழகு சாதனங்கள், ஆடை அணிகள், சிகை அலங்காரங்கள், வீதிப்பெயர்கள் முதலியன பற்றிக் கவலைப்பட்டது என்பதைச் சிலர் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கின்றார்கள். அழகு சாதனங்கள், ஆடை அணிகள், மிகுதியான சிகை அலங்காரங்கள் ஆகியவற்றை முதலாளிகள் பெரிதும் ஊக்கிவிக்கின்றார்கள். இவை லாபத்தின் மூலங்களாக இருப்பதோடு மக்களை பெரிதும் சிந்திக்க விடாமல் தடுத்து வாழ்க்கையின் அற்பமானவைகளுக்கு கவர்ந்திழுக்கும் பெரும் வழிமுறைகளாக இருக்கின்றன. மக்களைப் பெருமளவில் பிடிப்பில் வைத்துள்ளன. மக்களை முதலாளித்துவத்தின்பால் இழுக்க உதவுகின்றன. அத்துடன் முதலாளித்துவத்தையும் அதன் செல்வாக்கையும் பராமரிக்க உதவுகின்றன. இந்த செல்வாக்குகளுக்கு எதிராக செங்காவலர்களும் சீனமக்களும் போராடியது சரியானதே. 'எளிய வாழ்க்கை உயரிய நோக்கம்' என்ற பழைய கூற்று இதைத்தான் குறிக்கின்றது.

கலாச்சாரப்புரட்சியின் போது மாணவர்கள் பகுதி நேரம் படித்தார்கள். பகுதி நேரம் வேலை செய்தார்கள். படிப்பு நேரம் குறைக்கப்பட்டு கல்வி உற்பத்தியுடன் இணைந்ததாக அமைக்கப்பட்டது. தொழிற்சாலைகளும் கம்யூன்களும் பாடசாலைகளை நடத்த ஊக்கம் அளிக்கப்பட்டது. தொழிலாளர்கள் விவசாயக் கம்யூன்களில் குறிப்பிட்ட காலம் (6 மாதங்கள்) வேலை செய்யவும் அதேபோல் விவசாயிகள் தொழிற்சாலைகளில் குறிப்பிட்ட காலம் வேலை செய்யவும் ஒழுங்குகள் செய்யப்பட்டன. இவை உடல் உழைப்பிற்கும் மூளை உழைப்பிற்கும் இடையிலான வித்தியாசத்தை குறைக்கும் நோக்கம் கொண்ட சீர்திருத்தங்கள். அறிவு ஜீவிக்கும் - தொழிலாளிக்கும், கிராமத்திற்கும் - நகரத்திற்கும் இடையிலான வித்தியாசங்களை குறுக்கும் நோக்கம் கொண்ட சீர்திருத்தங்கள். இந்த உலகில் வெகுமதி உள்ள எல்லாப் பொருட்களையும் விவசாயிகளும் தொழிலாளர்களும் தான் உருவாக்குகின்றார்கள். ஆகவே கலையும் இலக்கியமும் அவர்களுக்கே சேவை புரிவதாக இருக்க வேண்டும். எனவே இச்சேவையைப் புரிவதற்காக கலைஞர்களும் இலக்கியவாதிகளும் அவர்கள் மத்தியில் சென்று அவர்களுடைய வாழ்க்கையைப் புரிந்துகொள்ள வேண்டும். விவசாயிகளின் சேறு சகதியைப் பூசித்தான் இதனை அவர்கள் செய்யமுடியும்.




கலாச்சாரப்புரட்சி உண்மையில் மக்களின் மனங்களை வெற்றி கொள்வதற்கானதாகும். முதலாளித்துவவாதிகளும் ஏகாதிபத்தியவாதிகளும் மக்களின் மனங்களைக் கைப்பற்ற ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணி நேரமும் மிகுந்த பணச்செலவில் ஒழுங்கான இயக்கம் ஒன்றை நடத்தி வருகின்றனர்.அவர்களின் பத்திரிகைகளும் வானொலி தொலைக்காட்சிகளும் சினிமாக்களும் நாடகம் இலக்கியம் அனைத்தும் ஒவ்வொரு நிமிட நேரமும் முதலாளித்துவப் பிரச்சாரத்தை நடத்தி மக்களைத் தாக்கிக் கொண்டிருக்கின்றன. எனவே இவற்றுக்கு எதிராக சீன மக்களின் மனங்களில் பாட்டாளி வர்க்க சிந்தனையை வெற்றிபெறச் செய்வதற்கான முயற்சியாகவே மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி அமைந்தது. இப்புரட்சி உலகில் சோஷலிசத்தின் கீழ் வர்க்கப் போராட்டம் நடத்திய முதலாவது உதாரணமாகும். இந்த உக்கிரமான போராட்டம் பல கட்டங்களில் அது வன்முறையான வடிவங்களை எடுத்தது. ஏகாதிபத்தியவாதிகளும் திரிபுவாதிகளும் சீனாவில் இருந்த அவர்களின் ஏஜண்டுகளும் சீனாவைப் புரட்சிப் பாதையில் இருந்து திசைதிருப்பிவிட சதி செய்தபடியாலும் அதற்காக அவர்கள் எந்த வழிமுறைகளிலும் தஞ்சமடைய தயாராக இருந்தபடியாலும் இந்த வன்முறை வடிவம் தவிர்க்கமுடியாதது என்பது புரிந்துகொள்ளக் கூடியதே.

தோழர் மாசேதுங் அவர்கள் கலாச்சாரப்புரட்சியின் இரண்டாம் ஆண்டில் "சுயநலத்தை எதிருங்கள்", "திரிபுவாதத்தை விமர்சியுங்கள்" என்ற இரட்டை சுலோகத்தை முன்வைத்தார். உண்மையில் இந்த இரண்டு கோஷங்களும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவை. தனிநபரின் நலனுக்கு மேலான கூட்டுநலனை முன்வைக்காமல், சுயநலன்களை வென்று அடக்காமல், குறுகிய நலன்களுக்கு மேலாக சீனாவின் நலன்களை முன்வைக்காமல், சீனாவின் நலன்களுக்கு மேலாக முழு உலகத்தினதும் நலன்களை முன்வைக்காமல் திரிபுவாதத்தை தோற்கடிப்பது சாத்தியமில்லை. கலாச்சாரப்புரட்சியின் போது தோழர் மாசேதுங் அவர்களின் வழிகாட்டலில் முதல்தடவையாக சீனாவில் சுயநலனை எதிர்க்க கற்றுக்கொண்ட, தனிநபரின் நலனுக்கு மேலாக கூட்டுநலனை முன்வைக்க கற்றுக்கொண்ட, மற்றவர்களுக்கு இலேசான பணியைவிட்டு பளுவான பணியைத் தாமே ஏற்றுக்கொள்ள கற்றுக்கொண்ட, தனிப்பட்ட புகழ் பெருமை பொருளாதார நலன்கள் இலேசான மென்மையான வாழ்க்கை ஆகியவற்றை நாடி ஓடாமல் கூட்டு நலனுக்காக வேலை செய்யக் கற்றுக்கொண்ட, தன்னுடைய ஊர், மாகாணம் பற்றி மட்டும் சிந்திக்காமல் முழு சீனாவையும் பற்றிச் சிந்திக்க கற்றுக்கொண்ட புதிய சந்ததி மக்கள் தோன்றினார்கள். இது உலகில் இந்தப் பெரும் பகுதியில் மனிதனின் சிந்தனையில் ஏற்பட்ட மாபெரும் புரட்சியாகும்.

மகத்தான பாட்டாளிவர்க்க கலாச்சாரப்புரட்சி பத்தாண்டு காலம் சீனாவில் முதலாளித்துவத்தின் மீட்சியை தடுத்து நிறுத்தியது. இப்பாட்டாளிவர்க்க கலாச்சாரப்புரட்சி இறுதியில் 1976இல் தோழர் மாசேதுங் இறந்த பின்னர் தோல்வி கண்டது. ஆனால் இதனால் இந்த நிகழ்ச்சியின் முக்கியத் துவம் குறைந்து விடவில்லை. இவ்எதிர்ப்புரட்சியின் அச்சுறுத்தல் பற்றி தோழர் மாசேதுங் அறிந்திருந்தார். ஒரு கலாச்சாரப்புரட்சி போதாது. கம்யூனிச சமுதாயம் தோன்றுவ தற்கு முன்னர் இன்னும் பல ஏன் நூற்றுக்கணக்கான பாட்டாளிவர்க்க கலாச்சாரப்புரட்சிகள் தேவையாக இருக்கும் என்று அவர் கூறி இருக்கிறார். அவர் கூறியது தீர்க்கதரிசன மாக அமைந்துவிட்டது. சீனாவில் எதிர்ப்புரட்சி வெற்றி பெற்றதிற்கு காரணம் முதலாளித்துவ மீட்பு சக்திகள் பலமானவையாக அமைந்ததாகும். தோழர் மாசேதுங் இருக் கும் வரை அவர்களால் முன்னுக்கு வர முடியவில்லை. நீடித்தகால சீனப்புரட்சியையும் பின்னர் சீனாவில் சோஷலிச நிர்மானத்தை வெற்றிக்கு இட்டுச் சென்றதில் தோழர் மாசேதுங் அவர்கள் வகித்த தனிப்பட்ட பாத்திரம் காரணமாக அவருடைய தனிப்பட்ட அரசியல் செல்வாக்கு மிகவும் பிரமாண்டமானதாக இருந்தது. அவரை எதிர்க்க துணிந்தவர் கள் வெற்றி பெற முடியவில்லை. மிகவும் நெருக்கடியான தருணத்தில் துரதிருஷ்டவசமாக தோழர் மாசேதுங் இறந்த படியால் எதிர்ப்புரட்சிவாதிகளுக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அதை அவர்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டனர்.



தோழர் மாசேதுங் (படம்) அவர்கள், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் மாத்திர மல்ல, மகத்தான சீனப்புரட்சி யை வெற்றிக்கு இட்டுச் சென்ற மாமனிதர் மாத்திர மல்ல, குழப்பங்கள் சூழ்ந்த நிலைமையில் இருந்து இன்றைய சீனாவை உரு வாக்கிய மகத்தான தலைவர் மாத்திரமல்ல, எமது யுகத்தின் மாபெரும் மார்க்சிய - லெனினியவாதி. மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோரின் பணியின் வாரிசு. அதைத் தொடர்ந்து நடத்தியவர். உலகில் இத்தகைய மகோன்னதமானவர் வேறு யாரும் இல்லை. வேறு எவரும் தனது வாழ்க்கைக் காலத்தில் இத்தகைய உலகளாவிய அன்பையும் ஆதரவையும் விசுவாசத்தையும் பெற்றிருக்கவில்லை. அவரை நூறு கோடி சீனமக்களும் ஏறக்குறைய தெய்வமாக நேசித்தது மாத்திரமல்ல உலகம் பூராவும் உள்ள கோடிக் கணக்கான அடக்கியொடுக்கப்பட்ட மக்களும் நேசித்தார்கள்.

மார்க்சிய, லெனினிய, மாசேதுங் சிந்தனைகளை உயர்த்திப் பிடிப்போம்.

திரிபுவாதத்தை எதிர்த்து புதிய ஜனநாயகப்புரட்சியை முன்னெடுப்போம்.❑


தேசம் சஞ்சிகை தற்பொழுது இணையத் தளத்திலும் வெளியிடப்படுகிறது.

**www.thesamnet.com**

என்ற இணையத்தளத்தில் தேசம் சஞ்சிகையின் இணைய வடிவத்தை பார்வையிடலாம்.

தேசம்நெற் இணையத்தளத்தில் பின்வரும் அம்சங்கள் இணைக்கப்பட உள்ளன :

**செய்திகள்**

புலம்பெயர்ந்த தமிழர் செய்திகள்

**பிரசுரகளம்**

நூல் வெளியீட்டு நிகழ்வுகள் மற்றும் நூல் விமர்சனம்

**சிறுவர் தேசம்**

இளவயதினரின் ஆக்கங்கள்

**கருத்தரங்கு**

விவாதங்களுக்கான களம்

இன்னும் பல்வேறு அம்சங்கள் காலத்தின் தேவைக்கேற்ப இணைக்கப்பட உள்ளது. இவ்இணையத்தளம் பற்றிய உங்கள் ஆலோசனைகளையும் அதற்கான ஆக்கங்களையும் உங்களிடம் இருந்து எதிர்பார்கிறோம்.

இவ்இணையத்தளத்தை உங்கள் தொடர்புகளில் உள்ளவர்களுக்கும் அறிமுகப்படுத்தவும்.

தேசம்நெற்றின் இணைப்பை வேறு இணையத்தளங்களில் வழங்க முன்வருபவர்கள் வரவேற்கப்படுகின்றனர். அவர்களுக்கு எமது நன்றிகள்.

தொடர்புகளுக்கு
editor@thesamnet.com

P O Box 35806
E11 3JX, London, UK




# எதிர் முனை

தேசம் ஏப்ரல் இதழில் ஸ்டாலின் பற்றிய கருத்துக்களை, அவதூறுகளுக்கு எதிராக எஸ் பாலச்சந்திரன் வைத்துள்ளார். விவாதம் தொடரும் ஆதரவு மற்றும் எதிரான கருத்துக் களை அனுப்பலாம் என்று கூறியிருந்தீர்கள். எதிரானவை என்றால் ஹெர்ஸ்ட் பரம்பரைக ளின் அவதூறுகள்தான் வந்து நிற்கும். எனவே தயவுசெய்து மீண்டும் ஸ்டாலின் மீதான அவதுறுகளை பிரசுரிக்காதீர்கள்.

இங்கு தமிழகத்தில் மதன் என்கிற விசித்திர ஜந்து தோழர் ஸ்டாலினை வக்கிரமுறையில் அவதூறு செய்து எழுதியிருந்தார். அச்சமயம் எமது புரட்சிகர அமைப்புகளின் சார்பாக. 'ஜுனியர் விகடன்' அலுவலகத்திற்கு முன் ஆர்ப்பாட்டமும் மக்களிடம் 'மதன் மாமாவை' அம்பலப் படுத்தி சுவரொட்டியும் ஒட்டினோம். புதிய ஜனநாயகத்தில் நவ - 2004 இலும் புதிய கலாச்சாரத்தில் மார்ச் - 2000 முதல் யூன் - 2000 வரையும் ஸ்டாலினுக்கு எதிரான அவதூறுகளை அம்பலப்படுத்தி கட்டுரைகள் வெளிவந்து உள்ளன. இவற்றை மறுபிரசுரம் செய்வதன் மூலம் அவதூறுகளை அம்பலப்படுத்தவும். அவதுறுகளை உண்மையென்றெண்ணியவர்களை தெளிவுபடுத்தவும் இயலும் என்றும் நம்புகின்றோம்.

ஆ-கு : மேற்குறிப்பிட்ட புதிய ஜனநாயகம், புதிய கலாச்சாரம் ஆகியவற்றில் வெளிவந்த கட்டுரைகள் எமக்குக் கிடைக்கப்பெற்றது. மேலதிக வாசிப்புகளை விரும்புபவர்கள் அவற்றை வாசிக்க விரும்பினால் தேசத்துடன் தொடர்பு கொள்ளும் பட்சத்தில் அவற்றின் பிரதிகளை நாம் அனுப்பி வைப்போம்.

◆◆◆



சேனன்,

லெய்டன், லண்டன்

கடந்த தேசம் இதழ்களில் அரசியல் கொலைகளுக்கு எதிராகவும் அரசியல் கைதிகளுக்கு ஆதரவாகவும் குரல் கொடுத்த சூடு ஆறமுதல் 'தோழர்' பாலன் அரசியல் கொடூரங்களின் மூலம் கொடூர சர்வதிகாரத்தை கட்ட மைத்த ஸ்டாலின் புகழ்பாடி அர்த்தத்தை குலைத்துள்ளார்.

தமிழ்நாட்டு பார்ப்பனிய பத்திரிகைகளின் மேற்கோள்க ளைப் பற்றியோ அல்லது தினமுரசு போன்ற வியாபாரப் பத்திரிகைகளைப் பற்றியோ பாலனோடு முரண்பட எமக்கு எந்தவித காரணங்களும் எமக்கில்லை. இருப்பினும் அவர்களை அடிக் கும் சாக்கில் 'தோழர்' எமது மூஞ்சிக்கும் ஒரு குத்துவிடப் பார்க்கிறார்.

தனிநபர் வழிபாட்டுக்கும் வர்க்கப் போரா ட்டத்துக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. ஸ்டாலின் பிடுங்கினார், துள்ளினார் என்ற பிதற்றலுக்குப் பின்னால் மில்லியன் கணக் கான தொழிலாளர்களின், வறிய மக்களின் உழைப்பும் உயிரும் மறைக்கப்படுகின்றது.

பாலன் போன்றவர்களின் போக்குகளை முதலாளிகள் மற்றும் புத்திஜீவிகள் விரும்புவார்கள் என்பதில் ஐயமில்லை. அவர்கள் விரும்பும் போக்கும் இதுதான். ஸ்டாலினின் ரஸ்யா தான் சோசலிசத்தின் உச்சம். இதற்குமேல் சோசலிசத்தக்கு எவ்வித அரசியலும் இல்லை. அர்த்தமும் இல்லை. ரஸ்யாவை சிதறடித்ததன் மூலம் கம்யுனிசக் கனவுகள் உடைத்தெறியப்பட்டுவிட்டது என்பதை நம்ப வைத்து சுரண்டலை துரிதப்படுத்தவும் நியாயப்படுத்தவும் அவர்கள் ஆசைப்படுகிறார்கள்.

படுகொலைகள், பட்டினிச்சாவுகள் என்பதெல்லாம் கான்டுவெஸ்ட் உருவாக்கிய புனைக் கதைகள் என்று இன்றைக்கு ஸ்டாலின் படுகொலைகள் பற்றி எழுதக் கூடிய விரல்விட்டு எண்ணக் கூடியவர்களில் ஒருவராகி உள்ளார் பாலன்.

ஒடுக்கப்படும் சுரண்டப்படும் மக்களுக்காக சிந்திப்ப தாக நினைக்கும் அல்லது அவ்வாறு கருத ஆசைப்படும் உங்களின் உண்மைத் தத்துவத்தின் எல்லை - வெறும் வறட்டுத் தத்துவத்தில் முட்டி மொட்டையாக நிற்கிறது. வரலாற்று பொருள் முதல் வாதக் கண்ணோட்டத்தில் உலகை பார்க்க வேண்டுமென்றால் முதலில் கண்ணைத் திறவுங்கள்.

அன்றும் சரி, இன்றும் சரி முதலாளித்துவம் முக்கி, முக்கி அனைத்து இடதுசாரிகளையும் திட்டி வருவதும் புளுகு மூட்டைகளை ஏற்றி வருவதும் புதினமானதொன் றல்ல. இன்றைக்கு உலகில் மாற்றத்தைக் கொண்டு வருவது எப்படி என்பது தான் முக்கியமான விடயம். ஜோர்ஜ் புஸ் எதிர்ப்பை விட, ஈராக் யுத்த எதிர்ப்பை விட உலகத் தொழிலாளர்களுக்கும் வறிய மக்களுக்கும் சாதகமான உலக மாற்றத்தை உருவாக்குவதும் - ஈராக் கைப் பொறுத்தவரையில் அம்மக்களுக்கு உண்மையான சுதந்திர ஜனநாயக்தை உருவாக்குவதும் மிக முக்கியம்.

முதலாளித்துவ எதிர்ப்பு என்ற ஒற்றை வாதம் மட்டும் வெளிச்சம் தரும் என்று பழமைப் படிப்பில் வரலாற்றுக் குப்பைகளை வழிபட்டுக் கொண்டு இவர்கள் இருட்டில் தான் வாழ்கிறார்கள்.

இவர்கள் மட்டுமல்ல இடதுசாரிகள் என்று பிசத்திக் கொள்ளும் பல்வேறுவகை குறுங் குழுவாதிகளும் சேர்ந்து

தான் இன்று ஏமாற்றுவித்தை செய்து வருகிறார்கள். ஸ்டாலினிஸ்டுக்கள் இன்று அழிந்து கொண்டிருக்கும் ‘குட்டிக் கிளப்’.

ஆனால் இன்றைக்கு இடதுசாரிகள் மத்தியில் மாயா ஜாலங்கள் காட்டி மீண்டும் மனித சமுதாயத்துக்கான விடிவுக்கு முட்டு வைக்கும் செயல்களில் ஈடுபடுவது இந்த நான்காம் அகிலத்துடன் அடையாளப்பட்டுக் கொள்வதாகக் கூறும் - தம்மை றொட்ஸ்கிஸ்டுகளாகக் கருதும் விடாக்கண்டர்கள்.

இந்த றொட்ஸ்கி வழிபாட்டாளர்களின் முக்கிய பணி புனிதத்தை பேணுதல். நான்காம் அகிலப் புனிதத்தைப் போற்றி காப்பாற்றுவதன் தலையாய நோக்கில் அவர்கள் ஜெகோவாவின் சாட்சிகளுக்கு இலக்கனமானவர்கள். இவர்களின் திருகுதாளங்களை தனியான ஒரு மூலம் பார்ப்போம்.

இறுதியாக நண்பர்களுக்கு சொல்லக் கூடியது ஒன்றுதான். உங்கள் தோழமைக்கு நன்றி. உங்களை பொறுத்தக் கொள்ளும் அளவுக்கு எமக்கு இயேசுத்துவம் காணாது.

◆◆◆

ஏப்ரல் தேசம் இதழில் ‘பிணம் செய்யும் தேசம்’ என்ற இளைய அப்துல்லாவின் கவிதை நூலையே தலைப் பாகக் கொண்டு ஆசிரியர் தலையங்கம் தீட்டியிருந்தீர்கள். ‘பிணம் செய்யும் தேசம்’ வெளியீட்டு விழாவில் நானும் கலந்து கொண்டிருந்தேன். அதில் கலைஞனுக்குள்ள சொல்லாட்சி குறித்து இளைய அப்துல்லா தேர்ந்தெடுத்த தலைப்பினை - பெயரினை நியாயப்படுத்தினேன். நீங்களும் அதை நியாயப்படுத்தியே எழுதியிருந்தீர்கள்.

எது எவ்வாறெனினும் எனது இக்கடிதத்தின் நோக்கம் யாதெனில், இளைய அப்துல்லா நீங்கள் எழுதியதைப் போல கிழக்கிலங்கையை சேர்ந்தவரல்ல. வடக்கிலே இருந்து புலிகளால் வெளியேற்றப்பட்ட முஸ்லீம்களில் ஒருவர். வடக்கைத் தாயகமாகக் கொண்டவர். மறு இதழில் திருத்துவீர்கள் என எதிர்பார்க்கிறேன். வடக்கிற்கு மீளும் கவிதைகள் அவரது சொந்த சமூக அபிலாசைகளாகும். அதுவே முஸ்லீம்களின் நிலைப்பாடும் ஆகும்.



எஸ் எம் எம் பசீர்
( Attorney at Law & Solicitor )
ரூற்றிங், லண்டன்

ஆசிரியர் குறிப்பு : கிழக்கிலங்கையிலும் வாழ்ந்ததை மட்டும் கருத்தில் எடுத்து, ‘கிழக்கிலங்கைக் கவிஞன் இளைய அப்துல்லா’ என கடந்த தேசம் இதழில் குறிப்பிட்டமைக்கு மிகவும் வருந்துகிறோம். சுட்டிக்காட்டி தெளிவுபடுத்தியமைக்கு நன்றி. ❑

---

7ம் பக்கத் தொடர்ச்சி ...... பொதுக்கட்டமைப்பும் முஸ்லீம்களும்

சட்டவாதம் ஒன்றையும் முன்வைத்ததாகக் கூறப்படுகிறது. ‘யுத்தநிறுத்தத்தைத் தொடர்ந்த இலங்கை அரசும் புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் இரு தரப்பினரிடையேயானது. இப்புதிய ஒப்பந்தம் முதலில் செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் தொடர்ச்சி அல்லது அனுபந்தம்’ என்பதே அது. அதேவேளை பொதுக்கட்டமைப்பு (இலகுவான புரிதலுக்காக பொதுக்கட்டமைப்பு என்ற பதம் பிரயோகிக்கப்படுகிறது.) தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரிவு (2) (f). “23 பெப்ரவரி 2002 இலங்கை அரசும் புலிகளும் செய்துகொண்ட யுத்தநிறுத்த உடன்பாட்டினை தப்பபிப்பிராயத்தினை அல்லது அவ்வொப்பந்தத்தின் நிபந்தனைகளை மாற்றுவதாக அமைந்துவிடக் கூடாது” என்று குறிப்பிடுகிறது.

மேலும் இருதரப்பினரையும் புலிகள் - அரசு என்று வரையறை செய்துள்ள ஒப்பந்தம் பங்காளிகளல்லாத போதும் நிர்வாகக் கட்டமைப்புகளில் அவர்களது பிரதிநிதித்துவம் பற்றி கூறுமிடங்களில் முஸ்லீம் கட்சிகள் நியமிக்கின்ற அங்கத்தவர்கள் என்று பொதுவாகவே குறிப்பிட்டுள்ளது. இது முஸ்லீம்களைப் பொறுத்தவரை காணப்படுகின்ற ஜனநாயகத்தன்மையையும் ஏகபிரதிநிதித்துவத்திற்கு எதிரான பரந்துபட்ட முஸ்லீம்களின் அரசியல் பிரதிநிதித்துவங்களையும் அதேவேளை முஸ்லீம்களுக்குள் உள்ள திட்டவட்டமான பொதுவான உடன்பாடு காணப்படாத வேறுபாட்டினையும் கோடிட்டு காட்டுகிறது.

எவ்வாறெனினும் அரசு - புலி என்பதில் தமிழ் மக்களுக்குள் உள்ள ஜனநாயக அரசியற்கட்சிகள், மனித உரிமை குறித்த அக்கறை கொண்ட அமைப்புகள், அரசில் அங்கத்துவம் வகிக்கும் மாற்று அரசியல் பிரதிநிதிகள் என்று எல்லோருமே இந்த உடன்படிக்கையால் முகவரி அழிக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் உட்பட என்பது குறிப்பிடத்தக்கது. முஸ்லிம் தரப்பினர் பல்வேறுபட்ட பிரிவினராக கட்சியினராக பல மட்ட செயற்பாடுகளில் தங்கள் பிரதிநிதிகளை நியமிக்க பொதுக்கட்டமைப்பு ஏற்பாடு செய்கின்ற ஜனநாயகத் தேர்வு தமிழர்களுக்கு மறுக்கப்பட்டிருக்கிறது என்பது வெள்ளிடைமலை.

தமிழர்களின் மாற்றுக் கருத்தினருக்கும் கட்சியினருக்கும் புலிகள் வாய்ப்பளிக்காத போது அதற்கு அரசும் துணைபோகும் போது; அரசு நிச்சயமாக இந்த ஒப்பந்தத்தினை செய்தே ஆக வேண்டிய நிர்ப்பந்தத்தினை சர்வதேச சமூகம் ஏற்படுத்தியதாக புலிகளின் தயா மாஸ்டர் கூறுகின்ற பொழுது; சர்வதேச சமூகம் முஸ்லீம்கள் குறித்து எந்த அக்கறையும் கொள்ளாது விட்டதிலேயிருந்து; முஸ்லீம்களை லட்சக் கணக்கில் விரட்டிய, கிழக்கே பள்ளிவாசல்களில், கிராமங்களில் படுகொலைகள் புரிந்த, துன்புறுத்திய புலிகளிடம் பொதுக் கட்டமைப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் அதிகாரங்களை கையளித்து; முஸ்லீம்களின் புனர்நிர்மாணங்கள், நிவாரணங்களை நிர்வகிக்க எதிர்பார்ப்பது என்பது

விசித்திரமானது. நோர்வே அனுசரணையாளர்கள் என்றுமே முஸ்லீம்களின் அரசியல் அபிலாசைகளுக்கு எதிராகவே செயற்பட்டு வருகின்றனர். ஆனால் அவ்வப்போது ஆளும் அரசின் பொம்மை முஸ்லீம் தலைவர்களையும் பிரதிநிதிகளையும் அவர்கள் சார்ந்து இருக்கின்ற கூட்டமைத்திருக்கின்ற ஆட்சித் தலைவர்களிடம் கையாளச் சொல்லி நோர்வே அனுசரணையாளர்கள் காரியங்களை சாதித்து வருகிறார்கள்.

ரணிலின் ஆட்சியில் மூன்றாம் தரப்பாக கலந்து கொள்ள அனுமதிக்கப்படாதது பற்றி; அன்று அலட்டிக் கொள்ளாத ரவூப் ஹக்கீம், இன்று மூன்றாவது தரப்பாக கலந்து கொள்ள முடியாது என்று சட்டவாதம் முன்வைப்பதும், போராட்டம் வெடிக்கும் என்று புலம்புவதும் முஸ்லீம்களின் அரசியலை அவர் பலவீனப்படுத்தியிருக்கிறார் என்பதனையே காட்டுகிறது.

பொதுக் கட்டமைப்பு உடன்படிக்கை முஸ்லீம்களுக்கு பிரச்சினையாக அமைந்தால் அதனை இடைநிறுத்தி வைப்பதாக முஸ்லீம் பிரதிநிதிகளிடம் ஜனாதிபதி வாக்குறுதி அளித்திருக்கிறார். தனது கட்சியிலுள்ள முஸ்லீம் பிரதிநிதிகளை, மக்களை திருப்திப்படுத்துவதற்காக ஜனாதிபதி முனைந்து உள்ளார் என்பதையே இதுகாட்டுகிறது. அதாவது தமிழ்ச் செல்வனை பொறுத்தவரை தனது வாக்குறுதியை ஜனாதிபதி காப்பாற்றிவிட்டு முஸ்லீம்களுக்கு ஒரு வாக்குறுதியை அளித்துள்ளார். இடைநிறுத்தம் என்பது எந்த அடிப்படையில் என்பது ஏற்கனவே உள்ள ஒப்பந்தத்தில் காணப்படுகின்ற ஒன்றாகவே உள்ளது.

புலிகள் பொதுக் கட்டமைப்பை நீண்டகால அமைப்பாக, தமிழர்கள் மீது மட்டுமல்ல வட கிழக்கில் உள்ள அனைத்து மக்கள் மீதும் தமது அதிகாரத்தினை பிரயோகிக்க ஓர் அரிய வாய்ப்பாக கருதுகிறார்கள். சுனாமியை சாதகமாக பயன்படுத்தி உதவி வழங்கும் நாடுகளின் அங்கீகாரத்தை இலகுவாக பெற்றுள்ளார்கள். ஒருவகையில் புலிகளின் போராட்டம் வெற்றி பெற்றுள்ளது.

நாடளாவிய ரீதியில் எதிர்ப்பார்ப்பாட்டம் செய்யும் ஜேவிபி முஸ்லீம்களுக்கு இடமளிக்கப்படாதது குறித்து உண்மையிலேயே நியாயபூர்வமான வாதங்களை தெற்கிலே வைத்திருக்கிறார்கள். முஸ்லீம் மக்கள் என்ன செய்யப் போகிறார்கள்? ரவூப் ஹக்கீம் இன்னொரு தேர்தல் போராட்டத்துக்கு தன்னை தயார்படுத்துவதற்கான முனைப்புடன் செயற்பட்டு வருகிறார். அதேவேளை சந்திரிகா அரசுடன் இணைந்து கொண்ட ஸ்ரீ.மு.கா எம்.பி க்கள் தங்களை வைத்தே ஹக்கீம் போராட்டம் நடாத்திவிடுவார் என்று திகைக்கிறார்கள். தாங்களும் பதவிவிலகத் தயார் என்று கூறியவர்கள் தங்களது அறிக்கைகளை மறுபரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். தேர்தல் ஒன்று வருமாயின் எதை வைத்து முஸ்லீம்கள் முன் தேர்தல் போராட்டம் நடத்துவது என்பதுதான் இப்போதைக்கு இவர்களது கவலை. (இக்கட்டுரை எழுதப்படும் போது இலங்கை விமான சேவைகள் மற்றும் விமான நிறுவனங்களின் தலைவர் எம் எல் ஏ எம் ஹிஸ்புல்லாஹா பதவி விலகியுள்ளார்.)

பொதுக்கட்டமைப்பின் முகவுரையில் சமூகங்களுக்கிடையிலே, இனத்தவர்களுக்கிடையிலே கூட்டுறவை ஏற்படுத்த வேண்டிய தேவை பற்றி கூறப்படுகிறது. ஆனால் வட கிழக்கில் வாழும் தமிழர், சிங்களவர், முஸ்லீம்கள் என்ற சமூகத்தினரை பொதுவாக சமூகங்கள் எனறே குறிப்பிட்டு விட்டு நிர்வாகத்தினரான அரசும் புலிகளும் என்று குறிப்பிடுவதே நிர்வாகப் பங்காளியாக முஸ்லீம்கள் இல்லை என்பதையும் கூட்டுறவு என்பது கொச்சைப்படுத்தப்பட்டு உள்ளது என்பதையும் காட்டுகிறது.

பொதுக் கட்டமைப்பின் பிராந்திய குழுக்கள் கிளிநொச்சியில் இயங்குவதாக தீர்மானம் மேற்கொண்டால்; நிதி, நிர்வாக விடயங்களை கையாளுதல் என்பன எவ்வாறு ஜனநாயக முறையிலே நடைமுறைப்படுத்தப்படும். இதற்கு அப்பால், புலிகள் பெறப்போகும் சர்வதேச அங்கீகாரம் மிக முக்கியமாக வட கிழக்கினை புலிகளின் de facto எனப்படும் கட்டுப்பாட்டு பிரதேச ஆட்சியினை விஸ்தரிக்க வழிசமைக்கிறது. புலிகளின் கட்டுப்பாடற்ற பகுதிக்குள் பொதுக் கட்டமைப்பு என்ற போர்வையில் மேலும் அத்துமீறல்கள் கட்டவிழ்த்து விடப்படும் போது; முஸ்லீம்கள் தங்களது உரிமையை மட்டுமல்ல பாதுகாப்பு குறித்தும் மிகுந்த அக்கறை கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது.

இடைக்கால நிர்வாக அமைப்பொன்றினை இந்திய சமாதான ஒப்பந்தத்தினைத் தொடர்ந்து புலிகள் - இந்திய - இலங்கை அரசுகள் முன்வைத்ததிலும்; இடைக்கால தன்னாட்சி சபை அதிகாரத்தினை கோரிய புலிகள் வரையிலும்; இன்றைய பொதுக் கட்டமைப்பிலும்; புலிகள் நியமிக்கும் அங்கத்தவர்கள் தொகை அதிகமாகவே காணப்படுகிறது. மேலும் வேறு தமிழ் பிரதிநிதிகள் எவரும் பங்கு கொள்ள முடியாததாகவும் அல்லது ஜனநாயகத்துக்கு வாய்ப்பளிக்காததாகவும் உள்ளது. அப்படிப்பட்ட பொதுக் கட்டமைப்பு எவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களின் அபிலாசைகளைப் பற்றிக் கவலைப்படும்.

இதற்கு மேல் பல்வேறுபட்ட நிதிக் குற்றச்சாட்டுகளுக்கு உட்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக அமைப்பின் செயற்பாடுகள் இந்த மீள்கட்டுமானப் பணிகளில் நிதி கையாளுகையில் புலிகளின் முதற் கண்ணாக செயற்படுகின்ற சூழ்நிலையில்; வெளிநாட்டு உதவி நிறுவனங்கள் பல ரிஆர்ஓ வுக்கு எதிராக வைத்த குற்றச்சாட்டுகள் குறித்து புலிகள் மௌனம் காக்கின்ற நிலமையில்; பொதுக் கட்டமைப்பு பணிகளில் ரிஆர்ஓ வின் பங்கு என்ன ? கேள்வியும் எழுகிறது.

எது எப்படி இருப்பினும், எந்த உதவிக்காக புலிகள் ரோக்கியோ மாநாட்டை புறக்கணித்தார்களோ? பேச்சு வார்த்தைகள் தடைப்பட்டனவோ? அதே உதவிகள் இன்று தன்னாட்சி சபைக்கான கோரிக்கையை தள்ளி வைத்துவிட்டு சுனாமிக் கட்டமைப்பு மூலமாக வழங்கப்பட வழிசமைக்கப்பட்டுள்ளது. முஸ்லீம்களின் தன்னாட்சி சபைக்கெதிரான மாற்று யோச னைகள் தமிழர் ஜனநாயக சக்திகளின் வேண்டுதல்கள் யாவும் செவிடன் காதில் ஊதிய சங்குதான். ISGA விற்கான பலமான அத்திவாரம் இடம்பெற்றுள்ளது. வெளிநாட்டு தமிழ் சமூகம் தங்களது தாயகக் கனவுக்கான கட்டுமானமாக இக்கட்டமைப்பை காணுகிறார்கள். ❑

# படைப்புகளினூடாக வாழும் மனித நேயன்



என் செல்வராஜா
நூலகவியலாளர்

## நந்தியின் மறைவும் அவர் படைத்த இலக்கியங்களும்

கடந்த சில மாதங்களுக்குள்ளாக பல ஈழத்து இலக்கிய அறிஞர்களை நாங்கள் இழந்து நிற்கின்றோம். தினகரன் பத்திரிகை ஆசிரியராகவிருந்து பின்னர் கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவராகவிருந்த அமரர் இ.சிவகுருநாதனின் பிரிவுச் செய்தியுடன், தினகரன் முன்னாள் பிரதம ஆசிரியர் ராஜஸ்ரீ காந்தன், முதுபெரும் எழுத்தாளர் சொக்கன், திருமலை தந்த பண்டிதர் இ.வடிவேல், பத்திரிகையாளரும், சமூக சேவையாளருமான எஸ்.எம்.கார்மேகம், மருதமுனை இஸ்மா யில் என்ற முதுபெரும் எழுத்தாளர் மருதூர்க் கொத்தன், வடபுலத்தில் பிறந்து மலையக இலக்கியம் படைத்த புலோலியூர் க. சதாசிவம், மலையக மண் தந்த எழுத்தாளர் ஏ.பி.வி.கோமஸ், செம்பியன் செல்வன் என்று தொடர்ந்த இந்த இழப்புகளின் வரிசையில் அண்மைக்கால நிகழ்வாக யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த பேராசிரியர் நந்தி அவர்களின் பிரிவும் இதயத்தை விம்மியழ வைக்கின்றது.

யாழ் பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் பேராசிரியரும் மூத்த எழுத்தாளரும், சமூக மருத்துவத்துறை நிபுணருமான வைத்திய கலாநிதி எஸ். சிவஞானசுந்தரம் என்ற நந்தி அவர்கள் 4.6.2005ல் காலமானார். 1928 மார்ச் 30ல் பிறந்த நந்தி அவர்கள் இறக்கும் போது அவருக்கு வயது 75.

அமரர் நந்தியின் இளமைக்காலத்தின் பெரும்பகுதி யாழ் கிராமத்திலேயே கழிந்தது. அதனால் அவரது வாழ்வும் பணியும் ஈழத்துக் கிராமிய வாழ்க்கை முறையினையும், கிராமச் சமூகத்தின் கட்டமைப்பினையும் ஆழமாக உள் வாங்கி அதனைத் தன் அறிவியல் பார்வையால் தரிசித்து வெளிப்படுத்தும் போக்கிலேயே அமைந்தது. அவர் படைத்த இலக்கியங்களும் அவ்வாறே. இவர் மருத்துவத் துறையில் தேர்ந்தெடுத்த பிரிவான சமூக மருத்துவத்துறையும், இவரு டைய பண்புக்கும், உணர்வுக்கும், கருத்துக்களுக்கும் பொருத்தமானதுறையாகவே அமைந்துவிட்டது.

தொழில்ரீதியாக, சிங்களக் கிராமங்களிலும், மலையக மண்ணிலும் பின்னாளில் போர்க்காலச் சூழலில் விடாப் பிடியாக யாழ்ப்பாண மண்ணிலும் வாழ்ந்தமையால் இவர் தான் வாழ்ந்த சூழலில் இருந்த மக்களின் எண்ணங் களையும், ஏக்கங்களையும், ஆசாபாசங்களையும் நன்றாக நாடிபிடித்துப் பார்த்து ஆய்ந்துணர்ந்து அவற்றை படைப் பிலக்கியங்களில் பதிந்து வைக்கமுடிந்தது.

நந்தியின் எழுத்துக்களில் எவ்வித சோடனைகளோ, சுற்றிவளைப்புக்களோ இருப்பதில்லை. அர்த்தமுள்ள சொற் களை தேர்ந்தெடுத்து, சிக்கனமாய் கையாளும் போக்கு இவரது எழுத்துக்கள் அனைத்திலும் காணப்படுகின்றது.

1947இல் தனது 19ஆவது வயதில் பட்டப்படிப்பு முன் நிலைக் கல்வி பயின்றுகொண்டிருந்த காலத்திலேயே நந்தி அவர்கள் பத்திரிகைகளினூடாகத் தன்னை இலக்கியவாதி யாக வெளிக்காட்ட ஆரம்பித்திருந்தார். அவரது முதலாவது சிறுகதை "சஞ்சலமும் சந்தோஷமும்". இது 1947இல் வீரகேசரியில் வெளிவந்தது. இதுவரை எண்பதுக்கும் அதிகமான சிறுகதைகளை படைத்துள்ள நந்தி அவர்களின் சிறுகதைகள் ஊர் நம்புமா, கண்களுக்கு அப்பால், நந்தியின் கதைகள், தரிசனம் ஆகிய நான்கு தொகுதிகளாக வெளிவந்திருக்கின்றன. மலைக்கொழுந்து, தங்கச்சியம்மா, நம்பிக்கைகள் என்பன நூலுருவில் வெளிவந்த அவரது நாவல்களாகும்.



நந்தினி என்ற பாத்திரப் படைப்பினை உருவாக்கி, அந்த பாத்திரத்தைத் தனது தங்கையாக உருவகப்படுத்தி பல குழந்தை மருத்துவ நூல்க ளை அவர் வெளியிட்டுள்ளார். இவை இலக்கிய உலகில் மாத்திரமல்ல எம்மவரின் தமிழ் மருத்துவ உலகிலும் வரலாறா னவை. பின்னாளில் பல மருத்துவ நூல்கள் எளியமுறையில் எழுதப்படுவதற்கு நந்தி அவர்கள் வழிகாட்டியாக இருந்துள்ளார்.

பேராசிரியர் நந்தி அவர்களின் இலக்கியப் பிரவேச மணிவிழாவை நினைவுகூரும் வகையில் 1988ம் ஆண்டில் ஈழத்துச் சோமு 'நந்தி நோக்குகள் இருபத்தைந்து' என்ற நூலை பதிப்பித்திருந்தார். இந்த நூலில் நந்தியைப் பற்றிய மனப்பதிவுகளையும் கலை இலக்கியப் பங்களிப்பு பற்றிய கணிப்பீடுகளையும் ஈழத்து எழுத்தாளர்கள் பகிர்ந்து கொண்டுள்ளனர். இந்நூலில் இடம்பெற்ற பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் கட்டுரையில் அவர் "ஈழத்தின் நவீன இலக்கிய வரலாற்றில் நந்தி என்னும் எழுத்தாள னுக்கு ஒரு மதிப்பார்ந்த இடம் உண்டு. நந்தியின் ஆக்கங்கள் இல்லாத ஈழத்துத் தமிழ் நாவலும், ஈழத்துத் தமிழ்ச் சிறுகதையும் நிச்சயமாக வளக்குறைபாடு உடை யனவாகவே இருக்கும்" என்ற குறிப்பிட்டுள்ளார்.

நந்தி அவர்களை நீண்டகாலமாக நான் அறிவேன். மருத்துவபீடத்தில் எனது மூத்த சகோதரர் சிவராஜாவின் துறைத் தலைவராக மாத்திரமின்றி, குடும்ப நண்பராகவும்

தொடர்ச்சி..... .17ம் பக்கம் --->>

சிறுவர் தேசம்

THESAM
SIRUVAR

May 05 / July 05

08

( இடமின்மை காரணமாக பக்கங்கள் குறைக்கப்பட்டுள்ளது. அடுத்த இதழில் வழமையான பக்கங்களுடன் சிறுவர் தேசம் வெளிவரும். )



# A bizarre walk in Sunnyside Quay

*Mukunthan Srikantharajah*

"Excuse me, could you step aside so I could pick up that can?" I said kindly for the third time.

No answer as usual to that no good, meagre street sweeper. I haven't seen a day pass when a person doesn't ignore me. It's the usual thing; they look at me, pass me and look right through me, like I'm a craggy piece of filth.

I remember my mother saying, "Barry, they only bully you because they're jealous of you."

Well that's not the case now is it?

The sun smiled over Sunnyside quay, the same old cars passed at the 9.00 rush hour, same old children skipping to their school and same old lousy pedestrians being lousy. However, there was one difference today which I had never felt from other days. If you know what I mean I feel a bit light headed, kind of floaty you could say.

Anyways, I'll just carry on with my work, as usual, sweeping the rough façade of Kingsley Crescent. As the bristled exterior of my shabby broom scraped against the ground it didn't make that scratchy foghorn noise, its bristles just somehow agreed with the ground today, if you know what I mean.

My eyes just appreciated everything I saw today- like I was enlightened or something. The sun carried on smiling over the quay and glistened over its slender body. The sea glimmered like refined sapphires perched on an emperor's finger. The trees swayed blissfully in the autumn breeze and leaves slumped to the surface. I took a deep long breath and inhaled the fresh autumn splendour. I felt my body fill up with aromatic inner warmth.

As I tilted my head and leant forwards I saw Mrs Marble.

"Mrs Marble, Mrs Marble," I shouted to my good friend

No answer

"Mrs Marble, are you ok?" I shouted in desperation, "Mrs Marble answer me please!" I exclaimed.

She just walked past me motionless. No answer at all. This wasn't the lovely Mrs Marble with the delightful coloured clothes she always wore. She just passed me and ignored me, exactly like the others. Even weirder, she was wearing black, like she was going to a funeral or some sort.

Why was everyone blanking me today? Even Mrs Marble, the kind old lady who was like a mother to me. Could it possibly be true she was ignoring me?

Anyways, not getting to it, I'll just carry on with my reckless pathetic life.

I walked about swiftly. My small steps crunched the foliage of the exterior below, making a crisp tingling clatter. The air around me smelt deliciously fruity. It was probably because of the Fruit Bakery ahead!

Suddenly, I saw something pass me. I squinted my eyes to see if it was true. I could see a man-about 6ft in height, greasy brown hair and a beefy neck, wearing a disguised black cloak. This man had something peculiar about him. Something just stood out, but I couldn't figure out what. Was it his bizarre glow? Was it his masked identity? What was it? I couldn't figure out what!

Then unexpectedly, this man who I had never seen in my miserable life raised his hand and started waving them at me. I felt a bit uneasy but also quite happy because someone noticed me... at last. Anyway, who was he? Why was he looking at me?

As his floaty figure ventured towards me, I could have sworn his body was transparent, like a ghost you could say and the funny thing was that no one noticed him.

"So you going to the meeting today?" he asked me

"What...meeting?"

"Oh...so you haven't found out yet...?" he replied

"I don't know what in Earths name you're talking 'bout bruv..."

And with those words he ran off crazily- well he wasn't running, he looked like he was floating off!

As the sun began to set in Sunnyside quay, I saw its fiery outside enrage the atmosphere next to it. I breathed in the fresh atmospheric air and I felt my body warm up in appreciation to the brilliant scenery.

As night approached, cars passed with headlights as powerful as the suns energy source, hurting my eyes with utter pain. As I walked I could hear the clatter of autumn leaves under my feet.

Red...Amber...Green...and off the cars speeded away with their engines rustling. My legs started throbbing like a boxer and a punch bag. I went to a nearby bench and rested. As I stretched my legs on the bench I stared up into the black sky and pondered a star nearby. This little star lightened the quay below and made me lose into a world of my own. I could feel a sense of appreciation convey my body and tingle the sides. Snap! I got up and felt my aged joints crunch between my bones. I was a loner. I could admit. No one appreciated me, everyone ignored me. That's life I thought...

As I crossed the road, I saw a car speeding down the road like a stampede of hysterical animals. Its bulky tires screeched against the jagged exterior of Kingsley Crescent, the car hustled in all directions and it was coming for me. I thought this was the end for me. Was it? The car hurried towards me insanely. I closed my eyes to be ready for the 'world of wonders'. I could feel my eyes vibrating, getting ready for the moment, the moment of truth. Any second now I thought, any second now. After a few seconds I couldn't bare it, I opened my eyes. The car wasn't in front of me, but it had passed, it was behind me. The car passed me and I didn't even possess a scratch.

No... I thought. The car didn't pass me, or did it pass through me, I thought insanely. All these thoughts flustered through my head. Why was this day so abnormal?

Why today?

I slumped to the floor, my bottom plummeting to the ground. Tears trickled down my cheek, not wanting to let go, hanging on.

As I got up and walked back to my house or some people call it the park bench, I squinted my eyes and strained to see what was on the newspaper. It was a picture of me with my name on it and it read:

TRAGICALLY BARRY RHODES, WAS HIT BY A CAR ONE WEEK AGO, TODAY. ANY ACQUAINTANCES OR FRIENDS OF MR RHODES ARE FREE TO ATTEND A MEMORIAL SERVICE HELD TODAY AT SOUTHSIDE HOTEL, SUNNYSIDE QUAY. ❑

முகுந்தன் சிறீஸ்கந்தராஜா
இவ்விதழுக்கான பரிசைப் பெறுகிறார்.

**Metropolitan Police Service Wants Your Assistance to Help Stop the Violence. Please Phone the Confidential Tamil Hotline.**



ஒப்பிரேசன் என்வர் குழுவினர் தமிழ் இளைஞர் குழுவினர் ஈஸ்ஹாமில் தங்கியிருந்த வீடுகளை முற்றுகையிடத் தயாராவதைப் படத்தில் காணலாம்.

# வல்வெட்டி இளைஞர் இல்பேர்டில் குத்திக் கொலை கொலையாளிகளைத் தேடி பொலிஸ் வலைவிரிப்பு

பிரபாகரன் கிருஷ்ணசாமி (22) என்ற இளைஞர் யூன் 25 நடு இரவில் குத்திக் கொலை செய்யப்பட்டார். வடமராட்சி வல்வெட்டி பகுதியைச் சேர்ந்த இந்த இளைஞர் சம்பவதினத் தன்று இல்பேர்ட் லேன், இல்பேர்டில் உள்ள ஷெல் பெற்றோல் நிலைத்தின் போர்க்கோட்டில் வைத்து குத்தப்பட்டு உள்ளார். இவ்வாண்டு இடம்பெற்ற முதலாவது படுகொலைச் சம்பவம் இதுவாகும். கடந்த 10 மாதங்களில் இடம்பெற்ற இரண்டாவது படுகொலை. கடந்த ஆண்டு ஓகஸ்டில் கிங்ஸ்பறியில் கேதீஸ்வரன் சண்முகதாசன் என்ற இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டது தெரிந்ததே.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது; இல்பேர்ட் லேன் - ஜேர்சி றோட் மூலையில் இருந்த ஷெல் பெற்றோல் லையத்திற்கு வெள்ளி நடுஇரவு 12:04க்கு பொலிசார் அழைக்கப்பட்டனர். போர்கோட்டில் இளைஞர் ஒருவர் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தார். அம்புலன்ஸ் சேர்விசும் அழைக்கப்பட்டு இளைஞர் கிழக்கு இலண்டன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். கொண்டு செல்லப்பட்டு சிறிது நேரத்தில் அவ்விளைஞர் உயிரிழந்தார். உயிரிழந்த இவ்விளைஞர் அவரது நெருங்கிய உறவினர்க ளால் பிரபாகரன் கிருஷ்ணசாமி என அடையாளம் காணப்பட்டார். இவர் கத்திக் குத்தால் ஏற்பட்ட காயத்தால் கொல்லப்பட்டதாக மறுநாள் மேற்கொள்ளப்பட்ட மரண விசாரணையில் உறுதிப்படுத்தப்பட்டது.

ஒக்ஸ்போர்டில் உள்ள பெற்றோல் ஸ்ரேசனில் பணிபுரிந்த பிரபாகரன், உறவினர் ஒருவரின் திருமணத்தில் கலந்து கொள்ள லண்டன் வந்திருந்ததாகவும் அப்போதே இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் தெரியவருகிறது. பெற்றோல் நிலையத் துக்கு தனது நண்பர்களுடன் பிரபாகரன் வந்துள்ளார். வேறு குழு இளைஞர்கள் பிரபாகரனை கத்தியால் குத்த அவருடன் வந்த நண்பர்கள் தப்பியோடினர். இந்த நண்பர்கள் உடனடி யாக தங்களைத் தொடர்புகொள்ளும் படி பொலிசார் கேட்டுக் கொண்டுள்ளனர். பொலிசார் பொது மக்களிடம் இருந்தும் தகவல்களை சேகரித்து வருகின்றனர். மேலும் சம்பவ இடத்தில் இருந்து இருவர் கிரீம் அல்லது வெள்ளை நிறக் காரில் ஜேர்சி றோட்டூடாகச் சென்றுள்ளனர். இவர்களுடனும் பொலிசார் பேச விரும்புவதாகத் தெரிவிக்கின்றனர்.

இப்படுகொலைச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை டிசிஐ நொயல் பெஸ்விக் மேற்கொண்டுள்ளார். "நடுஇரவைத் தாண்டு முன்னரே சுறுசுறுப்பான வீதியில் இளைஞர் ஒருவர் மிக மோசமாகத் தாக்கப்பட்டு உள்ளார். தேவையற்ற, உணர்வுகளற்ற முறையில் 22 வயதேயான இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டு உள்ளார். சாட்சிகள் உடனடியாக பொலிசாரைத் தொடர்பு கொள்ளவும்" என்று வேண்டுகோள் விடுத்துள்ளார் அவ்விசாரணை அதிகாரி.

தந்தை கிருஷ்ணசாமி தலைவர் பிரபாகரன் மீதுள்ள மதிப்பினாலும் விசுவாசத்தினாலும் தனது மகனுக்கும் அவருடைய பெயரையே வைத்ததாக உறவினர் ஒருவர் குறிப்பிட்டார். ஆனால் இலங்கை இனப்பிரச்சினையினூடாக பிறந்து வளர்ந்த பிரபாகரன் அநியாயமான முறையில் உயிரிழந்துள்ளார். பிரபாகரனின் பெற்றோர் தங்கள் மகனது இறுதி நிகழ்வில் கலந்து கொள்ள வருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2000 ஆண்டு முதல் லண்டனில் தமிழ் இளைஞர் குழுக்களுக்குமிடையேயான வன்முறைச் சம்பவங்கள் மிக மோசமடைந்திருந்த நிலையில் அதனை கட்டுப்படுத்த ஸ்கொட்லண்ட் யாட் ஒப்பிரேசன் என்வர் என்ற விசேட பொலிஸ் பிரிவை ஏற்படுத்தியிருந்தது. இதனால் வன்முறைகளை கட்டுப்படுத்த முடிந்ததேயொழிய அவற்றை முற்றாக நிறுத்த முடியவில்லையென ஸ்கொட்லன் யாட் அதிகாரி தேசம் சஞ்சிகைக்குத் தெரிவித்தார். தற்போது வன்முறையில் தொடர்புபட்ட இளைஞர்கள் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு நகர்ந்திருப்பதாகவும் அவ்வதிகாரி தெரிவித்தார்.

**Tamil Hotline : 0800 587 2935**


Low Cost
Accomodations in London
Finchley Rd, Archway, Holloway Rd
Tube station அருகாமையில்
◆ Flats
◆ Studios
◆ Rooms
நூற்றுக்கும் மேற்பட்ட வதிவீடங்கள்
வாடகைக்கு உண்டு.
சில நிமிடத்தில் சென்றடையக் கூடியதான
போக்குவரத்து வசதிகள் நிறைந்த இடம்.
மாது வாடகை £ 400 - £ 600
குறிப்பு : மாத வாடகையுடன் ஒரு மாத வாடகை முற்பணமாக செலுத்த வேண்டும். கவுன்சில் ரக்ஸ் மற்றும் கட்டணங்களை குடி இருப்பாளர்களே செலுத்த வேண்டும். குறைந்தது ஆறு மாதகாலத்துக்கு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட வேண்டும். மாதாந்த வாடகையை வங்கிக் கட்டளை - Standing Order மூலம் செலுத்த வேண்டும். D.S.S ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
Tel \ Fax : 020 8905 0452
Email : tarrin@desilugroup.com
Web : www.deilugroup.com
Tarrin Constantine, Group Finance Director, Desilu Group of Companies